# சங்க நூல்களில் சில உயிரினங்கள்



அறிஞர் பி.எல்.சாமி

# சங்கநூல்களில்
# சில
# உயிரினங்கள்

அறிஞர்

**பி. எல். சாமி**

(ஐ. ஏ. எஸ். ஓய்வு)

**சேகர் பதிப்பகம்**

66, பெரியார் தெரு,

எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078

தொலைபேசி : 48 34 325

முதல் பதிப்பு : டிசம்பர், 1993

**விலை. ரூ. 32.**

அச்சும் அமைப்பும்

அமுதன் அச்சகம்
66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர்.நகர்,
சென்னை - 600 078 போன்: 4834325

# உள்ளே...


பதிப்புரை 5

முகவுரை 9

1 முதலைகள் 17

2 உடும்பு 28

3 ஓந்தி 38

4 கோம்பி 42

5 ஆமை 49

6 பாம்புகள் 57

7 தவளை
8 தேரை
9 நுணல் } 88

10 நண்டு 98

11 இறவு 101

12 நத்தை 103

13 சங்குகள் 108

14 சிப்பி 115

15 பலகறை 117

16 குளிறா? களிறா? 119

17 தேனீ, சிதர் 121

18 தும்பி 129

19 மூதாய் 134

| | | |
|---|---|---|
| 20 | மின்மினி | 138 |
| 21 | ஈயல் | 140 |
| 22 | குளவி | 142 |
| 23 | சிள்வீடு | 149 |
| 24 | எறும்பு | 156 |
| 25 | சிலம்பி | 158 |
| 26 | ஞிமிறு | 161 |
| 27 | சுரும்பு | 164 |
| 28 | வண்டு | 167 |
| 29 | பேன் | 168 |
| 30 | சிறுபஞ்சமூலத்திலும் பழமொழியிலும் ஐந்து பூச்சிகள் | 169 |

# பதிப்புரை

உலக அறிஞர்கள் உச்சிமேல் வைத்து மெச்சிப் போற்றும் செந்தமிழ்ச் செல்வம் சங்கநூல்களே!

தமிழ்மொழியின் பெருமைக்கு மணி முடிகளாகத் திகழ்வன சங்கநூல்களே என்பது முடிவான கருத்து.

நம் நாட்டுப் புலவர்கள் முற்காலத்தில் இயற்கையில் தோய்ந்து, இயற்கையோடு கலந்து, இயற்கை விந்தைகளில் மனம் ஒன்றி வாழ்ந்துள்ளனர். இதனை அவர்களது பழம் பாடல்களே நமக்கு விளக்குகின்றன.

பிற்காலத்தில் நாம், வெளிநாட்டோர் பலர்க்கும் அடிமைப்பட்டுக் கிடந்தோம். நம் பழந்தமிழ் அறிவுத் தடங்களைத் தவற விட்டோம்; பிறமொழிகளின் பிடியில் சிக்குண்டோம். ஆண்ட மொழிகளே நமக்குச் சுமைகளாயின. சொந்தமொழியைச் சுவைக்கவும் அறியவும் போற்றவும் முயற்சியற்றவர்களானோம்.

எனவே, வாழ்வியல் பயனும் இன்பமும் தருகின்ற பழந்தமிழ் நூல்களைப் பாராது இருந்தோம்.

மேலைநாட்டுக் கல்விகற்றோர் 'தமிழில் என்ன இருக்கிறது' என்று பேசலாயினர். அறுபதாண்டுகளாக ஓரளவு மாறுதல் தோன்றியுள்ளது.

அறிவியல் உணர்வு தமிழரிடம் இருந்ததைப் பழந்தமிழ் நூல்கள் உறுதிப்படுத்தும். தமிழ்மட்டும் கற்றோர், குறிப்பாக மேல்நாட்டு அறிவியல் நெறிகளைக் காணாதிருந்தனர். ஓரளவு கண்டோரும் சங்கநூல்களின் அறிவியல் செய்திகளை இக் கால அறிவியல் முடிவுகளுடன் ஒப்பிட்டுக் காட்ட முனைந்தாரிலர்.

தமிழின், தமிழரின், தமிழ்நாட்டின் நற்பேறாக வாய்த்தவர் அறிஞர் பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்களாவர். அவர்கள் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாய்ச் சங்கநூல்களில் காணும் அறிவியல் செய்திகளை நன்கு எடுத்துப் புலப்படுத்தி வருகிறார்கள்.

ஆங்கிலப் புலமையாளரின் புதிய கண்டுபிடிப்புகளோடு நம் முன்னோரின் கருத்துகளை ஒப்பிட்டுத், தமிழின், தமிழரின் அறிவியல் அறிவுத்திறனை எடுத்துக்காட்டி வருகிறார். அவர்தம் பெரும்பணி வேறு எவரும் செய்யாதது. முற்றாகத் தம்மை இப் பணியில் ஈடுபடுத்திக் கொண்ட அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அவர்தம் பேருழைப்பை, அயராத ஆர்வமிகு ஆய்வை நமது கல்வியுலகம் நன்கு உணர்ந்து பாராட்ட முன்வராதது பெருங்குறையேயாகும்.

எனினும் தமிழ் வரலாற்றில் அவர் தொண்டு என்றும் போற்றப் பெறும் என்பது திண்ணம்.

அவரது பல நூல்களை மகிழ்வோடு வெளியிட்டுப் பெருமை கொள்கிறது எமது பதிப்பகம். அத் தொடர்ச்சியில் இந்நூலும் வருகிறது.

அறிஞர் பெருந்தகை பி. எல். சாமி அவர்களுக்கு எமது அன்பார்ந்த நன்றியுரியது.

தமிழ் மக்கள் இத்தகைய நூல்களின் பயன் கண்டு இன்பங்கொள்ள வேண்டி இத் தொகுப்பை வெளியிடுகிறோம்.

வெள்ளையாம்பட்டு **சுந்தரம்**
சேகர் பதிப்பகம்.



# மு க வு ரை

இந்த நூல், நான் முன்னர் சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக வாயிலாக வெளியிட்ட **சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், புள்ளின விளக்கம்** ஆகிய இரு நூல் களுக்குப் பிறகு, சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள பிற உயிரினங்களைப் பற்றி எழுதிய கடைசி நூலாகும்.

இந்த முகவுரையில் பொதுப் பார்வையாகச் சில செய்திகள் விளக்கப்படும்.

**உயிரி** என்ற சொல் ஆங்கிலத்தில் பயன்படுத்தும் Animal என்ற சொல்லின் நேர்மொழி பெயர்ப்பாகும்.

ஆங்கிலச்சொல் உயிருடையது, மூச்சுடையது என்ற பொருள்கள் தருவதாகும். ஆங்கிலத்தில் விலங்குகள், பறவைகள் போன்ற உயிரிகளை Fauna என்றும் தாவரங் களை Flora என்றும் லத்தின் மொழிவாயிலாக அழைப்பர்.

தமிழில் பிற்காலக் கல்வெட்டுகளில் மரவிடை மாவிடை என்றழைப்பதைக் காணலாம். அவைகளை Flora and Fauna என்று ஆங்கிலத்தில் அழைப்பர். இக் கல் வெட்டு வழக்கையே அறிவியல் வழக்காகத் தமிழில் புழங்கவிடுவது நல்லது.

சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள உயிரிகளில் குட்டி போட்டுப் பால் தரும் உயிரிகளையும் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் பறவைகளைப்பற்றியும் நான் சைசி நூ. கழக வாயிலாக இரண்டு நூல்களை எழுதி வெளி யிட்டுள்ளேன். அவ்வகையில் இந்த நூல் பிற உயிரி களைப் பற்றி எழுதி முடிக்கும் நூலாக உள்ளது.

இன்றைய கேரளம் உள்பட இருந்த சங்ககாலத் தமிழகத்தில், இன்றுள்ள விலங்குகளில நான்கு கொம்பு டைய மான், எலிமான் அல்லது கேழமான், காட்டாடு ஆகியவையே சங்க நூல்களில் கூறப்படவில்லை. மற்ற எல்லா விலங்குகளும் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவ்வளவு விலங்குகள் வடமொழியில் எந்த நூல்களிலும் கூறப்படவில்லை.

இன்று அரிதாகக் காணப்படும் மீன்நாய், பூனைபோல உருவத்திலும் நிறத்திலும் உள்ள ஒரு வகைப் புலி போன்ற புலி சங்ககாலத் தமிழகத்தில் இருந்திருக்கவேண்டும்.

நான் புதுவை மாநிலத்தைச் சேர்ந்த கேரளத்தில் உள்ள மாஹி திட்டுப் பகுதியில் ஆட்சித் தலைவராக இருந்தபோது பூனைபோன்ற புலியைக் கேரளத்து வானந் தொட்டிக்காட்டில் துப்பாக்கியால் சுட்டிருக்கின்றேன்.

நான் புதுவை மாநில ஆட்சித்தலைவராக இருந்த போது 1980ஆம் ஆண்டு வீராணம் ஏரியில் வலசை வரும் பறவைகளை ஆராயச் சென்றபோது, முதியவர்களிடம் அங்கிருந்த விலங்குகளைப்பற்றி உசாவினேன். அப்போது மீன்நாய் (Fishing cat) 25 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந் திருந்ததாகக் கூறினார்கள். இன்று அந்த விலங்கு முற்றி லும் அழிந்துவிட்டது.

சங்க நூல்களில் இடங்கர் என்ற முதலை கூறப் பட்டுள்ளது. இதைச் சாணாகமுதலை என்று வீராணத்து

மூதியவர் கூறினார். இது 25 ஆண்டுகளுக்கு முன் இருந்ததாகவும் இப்போது அழிந்துவிட்டது என்றும் கூறினார்.

முதலைகளில் தமிழகத்தில் வாழும் இரண்டுவகை முதலைகளும் கூறப்பட்டுள்ளன. ஆனால் வடநாட்டு ஆறுகளில் வாழ்ந்த கராம்என்ற முதலையும் கூறப்பட்டுள்ளது. இந்த முதலை பண்டைத் தமிழக மன்னர்களால் வடநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு அகழிகளில் வளர்க்கப்பட்டது.

முதலை என்று அழைக்கப்பட்ட கடற்கரை முதலையைத் தவிர, இடங்கரோ, கராமோ ஆட்கொல்லி அல்ல.

கராம் பார்ப்பதற்கு பயங்கரமாகக் காணப்படுமே தவிர, ஆட்கொல்லி இல்லை. பெண்முதலை தன் குட்டிகளைத் தின்றுவிடுவதை ஐங்குறுநூறு கூறியுள்ளது. இந்தச் செய்தியை ஜபல்பூர் உயிர்க்காட்சி சாலையில் சங்கப் புலவர்கள் அன்று கண்டசெய்தி இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் முட்டையிட்டு குட்டிப்போடும் ஊர்வனவும், நிலம் நீரில் வாழும் தவளை போன்ற உயிரிகளும், நன்னீரில் வாழும் நத்தைகளும், நன்னீரிலும் கடல்நீரிலும் வாழும் கணுக்காலிகள் வகுப்பைச் சார்ந்த நண்டும் இறாவும் விளக்கப்பட்டுள்ளன

நான் முன்னர் எழுதிய சங்கநூல்களில் மீன்கள் என்ற நூலில் மீனினத்தைச் சேரா இறாவைப்பற்றிக் கூறியிருப்பினும் இந்நூலில் கடலிறாவில் இறாவகையும் நன்னீர் இறாவில் ஒருவகை பற்றியும் விளக்கியுள்ளேன். இந்த இறாக்களே இன்று பெரும்பாலும் உண்ணப்படுகின்றன.

கடலில் கிடைக்கும் சங்கு வகைகளும் முத்துச்சிப்பியும் விளக்கப்பட்டுள்ளன. நத்தையோட்டுக் கிளிஞ்சில் வகைகளில் பறையலகு எனப்படும் பலகறை (சோழி) அரிதாக

ஒரே ஓர் இடத்தில் 'மதுரைக் காஞ்சி'யில் கூறப் பட்டுள்ளது. இந்தக் கிளிஞ்சில் பண்டைக் காலத்திலிருந்து கி. பி. 17ஆம் நூற்றாண்டுவரை சில்லறை நாணயமாகப் பயன்பட்டதாகத் தெரிகின்றது.

அலகு என்ற சொல் அளவைப் பெயராகச் சங்ககாலத் திலிருந்து அண்மைக்காலம்வரை வழங்கிருப்பதாகத் தெரி கின்றது. இச்சொல் கேரளப்பழங்குடிகளிடையே தென்னைமரத்தில் தேங்காய் பறிக்கும்போது தேங்காய் களின் எண்ணிக்கையை அளக்கப் பயன்பட்டுள்ளது.

தாலி என்ற ஓரோட்டுக் கிளிஞ்சிலைப்பற்றியும் ஒரே ஓர் அரிய குறிப்பு ஐங்குறுநூற்றில் கிடைக்கின்றது.

தாலி என்ற சொல் திருமணமாகும் மகளிர் அணியும் மங்கல நாணினைக் குறித்துச் சங்கநூல்களில் வழங்க வில்லை. ஆனால், மீனவர் பயன்படுத்தும் வலையில் கோக்கும் ஒருவகைக் கிளிஞ்சிலுக்கு வழங்கியுள்ளது. அண்மைக்காலம் வரை மீனவர்கள் அவ்வாறு ஒரு வகைக் கிளிஞ்சிலை வலையில் கோக்கிறதை நான் கண்டுள்ளேன். இந்த இரண்டு கிளிஞ்சில்கள் பற்றிய அரிய குறிப்பு அண்மையில்தான் நான் கண்டுகொண்டேன்.

சங்க நூற்களில் அரசரா என்றும் நீல நாகம் என்றும் இராஜநாகம் அழைக்கப்பட்டுள்ளது. இந்த நாகம் அடர்ந்த காடுகளில் மரக்கிளையில் கூடு கட்டி முட்டை யிட்டு வாழும். பாம்புகளில் கூடு கட்டி முட்டையிடும் பாம்பு இது ஒன்றுதான். இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலப் படைகள், அடர்ந்த பர்மியக் காடுகளில் யானை மீது சென்றபோது தழைகளைப் பறித்த யானையின் தும்பிக்கையை, கூட்டில் வாழும் இராஜநாகம் கடித்ததால் பல யானைகள் இறந்தன என்று போர் வரலாற்றுச் செய்திகளிலிருந்து தெரியவருகின்றது.

இந்த நாகம் மேற்குத் தொடர்ச்சிமலையில் அடர்ந்த காடுகளில் காணப்படுகின்றது. இதை மலையாள மொழி யில் **கருங்குறிஞ்சி** என்ற அழகிய தமிழ்ப்பெயரால் அழைப் பதைக் கேட்டிருக்கின்றேன். குறிஞ்சியில் வாழ்வதால் கருங்குறிஞ்சி என்றழைப்பது மிகவும் பொருத்தமே. இதை **இராஜ வெம்பாலை** என்றும் மலையாளத்தில் அழைப்பர்.

மலையாளத்தில் பலவகைப் பாம்புகளுக்கும் 'தூய திராவிட மொழிப்பெயர்கள் உண்டு. தமிழில் அந்த அளவு சேகரிக்கப்படவில்லை.

பறவைகளைப்பற்றித் தமிழில் பறவைப்பெயர்கள் ஓரளவு சேகரிக்கப்பட்டு வனத்துறையால் வெளியிடப் பட்டுள்ளது. இராசேந்திரன் என்ற பாளையங்கோட்டை புனிதயோவான் கல்லூரிப் பேராசிரியர் பாம்புகளைப் பற்றி அரியதொரு நூலை எழுதினார். அதில் திருநெல் வேலி மாவட்டத்தில் வழங்கும் அரிய பாம்புப் பெயர் களைத் தந்திருக்கிறார்.

தமிழக அரசு இத்தகைய முறையில் விலங்குகள், பறவைகள், ஊர்வன, பூச்சிகள் பற்றிய பெயர்களை இது வரை சேகரித்து வெளியிடவில்லை. இது கவனித்துச் செய்தல்வேண்டும்.

சிரீலங்காவில் பறவைகள்பற்றி அழகிய தமிழ்நூலை நிறப்படத்துடன் உயரிய தாளில் முன்னரே வெளி யிட்டுள்ளனர். தமிழக அரசு இத்துறையில் ஒன்றுமே இது வரை செய்ததில்லை.

இந்நூலில் பூச்சிகளில் 12 வகை பற்றி விளக்கி யுள்ளேன். உலகிலேயே பூச்சிகள்தான் மிகுதியாக உள்ளன. பெரும்பாலான பூச்சிகள்பற்றி இன்றும் அறிவியல் அறிஞர்கள் ஆராயவில்லை.

இந்த முகவுரையில் எப்படி விலங்கியல் அறிவு தமிழ் நூல்களின் காலத்தைக் கணிக்க உதவுகின்றது என்று விளக்க விரும்புகின்றேன்.

தொல்காப்பிய பொருளதிகாரத்தில்—சங்க நூல்களில் கூறப்படாத இரண்டு விலங்குகள் கூறப்பட்டுள்ளன.

கீரிப்பிள்ளையை பொருளதிகார மரபியலில் மூங்கா என்று அழைத்துள்ளதைக் காணலாம். இந்த மூங்கா சங்க நூல்களில் கூறப்படவில்லை.

தொல்காப்பிய பொருளதிகாரம் சங்கநூல்களுக்கு முந்தியதாயின் சங்கநூல்களில் ஏன் இந்தக் கீரிப்பிள்ளை சொல்லப்படவில்லை? ஆதலின் பொருளதிகாரம் சங்க நூல்களுக்குப் பிறபட்டது என்பது தெரிகிறது.

அவ்வாறு எழுத்ததிகாரத்தையோ சொல்லதிகாரத்தையோ கூற முடியாது.

சங்கநூல்களில் எளிதாகக் கிராமங்களில் வீட்டுமனைக் கருகில்வாழ்ந்து வீட்டுக்கோழிகளைப் பிடித்துக்கொல்லும் சாதாரண கீரிப்பிள்ளை கூறப்படவேயில்லை. ஆனால், மிக அழகான — நீலகிரி மலையில் வாழும் மலைக்கீரி, மலைபடுகடாத்தில், செங்கண்மா மலையில் இருந்தாகக் கூறப்பட்டுள்ளது. இதை 'அரவுக்குறும்பெறிந்த தீர்வை' என்று கூறியுள்ளனர்.

அரவைத்தீர்ப்பதால் தீர்வை என்றழைத்தது பொருத்தமே. இத்தகைய மலைக் கீரியைக் கூறியிருக்கும்போது ஏன் சாதாரண கீரியைக் கூறவில்லை? சங்ககாலத்தில் இந்தச் சாதாரண கீரி தமிழகத்தில் வாழவில்லை என்று தெரிகின்றது.

மூங்கா என்ற சொல் மணிமேகலையில் ஊமையைக் குறித்து வழங்கியுள்ளது.

மலையாள மொழியில் வெள்ளிமூங்கா என்ற சொல் கூகையைக் குறித்து வழங்குகின்றது.

மூங்கா என்ற சொல் மராத்தி மொழி வழியாக மங்கூஸ் என்று ஆங்கிலத்தில் புகுந்துள்ளது.

பொருளதிகாரத்தில் 'வெவ்வாய் வெருகினை பூசை யென்றலும்' என்று மரபியலில் கூறப்பட்டுள்ளது.

காட்டுப்பூனையாகிய வெருகு சங்கநூல்களில் கூறப்பட்ட விலங்குதான். வீட்டுப்பூனையைக் காட்டுப்பூனையின் பெயரால் அழைக்கலாம் என்று பொருளதிகாரம் கூறியுள்ளது.

வீட்டுப் பூனையைக் குறித்த பூனை யென்ற சொல் சங்க நூல்களில் எங்குமே கூறப்படவேயில்லை. ஆதலின் சங்ககாலத்தில் வீடுகளில் பூனை வளர்க்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. வீடுகளில் சங்ககாலத்தில் நாயையும் கிளியையும் வளர்த்தது கூறப்பட்டுள்ளது.

தற்கால நூலான ஆசாரக்கோவையில்தான் பூசை யென்று பூனை அழைக்கப்பட்டுள்ளது.

மலையாள மொழியில் இக்காலத்தில் **பூச்சா** என்று வீட்டுப் பூனையை அழைப்பர்.

காட்டுப்பூனையும் வீட்டுப்பூனையும் வெவ்வேறு இனம் என்று கூறுவர். வீட்டுப்பூனையைக் கூறினதால் சங்க நூல்களுக்குப் பிற்பட்டதுதான் பொருளதிகாரம் என்பது புலனாகிறது.

அரப்பா அகழ்வாராய்ச்சியிலும், அதற்குப் பிறகு கி. மு 1500 ஆண்டுகளுக்குமுற்பட்ட செப்புநாகரிகக் கால அகழ்வாராய்ச்சியிலும், தமிழ்நாட்டுப் பெருங் கற்கால அகழ்வாராய்ச்சியிலும் வீட்டுப்பூனை எலும்புகளே கிடைக்காதது சங்கச் செய்தியோடு ஒத்துள்ளது. அப்படியிருக்க, பொருளதிகாரம் சங்கநூல்களுக்கு முந்தியது என்று எப்படிச் சொல்ல முடியும்?

சிலப்பதிகாரத்தில் வடமொழிப் பஞ்சதந்திர வாக்கியம் கூறப்பட்டுள்ளது. இதில் கீரிப்பிள்ளை தமனிய

நகுலம் என்றழைக்கப்பட்ட செங்கீரி வடநாட்டுக்குரியது. இது, சிலப்பதிகாரம் சங்ககாலத்தை ஒட்டிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரியதல்ல என்பதைக் காட்டு கின்றது. அறிஞர் தெ. பொ. மீ. அவர்கள்கூட இலக்கண உருபுகளை வைத்து ஆராய்ந்து பொருளதிகாரம் பிற் பட்டதுதான் என்று தமிழ்மொழி வரலாற்று நூலில் கூறியுள்ளார்.

இவ்வாறு தமிழ்நூல்களில் வழங்கப்பட்ட தாவர, விலங்குப் பெயர்களை அறிவியல் அறிவோடு ஆராய்ந் தால் காலத்தைக் கணிக்க உதவும் என்பது விளங்கும்.

விலங்கு நூல், தாவர நூல் ஒரு துல்லிய அறிவியல் துறை (Exact sciences) என்று கூறுவர். அவை காலத்தை அறுதியிட்டுக் கணிக்க உதவுமளவு வரலாறோ இலக்கி யமோ, மொழிநூலோ உதவாது என்று கூறலாம்.

இந்த நூலைக் குறுகிய காலத்தில் வெளியிட்ட வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எனது பல நூல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

இத்தகைய அறிவுபூர்வமான அறிவியல் ஆராய்ச்சி நிறைந்த 'கனமான' நூல்களை வாங்குவோர் அதிகம் இல்லை. இருப்பினும் ஊதியம் கருதாது தரமான நூல் களை வெளியிடும் சுந்தரம் அவர்களைப் போற்றுகிறேன்.

அறிவுசார்ந்த தமிழுலகம் இந்த நூலையும் வரவேற் கும் என்று கருதுகிறேன்.

**பி. எல். சாமி.**

# முதலைகள்

**முதலை இனங்கள்**

இந்தியாவில் மூன்று முதலை இனங்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டுவகை முதலைகள் தமிழ்நாட்டிலும் தென்னாட்டிலும் காணப்படுகின்றன ஒருவகை முதலை வடநாட்டில் மட்டும் காணப்படுன்றது.

**சங்க நூல்களில் முதலை**

இந்த மூன்று வகை முதலைகளைப் பற்றியும் சங்க நூல்களில் செய்திகள் காணப்படுவது கவனிக்கத் தக்க தாகும்.

இந்தமூன்று வகைகளையும் முதலை, இடங்கர், கராம் என்று சங்க நூல்களில் அழைத்தனர்.*

**'ஒடுங்கிருங்குட்டத் தருஞ்சுழி வழங்குங்**
**கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்'**

— குறிஞ்சிப்பாட்டு 256 - 257

---

* (Estuaarine Crocodile, Marsh Crocodile and Gharial)

'கராஅங் கலித்த குண்டுகண் அகழி
இடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மன் மூதூர்'

— புறம் 37

குறிஞ்சிப் பாட்டிலும் புறநானூற்றுப் பாடலிலும் முதலையும் இடங்கரும் கராமும் கூறப்பட்டுள்ளன. பேராசிரியர், தொல்காப்பியமரபியலில் முதலையும் இடங் கரும் கராமும் தம்மின் வேறெனப்படும் என்பதற்கு இந்தப் புறநானூற்றுப் பாடல் வரிகளையே காட்டியுள்ளார். ஆதலின், முதலையும், இடங்கரும், கராமும் வேற்றுமைப் படுத்தப்பட்டுச் சங்க காலத்திலேயே உணரப்பட்டன என்பது தெளிவாகின்றது.

சங்க காலத்தில் இந்த மூன்று வகை முதலைகளையும் கோட்டை அகழிகளில் பாதுகாப்புக்காக வளர்த்தனர் என்று தெரிகின்றது. முதலையை Crocodilus porosus (Estuarine Crocodile) என்றும், இடங்கரை Crocodilus palustris (Marsh Crocodile) என்றும், கராத்தை Gavialis gangetics என்றும் அழைப்பர்.

இம் மூன்று முதலை இனங்களும் அறிவியற்படி எவை என்று தெரிந்து கொள்ளலாம்.

**முதலை**

முதலையைப் பற்றியே சங்க நூல்களில் கூடுதலான செய்திகள் வருகின்றன.

'.................. கொடுங்கழிப்
பாசடை நெய்தல் பனிநீர்ச் சேர்ப்பன்
நாம முதலை நடுங்குபகை அஞ்சான்'

— நற்றிணை 287

'இரைதேர்ந்து இவருங் கொடுந்தாள் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்அகழ் கிடங்கின்'

— மலைபடுகடாம் 90 - 91

'கோள்வல் முதலைய குண்டுகண் அகழி'

— பதிற்றுப்பத்து 53 - 8

'கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும்
இருங்கழி யிட்டுச்சுரம் நீந்தி யிரவின்'

— அகம். 80

'முதலைப் போத்து முழுமீ னாரும்
தண்டுறை யூரன் தேர்எம்'

— ஐங்குறுநூறு 5

## கொடிய முதலை

முதலை, இடங்கர், கராம் ஆகிய மூன்று வகைகளில் முதலையே கொடியது. அது வாழும் துறைகளில் ஆடுமாடு களையும் ஆட்களையும் இழுத்துச் சென்று கொன்று தின்றுவிடும். ஆதலின் 'நாம முதலை' என்றும், 'சுட்டுநர் பனிக்கும் சூருடை முதலை' என்றும் சங்க நூல்களில் இதன் கொடுமைத் தன்மையைக் கூறினர். சுட்டிக்காட்டுப வர்கள் கூட நடுங்கிக் கொண்டே காட்டும் கொடிய தன்மையுடைய முதலை என்று கூறப்பட்டுள்ளது. 'கடுமுரண் முதலை' என்றும் கூறப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் இயற்கைச் சூழ்நிலை இன்று போல அழிக்கப்படவில்லை யாதலால் ஆறுகள் கலக்கும் கடற் கரைச் சூழலிலும் ஆறுகளிலும் முதலைகள் நிறைய இருந்திருக்க வேண்டும். ஆதலின் முதலைகளுக்கு மக்கள் மிகவும் அஞ்சினர்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கேரளக் கடற் கரையில் முதலைகள் நிறைய இருந்தன. முதலைகளைத் தோலுக்காக வேட்டையாடி அழித்துவிட்டனர்.

கழிகளிலும், கடற்கரைச் சூழலிலும், ஆற்றுத் துறைகளிலும் முதலை வாழ்வதாகச் சங்க நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. முதலை முழு மீனைத் தின்பதாகக் கூறப்பட்டுள்ளது. முதலையின் முக்கிய உணவு மீனே. பிற விலங்குகளையும் முதலை கொன்று உண்ணும்; ஆட்கொல்லியாகவும் மாறும். முதலைக்கு வளைந்த கால்கள் இருப்பதாகச் சங்க நூல்கள் கூறும்.

**'நீர்வாழ் முதலை யாவித் தன்ன**
**ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து'**

— அகம். 301

முதலைகள் கரையில் வந்து வாயைத் திறந்து கொண்டு வெயில் காய்வது வழக்கமாகும். நீர்வாழ் முதலை ஆலித்துக் கிடப்பது, சிலர் உரை கூறியதுபோல் கொட்டாவி விடுவதன்று.

ஆலித்து என்ற சொல் வாயை அங்காத்தலைக் குறித்ததைக் காணலாம். இச்சொல் இன்றும் பேச்சுவழக்கில் உள்ளது குழந்தைகளுடன் பேசும் மொழியில் 'ஆக் காட்டு', 'ஆப்போட்டு' என்ற வழக்குகள் இருப்பது சங்க நூல் மரபாகத் தெரிகின்றது.

## முதலையின் தோல்

முதலையின் மேல்தோல் மேடும் பள்ளமுமாக இருக்கும். குண்டுகள் துளைக்க முடியாதபடி அவ்வளவு உறுதியானது. முதலைகளைக் கொன்று தோலைப் பதனிட்டு அழகான பெட்டிகளும் பைகளும் செய்வர்.

முதலையின் தோலை அழகான உவமையால் அகநானூறு விளக்கியுள்ளது.

**'இருங்கழி முதலை மேஎந்தோல் அன்ன**
**கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினை'**

— அகம். 3

முதலையின் மேல்தோல் ஓமை மரத்தின் கரிய அடி மரத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. காடுகளின் பாதுகாவலராகப் பணி புரிவோர் காட்டில் உள்ள மரங்களின் அடிமரத்தைப் பார்த்ததும் இன்ன மரமென்று தெரிந்து கொள்வர். முதலையின் மேல் தோல் போன்ற அடிமரம் உடைய மூன்றுவகை மரங்கள் காட்டில் இருப்பதாகக் கண்டுள்ளனர். அகநானூறு கூறுவது அத்தகையதொரு மரத்தையே யாகும்.

## ஓமை மரம்

ஓமை மரத்தைப் பற்றிப் பல பாடல்கள் சங்க நூல்களில் உள்ளன. அந்தப் பாடல்களில் ஓமை மரம் Ougenia delbregoides என்ற மரமே என்று தெளிவாகின்றது. இந்த மரம் நீரற்ற வறட்சியான இடங்களில் வளர்வதாகவும் இம் மரத்திற்கு முடமான அடி மரம் இருப்பதாகவும் சங்க நூல்கள் கூறுகின்றன.

யானைகள் இந்த ஓமை மரத்தை உதைப்பதாலும் குத்துவதாலும் இதன் அடிமரம் புண்படுவதாகவும் அது யானையின் புண்பட்டக் கால்போலத் தோன்றுவதாகவும் கூறப்பட்டுள்ளது. செடிநூலாரும் இது போன்ற செய்தியைக் கூறியுள்ளனர்.

இந்த அடிமரத்தில், மேலாக வெட்டுப் போட்டால் சிவப்பாகப் பிசின் வரும். இப் பிசின் இரத்தம் போலவே இருக்கும். வெண்மையாகக் காணப்படும் உள்மரத்தின் மேல் இச் சிவப்புப் பிசின் வழிவது புண்போலவே இருக்கும் என்று அறிஞர் கூறியுள்ளனர். சங்க நூல்களில் புண் தாள், போழ்புண் என்று கூறியிருப்பதைக் காணலாம்.

இந்த மரத்தின் அடிமரம் கரியதாகவும் முதலையின் மேல்தோல் போலவும் இருப்பதாகக் கூறியது போலவே செடிநூலாரும் எழுதியுள்ளனர். இந்த ஓமை மரத்திற்கு

'Crocodile skin bark' *இருப்பதாகச் செடிநூலார் கூறியதையே அகநானூறு சொல்லியிருப்பதைக் காணும் போது வியப்படையாமல் இருக்க முடியாது. இந்த மரத்தை Ougenia Oojainensis என்று செடிநூலில் அழைப்பர்.

## தண்ணீரில் முதலை

முதலை நீரிலிருக்கும்போது பிடித்த விலங்கையோ ஆளையோ விடாது பற்றி இழுத்துச் செல்லும். 'கோள் வல் முதலைய குண்டுகண் அகழி' என்று பதிற்றுப்பத்து (53 - 8) கூறுகின்றது. கொண்டதை வலிமையாகப் பற்றும் முதலை என்று கூறியுள்ளதையே இன்று 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்ற பழமொழி விளக்குகின்றது.

**'நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற'**

—குறள். 495

நீருக்குள் முதலைக்கு வலிமை மிகுதி என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். முதலையின் நீண்ட வாய்க்கு நீரில் ஈர்ப்புச் சக்தி மிகுதி என்று கண்டுள்ளனர். அண்மையில் செய்த ஆராய்ச்சியில் ஒரு டன் எடையுள்ள முதலைக்கு 13 டன் ஈர்ப்புச் சக்தி இருப்பதாகக் கண்டுள்ளனர்.

இந்தியாவில் வாழும் மூன்றுவகை முதலை இனங்களில் ஆற்றிலும் ஆற்றுத் துறைகளிலும் வாழும் முதலையே ஆட்களைக் கொன்று தின்னும் கொடிய

---

*Crocodile skin dark fissured horizonatally and vertically forming rectangular plates as in Ougenia etc. (Manual of Indian Forest Botany - N. L. Ot)

தன்மையுடையது என்று கண்டுள்ளனர். மற்ற இருவகை முதலை இனங்களும் ஆட்களைக் கொல்லா என்பது ஆராய்ந்ததில் தெளிவாகியுள்ளது.

## 'வழி வழக்கறுக்க' முதலைகள்

கொண்டதை வலிதாகப் பற்றும் ஆண் முதலை, துறையின் வழியில் யாரும் செல்லாதபடி ஆள் வழங்குதலை அறுக்கும் என்றுகுறுந்தொகை கூறியுள்ளதைக் காணலாம். இது மிகவும் உண்மையான செய்தியேயாகும்.

> **''கொடுங்கான் முதலைக் கோள்வல் ஏற்றை**
> **வழிவழக்கு அறுக்குங் கானலம் பெருந்துறை'**
>
> —குறுந்தொகை 324

மேற்குக் கடற்கரையில் கட்ச் முதலிய தீவுப் பகுதிகளில் இன்று அரபு நாடுகளிலிருந்து வெளிநாட்டுப் பொருள்களின் கடத்தல் நடக்கின்றது இதைத் தடுக்க அரசு விரைவுப் படகுகளைப் பயன்படுத்தியும் மிகுதியும் முடியவில்லை.

சேறும் சகதியுமாக இருந்த இந்தக் கரைகளில் பண்டைக் காலத்தில் முதலைகள் நிறைய வாழ்ந்தன. அவற்றைக் கொன்று ஒழித்தனர். ஆதலின் இன்று யாரும் அச்சமின்றி இக்கரைகளைக் கடக்க அணுக முடிகின்றது.

இக் கரைகளில் வெளி நாடுகளிலிருந்து வரும் பொருள்களின் 'வழி வழக்கறுக்க' முதலைகளை வளர்க்கலாம் என்று ஓர் அறிஞர் கருத்துக் கூறியுள்ளார்.

மனிதர் முதலைக்கு மிகவும் பயப்படுவர். சங்ககாலத்தில் நகரங்களைப் பாதுகாக்க வைத்திருந்த அகழிகளில்முதலைகளை இட்டு வளர்த்தனர் கோட்டைச் சுவர்களில் ஏறுவதற்கு முன் அகழிகளைக் கடக்க வேண்டும். முதலைகளின் வாயில் தப்பியவர்களே கோட்டைச் சுவர்களில் ஏற முடியும்.

## பிள்ளை விழுங்கி!

ஐங்குறுநூற்றில் முதலையைப்பற்றி ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. முதலை தன்னுடைய பிள்ளையையே தின்னுமென்பதே இச் செய்தியாகும். சங்கநூல் கூறிய இச் செய்தி உண்மையானது என்று அறியும்போது வியப்படைகிறோம்.

ஜெய்ப்பூரில் உள்ள உயிர்க் காட்சிச்சாலையில் முதல் தடவையாக முட்டைகளிலிருந்து முதலைக் குட்டிகள் பிறந்தன. உடனே முதலையின் குட்டிகளைத் தாயினிடமிருந்து அப்புறப்படுத்தினர். ஏனென்றால் தாயே தன்னுடைய பிள்ளைகளைத் தின்றுவிடும் என்று கண்டறிந்த அனுபவத்தால் தாயோடு குட்டிகளை விடவில்லை.

(Even though the mother cares much for her babies, there have been cases of the parents devouring their brood. The phenomenon of cannibalism has been found to be common in the case of Crocodiles).

முதலையே முதலைகளை உண்பதை அறிஞர்கள் கண்டுள்ளனர். உலகத்திலேயே இந்தக் காட்சிச் சாலையிலேதான் முதலைகள் இயற்கையில் முட்டையிட்டுக் குட்டிகள் பொரித்தன என்பதைக் கவனிக்க வேண்டும்.

**'தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு**
**வெண்பூம் பொய்கைத் தவனூ ரென்ப அதனால்'**

—ஐங்குறுநூறு 41

**'தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு**
**பிள்ளை தின்னு முதலைத் தவனூர்'**

—ஐங்குறுநூறு 24

ஐங்குறுநூற்றில் சொல்லப்பட்ட இச்செய்தி இயற்கையில் உண்மையாகக் கண்ட அறிவியற்செய்தி யென்று உணரும் போது வியப்படையாமல் இருக்க முடியாது.

முதலை ஆறுகளிலும், கடற்கரையில் ஆறுகள் கூடு மிடங்களில் கடலிலும், கழிகளிலும் காணப்படுகின்றன. கடலில் நீண்ட தொலைவு செல்லக்கூடிய முதலை இனம் இதுவேயாகும். மற்ற முதலையினங்கள் நன்னீரில் வாழ் வனவாகும்.

## இடங்கர்

முதலையினத்தில் இடங்கரும் கராமும் எவையென்று அறியவேண்டும்.

இடங்கர் என்றொரு முதலையினமும் சங்கநூல்களில் கூறப்பட்டுள்ளது. இடங்கர் என்ற முதலை வகை கானாற்றில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. முதலையும் இடங்கரும் கராமும் அகழிகளில் இருந்தன என்றும் புறநானூறு கூறியுள்ளது.

**'உரவுக்களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி'**

*—மலைபடுகடாம் வரி 211*

**'கன்றிய கராமும் இடங்கரும் மீன்களும்'**

*—மணிமேகலை 28—18*

**'நீர்நிறங் கரப்ப ஊழ்உறு புதிர்ந்து**
**பூமலர் கமுலிய கடுவரற் கான்வாற்றுக்**
**கரா அந் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி**
**மராஅ யானை மதந்தப வொற்றி**
**உராஅ வீர்க்கு முட்குவரு நீத்தங்'**

*—அகம். 18*

'கருங்கற் கான்யாற்று அருஞ்சுழி வழங்கும்
கரா அம் பேணாய் இரவரின்'

—நன்றிணை 292

'தாட்படு சின்னீர்க் களிறுஅட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கரா அத் தன்ன என்னை'

—புறம். 194

'கரா அங் கலித்த கண்ணகன் பொய்கை'

—பட்டினப்பாலை, வரி 242

இடங்கர் என்பது முதலையினும் சிறிய முதலை வகை யாகும். இது தென்னாட்டிலும் வடநாட்டிலும் காணப் படுகின்றது; பெரும்பாலும் சிறிய ஆறுகளிலும் குளங் களிலும் சதுப்பு நிலங்களிலும் காணப்படும். இது மீன் களையும் சிறிய பறவைகளையும் விலங்குகளையும் தின்று வாழும். இடங்கர் 12அடி வளரும்; கழிமுகத்தில் வாழும் கொடிய முதலை 30அடி வரை வளரும். இடங்கர் என்ற முதலை கொடுமை வாய்ந்ததன்று. இதனை மலையாளத் தில் மண்ணன் என்றழைக்கின்றனர். தமிழில் சாணாக முதலை என்றழைப்பர்.

## கராம் —கங்கை முதலை

கராம் என்பது வடநாட்டில் கங்கை ஆற்றில் காணப் படும் ஒருவகை முதலை யென்று தெரிகின்றது. இந்த முதலையைக் 'கரியால்' (Gharial) என்று வடநாட்டில் அழைக்கின்றனர்.

இதனுடைய ஆணிற்கு நீண்ட கூர்ந்த வாயின் மேல் பூண் போன்ற பாகம் உள்ளது. இதைக் 'கரம்' என்று அழைப்பர். இதனால் இது கரியால் என்று பெயர் பெற்றது. தமிழில் வரும் கராம் என்ற பெயரும் வட நாட்டுப் பெயரிலிருந்து வந்ததாகத் தெரிகின்றது. இந்த முதலை வகையைத் தமிழ் நாட்டில் இயற்கையில் காண முடியாது.

சங்ககலாத்தில் இந்த வகை முதலையை வடநாட்டி லிருந்து கொண்டு வந்து அகழிகளில் விட்டு வளர்த்திருக்க லாம்; பின்னர் சங்க காலத்திலேயே ஆறுகளிலும் பரவி யிருக்கலாம். இந்த முதலையைக் கண்டு வடநாட்டிலும் மக்கள் பெரிதும் அஞ்சுவர். இந்தக் கராம் என்ற முதலை மீன்களையே தின்னுமென்றும், மற்ற விலங்குகளையும் மனிதரையும் அணுகாது என்றும் ஆராய்ச்சியாளர் கண்டு கூறியுள்ளனர்.

## புராணக் கதை

இடங்கர், கராம் ஆகியவை பற்றி ஒரு செய்தி சங்க நூல்களில் வருகின்றது யானையைப் பிடித்து முதலை இழுப்பதாகக் கூறிய செய்தி ஆராய்தற்குரியது. இடங்கர், களிற்றை இழுத்து மறைக்கும் என்றும், களிற்றைக் கொன்று விழ்த்தி ஈர்த்துச் செல்லும் என்றும் சொல்லப் பட்டுள்ளது. இச் செய்தி கற்பனையானது என்று கருத வேண்டும்.

ஆண் யானையை இழுத்துச் சென்று கொல்லும் சக்தி முதலைக்கில்லை. இச்செய்தி கராத்திற்குப் புறநானூற்றி லும் அகநானூற்றிலும் கூறப்பட்டிருப்பதால் இது வட நாட்டிலிருந்து வந்த புராணச் செய்தியாக இருக்கலாம். இந்தக் கற்பனைச் செய்தியையே பிற்காலத்தில் முதலை இழுத்த யானை, ஆதிமூலமே என்று கதறித் தப்பித்த புராணக் கதையாக மாறியிருக்கலாம்.

மலைப்பாம்பு,யானையை விழுங்கினதாகச் சங்க நூல் களில் வரும் கற்பனைச் செய்தியைப் போன்றதே இதுவும். கராமும், இடங்கரும் மனிதரைக் கொல்லும் சக்தி உடையன அல்ல. முதலை யொன்றே மனிதரைக் கொல்லும். ஆனால் இந்த முதலையும் யானையைக் கொல்லக் கூடியதன்று. அகழியில் இருந்த முதலை இரவில் விளக்கு வெளிச்சத்தில் கண்ட மனிதரின் நிழலையும் கவ்வப் பார்க்கும் என்று புறநானூற்றுப் பாடல் கூறு வதைக் காணலாம்.

# உடும்பு

உடும்பு பல்லியினத்தைச் சேர்ந்த ஊர்வன இனத்தைச் சார்ந்ததாகும். ஆங்கிலத்தில் Reptiles என்றழைப்பர் உடும்பைப் பற்றி அறிய செய்திகளைச் சங்க நூல்களில் கூறியுள்ளனர்.

'பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்
உடும்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றி'

— பெரும்பாணாற்றுப்படை 199, 200

'அரக்குவிரித் தன்ன செந்நில மருங்கிற்
பரல்தவழ் உடும்பின் கொடுந்தாள் ஏற்றை'

— மலைபடுகடாம் 507, 508

'பார்பக வீழ்ந்த வேருடை விழுக்கோட்டு
உடும்புஅடைந்தன்ன நெடும்பொரி விளவின்'

— நற்றிணை 24

'உடும்பு கொரீஇ வரிநுணல் அகழ்ந்து
நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி
எல்லுமுயல் எறிந்த வேட்டுவன் அம்சுவல்'

— நற்றிணை 29

'உடும்பு உரித் தன்ன என்பெழு மருங்கில்
கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது'

— புறநானூறு 68

'வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழல் தலைப் புகர்க்கலை உருட்டி உரல்தலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத்து உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்'

— புறம். 152

..........................
முளவுமாத் தொலைச்சிய முழுச்சொல் ஆடவர்
உடும்புஇழு தறுத்த கொடுங்காழ்ப் படலை
சீறின் முன்றில் கூறுசெய் திடுமார்
கொள்ளி வைத்த கொழு நிண நாற்றம்
மறுகுடன் கமழு மதுகை மன்றத்து
அலந்தலை யிரத்தி அலங்குபடு நீழற்'

— புறம். 325

'வேட்டச் சிறாஅர் சேட்புலம் படராது
படமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை
யாணர் நல்லவை பாணரொ டொராங்கு
வருவிருந் தயரும் விருப்பினள் கிழவனும்'

— புறநானூறு 326

'வேட்டக் குடிதொறுங் கூட்டு......
.................. உடும்பு செய்

பாணி நெடுந்தேர் வல்லரோடு ஊரா'

— புறநானூறு 333

## நல்ல உவமை

பெரும்பாணாற்றுப்படையில், 'உடும்பினது முகத்தை யொத்த பெருங் கொழுமறைய' என்று கூறப்பட்டுள்ளது.

உடும்பினது முகம் கூரியதாக இருக்கும். அதுபோலக் கலப்பையின் பெருங் கொழு இருந்ததாகக் கூறியது சரியே யாகும். உடும்பின் தலைப் பாகத்தை (Nostril about midway between eye and end of muzzle which is high and (arched 'arched' என்று சொல்லப் படுவதே ஏர்க்கொழுவின் உருவத்தைக் காட்டுகிறது.

சூழ்நிலையைப் பொறுத்தமட்டில் அரக்கு விரித்தன்ன நிலத்தில் காணப்பட்டதாகக் கூறியதும் சரியே. இதை நான் கண்கூடாகக் கண்டிருக்கின்றேன்.

நற்றிணை உடும்பின் உடலைப்பற்றிக் கூறிய உவமை அரிய உவமை.

> 'நிலம் பிளவு படுமாறு இறங்கிய வேரும் பெரிய கிளைகளும், அடியில் உடும்பு செறிந்தாற் போன்ற பொரிந்த செதில்களுமுடைய நெடிய விளாமரத்தின்'

என்று கூறியது அரிய செய்தி. விளாமரத்தின் பட்டை பொரிந்து காணப்படும். அது போன்றே உடும்பின் தோலும் பொரியாகக் காணப்படும். (Colour speckled with black on variable ground, Jellowish or brownish) Brownish ground என்பதையே அரக்கு விரித்தன்ன நிலத்தில் காணப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. விளவின் பொரிந்த பட்டையும் நிறத்திலும் உருவத்திலும்... உடும்பின் தோல் போன்றே இருக்கும்.

## பெயர் பொருத்தம்

உடும்பு என்ற பெயரே அதன் உடல் அமைப்பின் பெயரால் வந்தது. கொங்கு நாட்டில் ஓணானை 'உடக்கான்' என்ற பெயரால் அழைக்கின்றனர். ஒடுங்கிய உடல் உள்ளதால் உடக்கான் என்று ஓணானும் உடும்பும்

அழைக்கப்படுகின்றன, அறிவியலில் Body compressed and Keeled என்று சொல்வதைக் கவனிக்க வேண்டும். இந்த அறிவியல் விளக்கத்திலிருந்து உடும்பு என்ற பெயர் எவ்வளவு பொருத்தமாகச் சூட்டப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

உடும்பை உரித்த பிறகு பட்டினியால் மார்பெலும்பு தெரியும் மனித உடல்போலத் தோன்றியதாகக் கூறியது உண்மையே.

உடும்பின் உடலில் கொழுப்பு நிறைய உண்டு. புறநானூறு அடிக்குறிப்பில், உடும்பினது நிணத்தை,

'உடும்பின் விழுக்கு நிணம்' என்றும்
'அறுத்த உடும்பிழுதை யென்க'

என்றும் கூறியிருப்பதையும் காணலாம். உடும்பின் விழுக்கு நிணம் ஒடுங்காய் —அஃதாவது ஒடுவங்காயைப் போல இருந்ததைப் புறநானூறு கூறினதை உ. வே. சாமிநாதையர் குறிப்பிட வில்லை. ஒடுமரத்தைப்பற்றித் தொல்காப்பியரே 'ஒடு மரக் கிளவி' (தொல். உயிர். சூத.60) என்று கூறியுள்ளார்.

இந்த ஒடு மரத்தை இன்றும் கொங்கு நாட்டில் வேலியாகப் பயன் படுத்துகின்றனர். ஒடு மரம் எளிதில் நீர் குறைந்த இடத்திலும் நன்கு வளரும். ஒடுவங்காய் ஓசையுடன் வெடிக்கும். ஒடு மரத்தை அறிவியலில் cleistanthus collinus என்றழைப்பர்.

## உணவு ஆயிற்று

உடும்பை உண்பதற்காகச் சங்க காலத்தில் வேட்டையாடி இருக்கின்றனர். 'உடும்பு கொரீ இ' வேட்டுவன் செய்த வேட்டையை நற்றிணை (59) கூறியுள்ளது. யானையையும் சிறுத்தைப் புலியையும், புள்ளி மானையும்,

காட்டுப் பன்றியையும் தாழ்வான புற்றில் இருந்த உடும்பையும் கொன்ற வல்வில் ஓரியைபபற்றிப் புறநானூறு கூறியுள்ளது.

உடும்பைச் சங்ககாலத்தில் உண்டதைப் பற்றிப் புறநானூறு 321, 325 ஆம் பாடல்கள் கூறியுள்ளன. உடும்பினது நிணத்தை முற்றத்தில் கூறுசெய்து கொடுப்பதைப் பற்றிப் புறநானூறு கூறியுள்ளது. இப்பொழுதும் சிற்றூர்களில் ஆடு முதலிய விலங்குகளை வெட்டி உண்ணும்போது 'கூறு போடுதல்' வழக்கமாக உள்ளது.

புறநானூறு 326ஆவது பாட்டில் விழுங்குவதற்குரிய நிணத்தைத் தயிர்க்கூழில் பெய்து உண்டது பற்றிக்கூறப் பட்டுள்ளது.

வேட்டுவர் முதலில் உடும்புத் தோலால் செய்த கைச் சரடு கூறப்பட்டுள்ளது. உடும்பின் தோல் பாம்பின் தோல் போன்று அழகானது. பொரிகளையுடைய உடும்பின் தோலைப் பாடம் பண்ணி முதலையின் தோலைப் போல வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தது அண்மைக் காலம் வரை வழக்கமாக இருந்தது.

உடும்பின் இறைச்சியைச் சங்க காலத்தில் வேட்டுவர், பாணர் போன்ற இனத்தினர் விருபபி உண்டனர். இக் காலத்தில் சில சாதியினர் உடும்பை விரும்பி உண் கின்றனர். உடும்பின் இறைச்சியைச் சிறந்ததாகக் கருது கின்றனர். இதைப் பழமொழி நானூறு கூறுவது வியப்பாக உள்ளது.

'கள்ளி யகிலும் கருக்காக்கைச் சொல்லும் போல்
எள்ளற்க யார்வாயின் நல்லுரையைத் - தெள்ளிதின்
ஆர்க்கும் அருவி மலைநாட! நாய் கொண்டால்
பார்ப்பாரும் தின்பர் உடும்பு. —பழமொழி 36

உடும்பின் புலால் மிக்ச்சிறந்த சுவையுடையது என்பது கருதி நாய் கவ்வியதானாலும் பார்ப்பாரும் உடும்பைத் தின்பர் என்று பழமொழி நானூறு கூறுகின்றது.

## ஒரு வழக்கம்

வடமொழியில் உள்ள மதநூல்களில் 'உச்சிஸ்தா' என்ற கொள்கை கூறப்பட்டுள்ளது, வீடப்பட்டது என்ற பொருளாகும். ஒன்று முத்தமிடுவது. மற்றொன்று வேட்டையாகு நாய் கொண்டுவரும் விலங்கை உணவாக வேட்டையாடி நாய் கொண்டுவரும் விலங்கை உணவாக உண்ணலாம் என்பதாகும். இதைப்பற்றிக் குச்சிபிடி நாட்டியத்தில் மிகச் சிறந்த பெண்மணியான யாமினி கிருஷ்ணமூர்த்தி இந்து நாளிதழில் எழுதிய கடிதத்தை அப்படியே வெளியிடுகிறேன்:

நாய் வேட்டையாடிக் கௌவியதை உண்ணலாம் என்ற ஒரு கருத்து வடமொழியில் உள்ள இந்து சாத்திரங்களில் இருந்திருக்கிறது. அதைய நாலடியாரில் பார்ப்படிரும் நாய் கொண்டால் உடும்பைத் தின்பர் என்று கூறிப்பட்டு கீழானவர் வாயில் பிறந்ததே ஆயினும் நல்லுரையாயின் இகழாது நிற்க என்பதற்கு உவமையாக 'நாய் கொண்டால் பார்ப்பாரும் தின்பர் :உடும்பு' என்று கூறப்பட்டுள்ளது.

## ஒரு விளக்கம்

உடும்பு 'கொரீஇ' என்ற வழக்கைப்பற்றிப் பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் விளக்கிய உரை அருமையானது:

'காதலியலார் பகல் பொழுதெல்லாம் சூழ ஆடை பரப்பி நின்று கலைத்த வெளி வந்த உடும்பை ஈட்டியாலே குத்தி மண்ணிலே முழுகி

மறைந்து கிடக்கும் வரிகளையுடைய நுணலையை மண்வெட்டியாலே பறித்தெடுத்து நெடுகிய கோடுகளையுடைய புற்றுக்களை வெட்டிப், புகை மூட்டியை வைத்து வெளிவந்த ஈயலைத் தாழி யிலே பெய்துகொண்டு, வளைதடியால் முயலை எறிந்து பற்றிய வேட்டுவன், இரவில் அழகிய தோளிலே சுமந்து வந்து, பலவேறு வகையாகிய அப் பண்டங்களைப் பொதிந்து மூடையுடனே ஏனையகருவிகளையும் மனையகத்துப் போகட்டு மறந்து, ஆங்கு மிகுதியாகப் பருகிய கள்ளின் இனிய மயக்கத்தாலே செருக்குண்டு கிடவா நிற்கும் வன்புலத்ததாகில் காடு சூழ்ந்த காடு'

என்று கூறிய உரை நுண்ணிதான இயற்கை உரை யாகும்.

உடும்பு, நுணல் என்ற தவளை, ஈசல், முயல் ஆகிய வற்றை இயற்கையில் காலையிலும், மாலையிலுந்தான் வெளிவருவதைக் காணலாம்.

பகற்பொழுதில் வெளிவராது. விடியற்காலை, மாலைப்பொழுதில்தான் புற்றிலிருந்து வெளிவரும்.

அதனால் வேட்டுவன் உடும்பை ஈட்டியினாலேயே குத்தினான். மண்ணில் மூழ்கி மறைந்து கிடந்த வரிகளை யுடைய தவளையை மண்வெட்டியாலே பறித்தெடுத்தான். நெடுகிய கோடுகளையுடைய புற்றுக்களை வெட்டிப் புகை மூட்டியை வைத்து வெளிவந்த ஈயலைத் தாழியிலே பெய்தான். வளைதடியாலே காட்டு முயலை எறிந்து எல்லாவற்றையும் மூட்டையில் கொண்டுவந்தான். வேட்டுவன் ஒவ்வொன்றையும் எப்படிப் பிடிப்பது என்பதை அறிந்திருந்தான். உடும்பை ஈட்டியால் குத்திப் பிடிக்கும் பழக்கம் இப்பொழுதும் உள்ளது. ஆனால் வலையில் பிடிப்பது இப்பொழுது பின்பற்றப்படும்

பெரும்பாலான பழக்கமாகும். 'கொருவுதல் — குற்றுதல் குத்துதலென்று வழங்குகின்றது' என்று நாராயணசாமி ஐயர் எழுதியிருக்கின்றார். உடும்புக்குத் தோல் கெட்டியானதால் 'குத்தி' என்று கூறியது பொருத்தமே. வரி நுணல் அகழ்ந்து கொண்டதைக் கூறியிருப்பதால் தவளையையும் உணவுக்காக வேட்டுவன் பறித்தெடுக்கிறான். (இக்காலத்தில் இந்தியாவிலிருந்து பச்சைத் தவளையின் கால் பிரெஞ்சு நாட்டிற்கு மிக ஏற்றுமதியாகிறது.)

உடும்பைப் பிடிப்பதற்கு ஒரு வழி இருந்தது. 'ஆடை சூழவ்ரித்துக் கலைக்கப்பட்ட உடும்பு ஆடைமேல் ஓடினால் அதன் வளைந்த உகிர் துகிலிலே சிக்கிக்கொண்டு விழுமாதலின் பற்றுதல் எளிதாதல் பொருட்டு' என்று கூறியதும் சரியே. உடும்பிற்குக் கூரிய உகிர் உள்ளதால் ஆடையில் உகிர் பதிந்து மாட்டிக் கொள்வதும் இயற்கையே.

'ஈயல் பிடிப்பது கோடுகளை ஒழுங்கு பெறச் சிதைத்து மேலே விழலால், மூடிச் சேற்றைப் பூசி ஒரு துளைவைத்து அதில் புகை மூட்டியை வைத்து ஊதுவதனால் உள்ளிருந்த ஈயல வெளிவரும். அங்கே வேறொரு புழை செய்து புகை போகும் வழியுண்டாக்கி அதில் ஒரு தாழியை வைத்திருந்தால் வந்த ஈயலெல்லாம் தாழியிலே படியுமென்றதாகும்' என்று கூறிய உரை அரிய உரையாகும்.

ஏனெனில், இதுபோன்று புகை மூட்டி ஈயலைப் பிடித்து அதன் உடலை வறுத்து அரிசிப் பொரியொடு கலந்துண்ணும் சில சாதியினர் வழக்கத்தை மாணவனாக இருக்கும்போது நான் கண்டிருக்கின்றேன்.

## சமணரும் பார்ப்பனரும்

'நாய் கொண்டும் உடும்பைப் பார்ப்பாரும் தின்பர்' என்று நாலடியார் கூறியுள்ளது. நாலடியாரைச் சமண முனிவர்கள் இயற்றினர் என்பது தெரிந்தது. சமணர் களிடையே வருண தர்மம் வெறுக்கப்பட்டது. சமணர் பார்ப்பனீயத்தை வெறுத்தனர்.

பிற்காலத்தில் புலால் உண்ணாக் கொள்கையைக் கொண்ட ஆரியர்கள், வேத காலத்தில் புலால் உண்டு வந்தனர். அதனால்தான் 'பார்ப்பாரும் தின்பர் உடும்பு' என்று நாலடியார் கூறிற்று.

உடும்பின் புலால் மிகச் சுவையுடையது என்பதாலும் நாய் கொண்டு வந்ததாலும் உண்டனர் என்று கருத வேண்டியுள்ளது.

நாயினுடைய நாக்கு Antiseptic என்று சொல்வார்கள். ஆதலின் அது கவ்விய பறவையையோ, விலங்கையோ தின்றால் மனிதனுக்கு ஊறு செய்வதில்லை என்பர்.

## பெயர் வழக்கு

யாப்பருங்கலக்காரிகை விருத்தியில் 'உடும்பன்' என்ற தலைவன் பெயர் கூறப்பட்டுள்ளது. இன்றும் ஆனைமலை யில் 'உடும்பன் சோலை' என்ற காடு உள்ளது.

## பொருந்தா வழக்கு

உடும்பினைக் கோட்டைச் சுவர்களில் ஏறவிட்டு அதன் இடுப்பில் கயிற்றைக் கட்டி அதைப் பிடித்துக் கொண்டு கோட்டையின்மேல் போர் வீரர் ஏறுவர் என்ற நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கை அடிப்படையாக 'கோர்ப்பாடே' (Gorpade) என்ற மராத்தியப் போர்

வீரர் குடும்ப இனத்தினரும் பெயர் சூட்டிக்கொள்கிறார்கள்.

ஆனால், அறிவியல்படி அதில் உண்மையேயில்லை. உடும்பிற்கும், பல்லியைப்போலச் சுவரில் ஏறப் பிடிப்பு உண்டு. ஆனால் போர் வீரர்கள் கோட்டைச் சுவரை உடும்பின் பிடியால் ஏறும் அளவு சக்தியற்றது. 'உடும்புப் பிடி' என்ற வழக்கு இந்த நம்பிக்கையால் வந்தது.

உடும்பை ஆங்கிலத்தில் Large Land - Monitor என்று அழைப்பர்.

அதன் அறிவியல் பெயர்: Varanus bengalensis.



# 3 ஓந்தி

'வேனில் ஓதிப் பாடுநடை வழலை
வரிமரல் நுகும்பின் வாடி அவண்'

நற்றிணை 92

'வேனில் ஓதி நிறம்பெயர் முதுபோத்துப்
பாண்யாழ் கடைய வாங்கிப் பாங்கர்
நெடுநிலை யாஅம் ஏறுந்தொழில'

நற்றிணை 186

'வேதின வெரிநி ஓதி முதுபோத்து
ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்'

குறுந்தொகை 140

'வைவால் ஓதி மைஅணல் ஏய்ப்பத்
தாதுஉறு குவளை போதுபிணி அவிழ'

அகம். 125

## ஓதி

சங்க நூல்களில் ஓந்தியை ஓதி என்றழைத்தனர். கன்னடத்தில் 'வோதி என்றழைப்பது இதுசார்பாகக் கவனிக்கத்தக்கதாகும். தற்காலத்தில் ஓணான் என்றழைக்கின்றனர்.

நற்றிணையில் இரு பாடல்களில் 'வேனில் ஓதி' என்றே அழைக்கப்படுகின்றது.

ஓணான் வெயிலை நன்கு தாங்கக்கூடியது. வறட்சியான சூழ்நிலையில் காணக்கூடியது. நற்றிணையில் (182) நிறம்பெயர்வதாகக் கூறப்பட்டுள்ளது கவனிக்கத் தக்கதாகும்.

## நிறமாற்றம்

இணை சேரும் காலத்தில் ஆண் ஓந்தியன் தலை, தோள், முன்கால்கள் கருஞ்செம்மையாகமாறும் இதன் காரணமாகவே 'நிறம் பெயர் முழுவோத்து' என்று நற்றிணை கூறியுள்ளது ஆங்கிலத்திலும் இதன் காரணமாக ஓணானுக்கு Blood sucker என்ற பெயர் வழங்குகின்றது.

ஆண் ஓணானின் முதுகுப்புறத்தில் பெரிய செதிள்கள் மேல் நோக்கியும் விண்நோக்கியும் இருக்கும் என்று அறிவியலார் கூறுவர். Darsal scales large, equal sized, keeled and directed backwards and upwards.)

ஆண் ஓணானின் முதுகுச்செதிள்களை இரம்பத்திற்கு ஒப்பிட்டுக் குறுந்தொகை கூறியுள்ளது. குறுந்தொகையில் ஆண் ஓணான் புட்கொளப்பொருந்துவதாகக் கூறியதைக் கவனிக்க வேண்டும்.

## தலை அசைத்தல்

ஆண் ஓணான் இணை சேரும் காலத்தில் பெண் ஓணான் பார்க்கும்படித் தலையை உயர்த்தியும் தாழ்த்தியும காட்டும். அதைச் சங்க காலத்தில் ஒரு சகுனம் காட்டுவதாகக் கொண்டனர்.

நபிநாயகம் மெக்காவிலிருந்து மெதினாவிற்கு ஓடிய போது ஓணான் தன் செய்கையால் அவரைக் காட்டிக் கொடுத்ததாக முகம்மதியர் நம்புகின்றனர்.

'The males display in the form of 'press up' and a solemn nodding of the head acts both as CourtshiP depending on on the sex of the animal it is directed at)

ஆண் ஓணான் தலையை உயர்த்துவதும் தாழ்த்துவதும் பெண் ஓணானைக் கவர்வதற்காகவும் மற்ற ஆண் ஓணான்களைப் பயமுறுத்துவதற்காகவும் செய்யப்படுகின்றது என்று அறிவியலார் கூறுவர்.

## நீலமும் கருமையும்

அகனானூறு [125] நீலநிறக் குவளையின் தாதுபோல் கருமையாக 'அணல்' இருந்ததாகக் கூறியுள்ளது.

ஆண் ஓணானின் தொண்டைக்கடியில் இணைசேரும் காலத்தில் கருமை நிறம் தோன்றுவதாக அறிவியலார் கூறுவர். இதையே குவளையின் நீலநிறத்தாதுவுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. சங்க நூல்களில் நீலமும் கருமையும் ஒன்றாகவே கருதப்பட்டன.

## உரை வேற்றுமை

நற்றிணையில் [92] 'வேனில் ஓதிப்பாடு நடை வழலை' என்பதில் ஔவை துரைசாமிப்பிள்ளை வழலையை ஓந்தியின் ஆண் என்று கொண்டார். ஆனால் பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் வழலை ஒருவகைப் பாம்பு என்றுகொண்டார். பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் கூறிய உரையே பொருத்தமானதாகும்.

ஓந்தியின் ஆணைப் போத்து என்றேசங்கப்பாடல்கள் கூறுகின்றன. வழலை என்று கூறவில்லை.

வழலை பாம்பையே குறிக்கும். பாடுநடை வழலை என்பதால் ஓசையிட்டுச் செல்லும் வழலைப்பாம்பைக் குறித்ததாகும்.

அத்தகைய பாம்பு சுருட்டை விரியனே யாகும். இதுதான் வேனிலைத் தாங்கக்கூடியது. இதை ஆங்கிலத்தில் Side winder என்றழைப்பர். அறிவியலில் Echis earminator என்றழைப்பர்.

## உவமை நயம்

ஒந்தியைத் தின்னச் சென்ற சுருட்டைப்பாம்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஓணான் வரிமரல் நுகும்பு போலக் காணப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த உவமையும் பொருத்தமாகும்.

ஓணானின் பக்க வாட்டமாக ஒடுங்கிக் (Laterally compressed body) காணப்படும். இதன் காரணமாகக் கோவை மாவட்டத்தில் ஓணானை 'உடக்கான்' என்றழைக்கின்றனர்.

மரல் நுகும்பு (குருத்து) பக்க வாட்டமாக ஒடுங்கிக் காணப்படும். ஆதலால் உவமை பொருத்தமானதே. ஓணானை ஆங்கிலத்தில் Common garden lizard அல்லது Blooksuker என்றும் அறிவியலில் Colotes versicolar என்றும் அழைப்பர்.



# கோம்பி

தமிழிலக்கியத்தில் கோம்பி என்றபெயர் பல்லி யினத்தைச் சேர்ந்த பச்சோந்தியின் பெயராக வழங்குகின்றது.

சங்கஇலக்கியத்தில் ஓந்தியைப்பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. ஆனால் பச்சோந்தியைப் பற்றித் தனியாகக் கூறவில்லை.

பெருங்கதைநூலில்தான் முதலில் 'கோம்பி' என்ற பெயர் பச்சோந்தியைக் குறித்து வழங்கியுள்ளது. திருக்கோவையாரிலும் கோம்பியைப் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

## கண்டேன் பயந்தேன்!

பச்சோந்தியைப்பிடித்து அதன் தன்மைகளை நான் ஆராய்ந்துள்ளேன். நான் முதன் முதலில் பச்சோந்தியைத் திருப்பூரில் நொய்யலாற்றங் கரையில் இருந்த அடர்ந்த பசுமை மிகுந்த வேலிப் புதர்களில் கண்டேன். முதலில் அதன் தோற்றத்தையும் சீற்றத்தையும் கண்டு நானே பயந்தேன்.

## நிறம் மாறும் விந்தை!

ஓந்திகளில் சிலவற்றிற்குச் சூழ்நிலைக்கேற்ப உடல் நிறத்தை மாற்றுந் தன்மை இயற்கையில் உள்ளது

ஆனால், ஓந்தியிலும் வேறான பச்சோந்திக்கும் சூழ் நிலைக்கேற்ப உடல் நிறத்தை மாற்றும் தன்மை சிறப்பாக உள்ளது.

பசுமையான சூழ்நிலையில் வாழ்வதால் பொதுவாகப் பச்சை நிறமாகவே பச்சோந்தி காணப்படும். பச்சை நிறத்தைச் சூழ்நிலைக்கேற்ப மாற்றி வேற்று நிறங்களையும் காட்டும். சமயத்திற்கேற்பக் கொள்கைகளையோ நடவடிக்கைகளையோ மாற்றிக்கொள்பவனைப் 'பச்சோந்தி' என்றழைக்கும் ஆங்கில வழக்குத் தமிழிலும் புகுந்துள்ளது.

பச்சோந்தியை ஆய்வுக்கூடத்தில் சீண்டிவிட்டபோது சினங்கொண்டு சீறியது. மெய்சிலிர்த்து உடல் முழுவதும் கறுப்பாகிப் பயமுறுத்தியது, உடல் மேற்பகுதி இரம்பம் போல் சிலிர்த்து அச்சுறுத்தியதைக் கண்டேன்.

'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள்' என்று தொல்காப்பியம் (தொல். உரி. 74) கூறுவதைக் கவனிக்க வேண்டும்

பச்சோந்தியைப் போல் மிக்க ஒலியெடுத்துச் சீறும் சிற்றுயிரை நான் எனது பட்டறிவில் கண்டதில்லை.

## செம்போத்து

ஆனால் பறவைகளில் செம்போத்து என்ற பறவை சீறி ஒலியெழுப்புவதைக் கண்டுள்ளேன். நான் மாகியில் ஆட்சித்தலைவராக இருந்தபோது, ஓர் ஆள், மாமரத்தின் மேல் ஏறி இரவில் ஒரு செம்போத்தைப் பிடித்து என்னிடம் காட்டினான். அதை ஓர் அறையில் வைத்திருந்து விடியற் காலையில் விடுவிக்க அருகில் நெருங்கியபோது அந்தச் செம்போத்து சீறிப் பயமுறுத்துவதைக் கண்டேன்.

செம்போத்தைக் கேரளத்தில் மந்திர தந்திரத் தன்மையுடைய பறவையென்று கருதுவதால், அதைக் கொன்று

உண்பதில்லை. தமிழ்நாட்டில் செம்போத்தை நுரையீரல் நோய்களைப் போக்கும் மருந்தாகும் உணவென்று கருதிக் கொன்று பெரும்பாலும் அழித்துவிட்டனர்.

சங்ககாலத்தில் செம்போத்தைப் பற்றித் தனியாகக் குறிப்பிட வில்லை ஆனால், களவழி நாற்பதில் 'குக்கில்' (5) என்று செம்போத்தைப்பற்றித் தெளிவாகக் குறிப் பிடப்பட்டுள்ளது.

## பச்சோந்தியின் தன்மை

பச்சோந்தியின் மற்றோர் அரிய தன்மை அதன் நாக்கின் செயலாகும். நீண்ட நாக்கைச் சடுதியில் நீட்டிப் பூச்சிகளைப்பிடிக்கும். இப்பச்சோந்தியின் பாங்குஇயற்கை உலகில் அரிதாகக் காணப்படுவதாகும்.

தடித்த பசை மிகுந்த நாக்கின் நுனியில் பூச்சிகளை ஒட்ட வைத்துப் பிடித்து நாக்கை மடித்து வாய்க்குள் தள்ளும் போக்கு அரிய காட்சியாகும்.

பச்சோந்திக்கு நீண்டதும் வளைந்ததும்சுற்றி மடிந்தது மான வால் உண்டு. இந்த வாலைக் கண்டு பயப்படுவதும் இயற்கையே.

**'வரிநிறக் கோம்பி வால் இழிப்பு வெரீஇ**
**எரிமலர் இலவத்து இருஞ்சினை யிருந்த**
**அலந்த மஞ்ஞை யாமலி கூவப்**

— பெருங்கதை *1. 55 - 145 - 147*

**'கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை**
**குஞ்சரங் கோளிழைக்கும்**
**பாம்பைப் பிடித்துப் படங்கிழித்து**
**ஆங்கப் பணைமுலைக்கே.'**

— திருக்கோவையார் *21.*

வரிநிறக் கோம்பி என்றதால் வரிகளையும் நிறத்தையும் மாற்றிக் காட்டும் என்று கொங்குவேளிர் கூறியிருப்பதைக் காணலாம். நானும் முதலில் கொங்குநாட்டில்தான் இந்தப் பச்சோந்தியைக் கண்டேன்.

கோம்பி எனும் பச்சோந்தியின் சுருட்டை வாலைக் கண்டு மயில்பயந்துகூவுவதாகத் தமிழிலக்கியத்தில்'பெருங் கதை' நூல் முதன்முதலில் கூறியுள்ளது. பச்சோந்தியின் வால் அதன் உடலைவிடச் சற்று நீண்டதாகும். ஆனால், அது சுருண்டு காணப்படும்.

பச்சோந்தியின் வால் மரத்திலுள்ள கிளைகளையும் கொம்புகளையும் பற்றிப் பிடிக்கத்தான் உதவுகின்றதே தவிர, மயிலையோ பறவைகளையோ வாலில் மாட்டி இழுத்துப் பிடிக்க உதவுவதில்லை. இத்தகைய இயற்கைச் செய்திகளை ஆராய்ந்த அறிவியலார் உணர்ந்துள்ளனர். நான் செய்த ஆய்விலும் இந்தச் செய்தி உண்மையில்லை என்று கண்டேன். மாணிக்க வாசகர் திருக்கோவையாரில் கூறிய செய்தி கவனிக்கத்தக்கது. யானையைக் கொல்லும் பாம்பின் படத்தைக் கிழிக்கும் மயில், கோம்பியைக் கண்டு ஒதுங்கும் என்று கூறிய செய்தியைக் கவனிக்க வேண்டும்.

'பச்சோந்தியைக் கண்டு மயில், தன் கண்ணைப்
பிடுங்கிக் கொடுப்பது போல'

என்று ஒரு வழக்குமொழி இலங்கையில் வழங்குகின்றது. மற்றும் தேவாங்கு, மயிலை அமுத்திக் கொன்று அதன் மூளையைத் தின்பதாக இலங்கையில் நாட்டுமக்கள் கருதுகின்றனர்.

பச்சோந்தியைப்பற்றிக் கூறிய செய்தி தேவாங்கிற்கும் கூறப்பட்டதாகத் தெரிகின்றது.

## ராஜநாகம்

பெரிய யானையைக் கொல்லும் பாம்பு இயற்கையில் உண்டு. அடர்ந்த காடுகளில் மரக்கிளைகளில் வாழும் இராசநாகம் சிறியதாயினும் பெரிய யானையையும் கொல்லும். அதை இனங்கண்டு 'அரசரா' என்று புறநானூறு அழைத்துள்ளது.

அத்தகைய கொடிய பாம்பையும் பிடித்து அதன் தலையில் உள்ள படத்தைக் கிழித்து மயில் கொல்லும் என்று கூறியது இயற்கைச் செய்தியே.

காட்டுமயில் வாழும் சூழ்நிலையில் அடர்ந்த காடுகளில் இராசநாகம் வாழ்வது உண்மையே.

## மயில் பார்வை

இயற்கையில் மயிலுக்குக்கண்பார்வை கூர்மையானது. அதனால் மயிலின் கண்ணைப் 'போழ்கண்' (391) என்று குறுந்தொகை கூறியுள்ளது. ஆதலின் மயில் பாம்பைக் கொன்றுவிடுவது இயற்கைச் செய்தியாகும். தோட்டமும் துரவும் உள்ள பரந்த வீடுகளில் பாம்புகளைக் களைவதற் காகவே மயில்களை வளர்ப்பதைக் கண்டிருக்கின்றேன்.

மயில் பச்சோந்தியின் வால் சுருட்டையைக் கண்டு கூவுகின்றதா, அல்லது பச்சோந்தியைக் கண்டு மயில் பயந்து ஒதுங்குகின்றதா என்பதை இயற்கையில் ஈடு பாடுடைய அறிவியல் அறிஞர்கள் (Naturalists) ஆராய வேண்டும் இச் செய்தி உண்மையா, கற்பனையா என்ப தைக் கண்டறிய வேண்டும்.

நஞ்சுடைய பாம்பிற்குப் பயப்படாத மயில் நஞ்சற்ற பச்சோந்திக்கும் அதன் சுருண்ட வாலின் அச்சமுறு தோற்றத்திற்கும் பயப்படுகின்றதா என்பதை நன்கு ஆராயவேண்டும்.

## இரு இடங்களில்

கோம்பி என்ற பெயர் பச்சோந்திக்கு இரண்டே இரண்டு இடைக்காலத்து நூல்களில்தான் வழங்கியுள்ளது. திவாகர நிகண்டில் 'கோம்பல்' என்ற சொல் முன்கோபம் என்ற பொருளில் வழங்கியுள்ளது.

அதற்குப் பிற்பட்ட பிங்கலத்தை நிகண்டில் 'தணியாக் கோபம்' என்ற பொருள் கூறப்பட்டுள்ளது. பச்சோந் திக்கு எடுத்தவுடன் முன்கோபமும் தணியாக் கோபமும் வருவதை நான் கண்டிருக்கின்றேன்.

கோம்பு என்பதற்குப் பிங்கலந்தைநிகண்டு 'சினத்தல்' என்று பொருள் கூறியதும் பொருத்தமே.

இந்தச் சினக்குறிப்பை உணர்ந்தே 'கோம்பு படைத்த மொழிச்சொல் பரத்தையர்' என்று திருப் புகழில் (263) அருணகிரிநாதர், பாடினார்.

## ஒருவகை நாய்

சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் 'கோம்பை' என்பது ஓர் ஊர் என்றும், கோம்பை நாய்-கோம்பை நகரிலுள்ளதும் காவல் புரிவதில் சிறந்ததுமான ஒருவகைச் செந்நாய் என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது.

கோம்பை என்ற ஊரின் பெயரால் கோம்பை நாய் என்ற பெயர்பெற்றது என்பது தவறாகும்.

தணியாச் சினமுடைய நாய் 'கோம்பை' என்ற பெயர் பெற்றதன் காரணமாகவே அது வளர்க்கப்படும் ஊரின் பெயர் தோன்றியதாகக் கொள்ளவேண்டும்.

கோம்பை நாய் காவல்புரிதற்குரியசிறந்த வீட்டுநாயும் வேட்டை நாயும் ஆகும். கோம்பை நாயின் குட்டிகூட வீட்டில்வளர்த்தால்,வெளியார் யார் வந்தாலும் கடிக்கும்.

ஆதலின் இதைக் கடிநாய் என்று கூறுவர். தமிழகத்தில் போற்றி வளர்க்கப்பட்ட தூயபிறப்புடைய (True Breed) தனித்தன்மை மிக்க வேட்டை நாய்கள், கோம்பை நாயும் சிப்பிப்பாறை நாயுமாகும்.

கோம்பி என்ற பெயரின் மற்றொரு பெயராக 'ஓந்திப் பொது' என்று பல்கலைக்கழக அகராதி கூறியுள்ளது தவறு ஏனென்றால் கோம்பி ஓந்தி யினத்தைச் சேர்ந்த தன்று

**கோம்பி** என்ற பச்சோந்தியின் பெயர்
சினக் குறிப்பால் வந்த பெயர்.

பச்சோந்தியின் தணியாக் கோபத்தாலும் பயமுறுத்தலாலும் காரணப்பெயராகக் கோம்பி என்ற பெயர் வந்தது.

இந்தச் சொல்லைச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி குறிப்பிட்டிருப்பினும் டாக்டர் எமனோவ் இயற்றிய திராவிடச் சொற்பிறப்பியல் அகராதியில் இச் சொல் காணப்படாதது வியப்பாக உள்ளது. கோம்பியை அறிவியலார் Chameleon என்றழைப்பர்.

**கருவி நூல்கள்**

1 Dr. Spink—Animals of India

2 Dravidian Etymoligical Dictionary—Dr. Burrow and Dr. Emeneau.

3 Madras Lexicon.

# 5 ஆமை

*வயலாமை*

'வரிமணல் அகல் திட்டை
இருங்கிளை இவன் ஒக்கல்
கருந் தொழில் கலி மாக்கள்
கடல் இறவின் சூடு தின்றும்
வயல் ஆமைப் புழுக் குண்டும்
வறள் அடும்பின் மலர் மலைந்தும்'

*—பட்டினப்பாலை, வரிகள். 60 - 65*

'நெல்லரி தொழுவர் கூர்வாள்மழுங்கிற்
பின்னை மறந்தோ டரியக் கல்செத்து
அள்ளல்யாமைக் கூன்புறத் துரிஞ்சும்'

*புறம். 379*

'வள் உகிர வயல் ஆமை
வெள் அகடு கண்டன்ன
வீங்கு விசிப் புதுப் போர்வைத்
தெண் கண் மாக்கிணை இயக்கி'

*புறம். 387*

'ஆர்குருகு உறங்கும் நீர்சூழ் வளவயல்
கழனிக் கரும்பின் சாய்ப்புறம் ஊர்ந்து

'பழன யாமை பசுவெயில் கொள்ளும்
நெல்லுடை மறுகின் நன்னர் ஊரே'

—அகம். 306

'பழன யாமைப் பாசறைப் புறத்துக்
கழனி காவலர் சுடுநந்து உடைக்கும்'

—நற்றிணை 280

'குருகுடைத் துண்ட வெள்ளகட் டியாமை
அரிப்பறை வினைஞர் அல்குமிசைக் கூட்டும்
மலரணி வாயிற் பொய்கை ஊரநீ'

—ஐங்குறுநூறு 81

'தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயின்அல்லது பிறிதுஎவ னுடைத்தோ
யாமைப் பார்ப்பின்அன்ன
காமங் காதலர் கையற விடினே'

—குறுந்தொகை 152

'செஞ்சோற்ற பலி மாந்திய கருங்காக்கை
கருங்காக்கை கவவு முனையின்
மனைநொச்சி நிழலாங்கண்
ஈற்றி யாமை தன்பார்ப்பு ஓம்பவும்'

—பொருநராற்றுப்படை, வரிகள் 183-186

மேற்காட்டிய பாடல்களில் தரையில் வாழும் ஆமையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. தரையில் வாழும் ஆமையை 'வயல் ஆமை' என்றும் 'பழனி ஆமை' என்றும் அழைத்தனர்.

இந்தஆமை பெரும்பாலும் தரையிலே காணப்படும். இது வெயில் நேரத்தில் நீரில் நீந்தும். குளிர் காலத்தில் கால்களை உள்ளிழுத்து அசையாது கிடக்கும்

இதன் நகங்கள் கூர்மையானவை. இதன் மேல் ஓடு கருமையாக இருக்கும். அடியில் காணப்படும் ஓடு ஒரு

இறிது வெண்மையாக இருக்கும். 'வெள் அகடு கண்டன்ன வீங்குவிசிப் புதுப்போர்வை' என்று உவமித்திருப்பதைக் காணலாம்.

இந்த ஆமையின் மேற்புறமும் அடிப்புறமும் மஞ்சள் நிறத்தில் நடுவிலிருந்து செல்லும் கதிர் போன்ற வரிகள் உண்டு. 'இவ்வரிகள் போன்று பெரியகிணைப் பறையை மூடிய விக்கு விசித்துக் கட்டிய புதுப்போர்வை' இருந்த தென்று புறநானூறு (136) கூறியுள்ளது.

ஆமைக்கல் என்பதற்குத் தரையில் பதிக்கும் ஆறு கோணமுடைய கல் என்று வின்சுலோவின் அகராதி கூறுவதைக் கவனிக்கவேண்டும். புறநானூற்றுப் பாடலில் [379] கல்லெனக் கருதி ஆமை ஓட்டில் பழுங்கிய கூர் வாளைத் தீட்டியதாகக் கூறியதை இது சார்பாகக் கவனிக்கவேண்டும்.

வயலாவை முட்டையிடுவதைப் பற்றியும் செய்திகள் கூறபபட்டுள்ளன.

**'கேழல் உழுத இருஞ்சேறு கிளைப்பின்**
**யாமை யீன்ற புலவுநாறு முட்டையைத்**
**தேன்நாறும் ஆம்பல் கிழங்கொடு பெறூஉம்'**

—புறம் 176

பன்றி உழுது எடுத்த வயல் ஆமை முட்டையை உணவாக ஆம்பல் கிழங்கொடு பெறுவர் என்று புறநானூறு கூறுகின்றது.

ஆமைகளில் தரையில் வாழும் ஆமைதான் கால்களை நன்கு உள்ளிழுத்து மூடிக்கொள்ளும். இந்த ஆமையைத் தான் 'ஒருமையுள் ஆமை போல் ஐந்து அடக்கல் ஆற்றின், எழுமையும் ஏமாப் புடைத்து' [126] என்று வள்ளுவர் கூறினார்.

நீரில் வாழும் ஆமைகள் கால்களை முழுவதும் உள்ளிழுத்துக்கொள்ள முடியாது.

ஆமைகளில் தரையில் வாழும் ஆமை நீண்டகாலம் வாழக்கூடியது. நூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழும். உலகில் வாழும் உயிர்களில் ஆமைதான் நீண்டகாலம் வாழும் உயிர் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

வயலாமையை Field Turtle என்று அறிவியலில் அழைப்பர். Textuda Elegans என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.

## 2 குளத்து ஆமை

'தேஎங் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண்
கயத்துவாழ் யாமை காழ்கோத் தன்ன
நுண்கோல் தகைத்த தெண்கண் மரக்கிணை'

—புறம். 70

'கதிர்மூக்கு ஆரல் கீழ்ச்சேற்று ஒளிப்பக்
கணைக்கோட்டு வாளை மீநீர்ப் பிறழ
எரிப்பூம் பழன நெரித்துடன் வலைஞர்
அரிக்குரல் தடாரியின் யாமை மிளிரப்
பனைநுகும் பன்ன சினைமுதிர் வராலொடு
உறழ்வேல் அன்ன வொண்கயல் முகக்கும்'

—புறம். 249

'நெடுங்கால் மாஅத் தூழ்உறு வெண்பழம்
கொடுந்தாள் யாமை பார்ப்பொடு கவரும்'

—அகம். 117

'பிணங்கரில் வள்ளை நீடிலைப் பொதும்பின்
மடிதுயின் முனைஇய வள்ளுகிர் யாமை
கொடிவிடு கல்லிற் போகி அகன்றுறைப்
பகுவாய் நிறைய நுங்கிற் கள்ளின்

உகுவார் அருந்து மகிழ்பியங்கு நடையொடு
தீம்பெரும் பழனி முழக்கி அயலது
ஆம்பல் மெல்லடை ஒடுங்கும் ஊர'

—அகம். 256

'மேல்துறைக் கொளீஇய கழாலின் கீழ்த்துறை
உகுவார் அருந்தப் பகுவாய் யாமை
கம்புள் இயவன் ஆக விசிபிணித்
தெள்கண் கிணையின் பிறழும் ஊரன்'

—அகம். 356

'கீழ்மடைக் கொண்ட வாளையும் உழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையும் அறைநர்'

—புறம். 42

'ஆமை அகடுபோல் அங்கண் தடாரி'

—புறப்பொருள் வெண்பா. வாகை. 32

'யாலம யள்ளகட் டன்ன வரிக்கிணை'

—பு. வெ. பாடாண். 18

மேற்கண்ட செய்யுட்களில் குளத்து ஆமையைப் பற்றிக் கூறியிருப்பதைக் காணலாம். ஆமையை வேள்விச் சடங்கிற்குப் பயன்படுத்தியதைப்பற்றி அகநானூறு 361 ஆம் பாட்டு கூறியுள்ளது.

'கரியாப் பூவில் பெரியோர் ஆர
அழலெழு தித்தியம் மடுத்த யாமை
நிழலுடை நெடுங்கயம் புகல் வேட்டா அங்கு'

—அகம். 361

'கொலைஞர் உலைஏற்றித் தீமடுப்ப ஆமை
நிலைஅறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் கொடுங்கூற்றம் கோள் பார்ப்ப ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு'

—நாலடியார். 34

ஆமையின் பேதைமையைக் குறித்து இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. சீவகசிந்தாமணியும் இச் செய்தியைக் கூறியுள்ளது.

'நெடுமணி யூபத் திட்ட தவழ்நடை யாமை நீள்நீர்த் தொடுமணிக் குவளைப் பட்டம் துணையொடு நினைக்கு தேபோல்' (2878) என்ற வரிக்கு,

'யாகத்துக்கு இட்ட தறியிலே யாமை தான் கிடக்கும் பொய்கையையும் துணையையும் நினைக்குமாறு போல' என்று உரை கூறப்பட்டுள்ளது. அதனால் யாககுண்டத்தில் ஆமையைப் போடுவது ஆரியருடைய வழக்கம் என்று தெரிகின்றது.

குளத்து ஆமை கிணைப்பறை போல இருந்தது என்பது கவனிக்கத் தக்கதாகும். சங்ககாலப் பாண்டியர், சேரர் நாணயங்களில் தொட்டியில் ஆமைகள் காட்டப் படுவது இதே வேள்விச் சடங்கைக் குறித்ததாகும். யூவத் தூணும் இந்த நாணயங்களில் காணப்படுகின்றது.

நீரில் விழும் மாம்பழத்தை ஆமை தின்றதாகக் கூறியதும் இயற்கையான செய்தியே.

குளத்து ஆமையை அறிவியலில் Geomyda Trijuge என்றழைப்பர். இதைப் 'பாலாமை' என்று இக்காலத்தில் அழைக்கின்றனர்.

ஆங்கிலத்தில் Fresa water Tortoise என்றழைப்பர். இதை Melanochelys Trijuga Parkeri என்றும் அறிவியலில் அழைப்பர்.

## 3. கடலாமை

'அடும்புகொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக்
குப்பை வெண்மணற் பக்கம் சேர்த்தி
நிறைச்சூல் யாமை மறைத்தீன்று புதைத்த
கோட்டுவட்டு உருவின் புலவுநாறு முட்டைப்
பார்ப்புஇடன் ஆகும் அளவைப் பகுவாய்க்
கணவன் ஓம்புங் கானலஞ்சேர்ப்பன்'.

—அகம். 160.

கடல் ஆமையைப் (Turtle) பற்றியும் சங்கநூல்களில் ஒரு பாட்டு கூறியுள்ளது. அகப்பாட்டில் கூறப்பட்ட அடும்பு கொண்டு முட்டைகளை மூடும் ஆமை Lepidochylus olivacea என்று அறிவியலில் அழைக்கப்படும்.

ஆங்கிலத்தில் Olive ridley turtle என்றழைப்பர்.

இந்த ஆமை, முட்டைகள் இடுவதாகவும் அதைவெண் மணலில் அரும்பால் மறைத்துப் புதைத்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இந்த முட்டைகளிலிருந்து ஆமையின பார்ப்பு வெளிவரும்வரை அதனுடைய கணவன் பாதுகாப்பதாகவும் அக நானூற்றுச் செய்யுளில் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

ஆனால், பெண் ஆமை முட்டைகளை மணலில் மறைத்துப் புதைத்துவிட்டுப் போய்விடுகிறது. அவைகளைப்பற்றிக் கவலைப்படுவது இல்லை. ஆண் ஆமையும் அதைப் பாதுகாப்பதும் இயற்கையில் இல்லை. இயற்கையில் இச்செய்தி கற்பனையாகும்.

மற்றும் ஒரு பரம்பரைச் செய்தி வழங்குவதையும் காணலாம்.

ஆமை தன் முட்டைகளைக் கண்ணாலே பார்த்தே பொரிக்க வைப்பதாகவும் ஒரு நம்பிக்கை மக்களிடையே, நிலவுகின்றது. இதுவும் உண்மைச் செய்தியன்று.

அகநானூறு 160ஆம் பாடல் கூறும் செய்தியை பம்பாய் இயற்கைக் கழகம் வெளியிட்ட 'இந்தியாவில் ஊர்வன' என்ற ஆங்கில நூலில் குறிப்பிட்டுள்ள இந்த அரிய உண்மைச் செய்தி சங்கநூல்களில்தான் உள்ளது என்று அதன் ஆசிரியர் கூறியுள்ளார். ஆனால் அவருக்குப் போதிய தமிழிலக்கிய அறிவின்மையால் கி. பி. நான்காம் நூற்றாண்டுக்குரியதாக அகநானூற்றுப் பாடலைப் பற்றித் தவறுதலாகக் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் இரண்டுவிதமாக கடல் ஆமைகள் வந்து முட்டையிடுகின்றன அவை அறிவியற்படி பின் வருமாறு:

Hauks bill turtle (chelone imbricata)
Loggerhead turtle (Thalassacheyto carettes)

இவைகளை அழுங்காமை, பங்குனி ஆமை என்றழைப் பர். மூன்று வகை ஆமைகளைச் சங்க நூல்கள் கூறி யுள்ளன. இவை இன்றும் தமிழ்நாட்டில் உள்ளன.



# 6 பாம்புகள்

சங்க நூல்களில் பாம்புகளைப் பற்றிச் சில செய்திகள் வருகின்றன. பாம்புகளிலே நல்ல பாம்பைப் பற்றிய செய்திகள்தான் மிகுதியாகக் காணப்படுகின்றன.

நல்ல பாம்பிற்கு 'வரி மிடறு' இருப்பதாகவும், தலையில் பை இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அதன் தலையில் உள்ள வரிகளையும் குறிகளையும் 'உத்தி' என்றழைக்கின்றனர். இது மூக்குக் கண்ணாடி போல (Spectacle) இருப்பதாகக் கூறுவர்.

**'நல்லரா உறையும் புற்றம் போலவும்'** —புறம். 309

**'... ... ... ... ... ... ...வரிமிடற்று**
**அரவுறை புற்றத் தற்றே நாறும்'** —புறம். 329

**பூம்பொறிப் பொலிந்த அழலுமிழ் அகன்பைப்**
**பாம்புயிர் அணங்கி யாங்கும் ஈங்கிது'**
—**நற்றிணை 75**

**'உத்தி அரவின் பைத்தலை துமிய'**
அகம். 202

'யானும் ஏழ்மணியங்கு கேழ்அணிஉத்திக்
கட்கேள்விக் கலவை நாவின்
நிறனுற்ற வராஅப் போலும்
வறன்ஒரீஇ வழங்குவாய்ப்ப' —புறம். 382

'பைத்த பாம்பின் உத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் தடாரி'
—பொருநராற்றுப்படை 69-70

'... ... ... ... ... வல்வரிப்
பாம்புபை யவிந்தது போலக் கம்பிக்'
—குறுந்தொகை —185

'வெஞ்சின அரவின் பைஅணந் தன்ன
தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழத்'
—அகம். 154

நல்ல பாம்பின் கழுத்தே பை போல விரிந்து படமெடுத்து ஆட உதவுகின்றது. இதை வரிமிடல் என்றும், பாம்புபை என்றும் சங்கநூல்கள் கூறுகின்றன.

நல்ல பாம்பையே உத்தி அரவு என்றும் பைத்த பாம்பு என்றும் சங்கப் பாடல்கள் கூறுவதையும் காணலாம்.

படமெடுத்து ஆடுவதைப் 'பை அணிந்து' என்றும் படத்தை ஒடுக்கித் தணிவதை 'பை அவிங்க' என்றும் சங்கப் புலவர் அழைத்தனர்.

பாம்பு படமெடுப்பது போல் காந்தள் மலர் விரிந்து மலர்ந்ததாகவும் பாம்பு படம் அவிந்தது போல் நெய்தல் மலர் கூம்பியதாகவும் சங்கப் புலவர்களால் கூறப்பட்டிருப்பது அழகிய உவமைகளாகும்.

தடாரிப் பறையைக் கையால் அடிக்கும்போது ஏற்படும் தோல் கூறையைப் போன்று நல்ல பாம்பின் படத்தில் வரிகள் இருந்ததாகப் பொருநராற்றுப்படை சொல்லுகின்றது.

பூம்பொறியோடு அழகிய அகன்ற பை அழலை உமிழ்வதாகக் கூறியதையும் காணலாம். இங்கு அழல் என்பது நெருப்புப் போன்ற நஞ்சாகும். நஞ்சால் உயிரை வருத்துவதாகக் கூறினர்.

நல்ல பாம்பு புற்றில் வாழ்வதாகவும் கரடிகள் புற்றை அகழ்ந்து எடுக்கும்போது நல்ல பாம்பையும் சேர்த்து வாங்குவதாகவும் சங்க நூல்கள் கூறுகின்றன.

**'அரிவிவர் புற்றத்து அல்கிரை நசைஇ**
**வெள் அரா மிளிர வாங்கும்**
**பிள்ளை எண்கின் மலைவயி னோனே'** —அகம். 257

**'இரைதேர் எண்கின் பகுவாய் ஏற்றை**
**கொடுவரிப் புற்றும் வாய்ப்ப வாங்கி**
**நல்லரா நடுங்க உரறிக் கொல்லன்'**

—நற்றிணை 125

**'அரவாழ் புற்றம் ஒழிய ஒய்யென**
**முரவாய் வள்ளுகிர் இடப்ப வாங்கும்'**

—நற்றிணை 325

நல்ல பாம்பைக் கையால் பிடித்தாலும் கரடியின் கையில் நிறைய மயிர் இருப்பதால் பாம்பு கடிக்க வாய்ப்பில்லை. நல்ல பாம்பிற்கு நச்சுப் பல் இருப்பதையும் அதன் நஞ்சையும் குறித்துப் பாடியுள்ளனர்.

**'கடுஒடுங்க எயிற்ற அரவுத்தலை பனிப்ப**
**இடியென முழங்கு முரசின்'** —புறம். 17

**'... ... ... ... ... ... முள்எயிற்று**
**அரவுஎறி உருமின் முரசு எழுந்து இயம்ப'** —புறம். 126

**'பூம்பொறிப் பொலித்த அழலுமிழ் அகன்மைப்**
**பாம்புயிர் அணங்கி யாங்கும் ஈங்கிது'**

—நற்றிணை 75

'... ... ... ... கடுந்திறல்
பாப்புக்கடுப் பன்ன தோப்பி வான்கோட்டுக்'
—அகம். 348

'பாம்புவெகுண் டன்ன தேறல்'
—சிறுபாணாற்றுப் படை, வரி—237

'சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாஅங்கு'
—குறுந்தொகை 119

'நல்அராக் கதுவி யாங்கென்
அல்ல நெஞ்ச மலமலக் குறுமே'
—குறுந்தொகை 43

'தங்காச் சினத்தொடு காட்டியுயிர் செருக்கும்
பாம்பும் அவைப்படில் உய்யுமாம் பூங்கன்'
—கலித்தொகை 140

நல்ல பாம்பின் நஞ்சு பல்லில் மறைந்திருப்பதாகவும் அது நெருப்புப் போல் வருத்துவதாகவும் கூறியதைக் காணலாம். நல்ல பாம்பு கடித்தால் மயக்கம் வருமென்பதையும் குறுந்தொகை கூறுகின்றது.

நல்ல பாம்பின் நஞ்சு நரம்புகளைத் தாக்கும் என்றும் மயக்கமூட்டும் என்றும் (Neuro-Toxic) ஆராய்ச்சியாளர் கூறுவர். நல்ல பாம்பின் நஞ்சு வெகு விரைவில் மயக்கமூட்டுவதையே மதுவருந்திப் போதையால் மயக்க மூட்டுவதோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்.

அரிசியால் ஆக்கப்பட்ட தோப்பிக் கள்ளைக் (Rice-wine)குடித்தால் தோன்றும் மயக்கத்தோடு நல்ல பாம்பின் நஞ்சால் ஏற்படும் மயக்கத்தை ஒப்புமை காட்டி அகநானூறு கூறுவது அழகிய உவமையாகும்.

சிறுபாணாற்றுப் படையிலும் பாம்பின் நஞ்சு போல் 'தேறல்' போதையைத் தந்ததாகக் கூறுவதையும் கவனிக்க வேண்டும். இதே உவமையை விவிலிய நூலும் [Bible]

கையாளுவதைக் காணலாம். அது மயக்கம் தரும் பாம்பு போலக் கடிக்கின்றது. (Wine Bitethlike Adder) என்று சொல்லுவதைக் காணலாம்.

தற்காலத்தில் போதையூட்டுவதற்காகப் பூநாகத்தை உதட்டில் கடிக்க வைக்கின்றனர் என்று நாள்தாளில் செய்தி வந்துள்ளது.

இக்காலத்தில் அமெரிக்காவிலும் மிக்கபோதையுடைய மதுவைப் பாம்பின் நஞ்சொடு (Snake-Juice) ஒப்பிட்டுக் கூறுவதுண்டு.

பாம்பு கடித்து உயிர் செகுக்கும் என்று கலித்தொகை கூறுகின்றது. சிறிய வெள்ளையானை, வரியையுடைய பாம்புக் குட்டி கடித்து வருந்தியதாகக் குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது.

இராச நாகம் (King cobra) யானையின் துதிக்கையில் கடித்ததால் யானை உடனே இறந்ததாக இரண்டாம் உலகப்போர் பற்றி எழுதிய — பர்மாக் காடுகளைப் பற்றி எழுதிய ஓர் அறிஞர் கூறியுள்ளார்.

நல்ல பாம்பிற்கு கவைத்த நாவுண்டு என்றும் அதன் கண்ணே செவியாகப் பயன்படுகின்றதென்றும்புறநானூறு [302] கூறுகின்றது. 'கட்கேள்வி' என்று புறநானூறு கூறியதையே பிற்காலத்தில் 'கட்செவி' என்று கெண்டு நிகண்டுகளில் அழைத்தனர். பாம்பிற்குச் செவிப்புலன் இல்லையென்பதை அக்காலத்திலேயே தெரிந்திருந்தனர்.

பாம்பாட்டி மகுடி ஊதும்போது நல்லபாம்பு கண்ணால் ஆள் அசைவதைக் கண்டு ஆடுகிறதே யொழிய, காதினால் மகுடி இசையைக் கேட்டு ஆடுவதில்லை என்று அறிவியல் அறிஞர் கண்டுள்ளனர்

ஆதலின் கண்ணே காதாக உதவும் என்ற பொருளில் 'கட்கேள்வி' என்று அழைத்தது பொருத்தமே. நல்ல

பாம்பின் கண்களை ஒரு துணியால் மூடிவிட்டால் பாம்பு மகுடி இசையைக் கேட்டு ஆடுவதில்லை.

நல்ல பாம்பு கோடை காலத்தில் தோலுரிப்பதாக அறிஞர்கள் கண்டுள்ளனர்.

**'கட்கேள்விக் கலை நாவின்**
**நிறலுற்ற அராஅப் போலும்**
**வறன் ஒரீஇ வழங்குவாய்ப்ப'** — புறம். 382

வறட்சிக் காலத்தில் பாம்பு தோலுரிப்பதாகப் புறநானூறு கூறுவது கவனிக்கத்தக்கது

**'பாம்புரி யன்ன வடிவன காம்பின்**
**கழைபடு சொலியின் இழையணி வாரா**
**ஒண்பூங் கலிங்கம் உடீஇ நுண்பூண்'**

— புறம் 383

**'அரவுக்கிளர்ந் தன்ன விரவுறு பல்காழ்**
**வீடுறு நுண்துகில் ஊடுவந்து இமைக்கும்'**

— நற்றிணை 366

**'............................ பாம்பின்**
**உரிநிமிர்ந் தன்ன வுருப்பவிர் அமையத்து'**

— குறுந்தொகை 154

**'............................ பாம்பின்**
**தூங்குதோல் கடுக்கும் தூவெள் ளருவி'**

— குறுந்தொகை 235

பாம்பு உரித்த மெல்லியதோல் மூங்கிலின் உள்ளேயிருக்கும் 'தொலி' போல இருந்ததாகக் கூறியுள்ளனர். பாம்பு உரித்த தோல் நீர்வீழ்ச்சி போலவும், கடுவெயிலில் நிலத்தின் மேலே ஆவி பறப்பது போலவும் தோன்றியதாகக் குறுந்தொகை கூறுகின்றது.

பாம்புகள் இரவில் இரை தேடும் என்று சங்கநூல்கள் கூறுகின்றன.

அணங்குடை அரவின் ஆரிருள் நடுநாள்
மைபடு சிறுநெறி எஃகுதுணை ஆக'

— நற்றிணை 168

'அரவுஇரை தேரும் ஆரிருள் நடுநாள்' — நற்றிணை 285

பாப்புகள் இரவில் இரை தேடும், நடமாடும் என்று அறிஞர்கள் கூறுவர் நல்ல பாம்பைப் பற்றிச் சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் வரும் ஒரு செய்தி ஆராயத் தக்கது.

'மேய்மணி இழந்த பாம்பின் நீரனி
தேம்பினை வாழியென் நெஞ்சே வேந்தர்'

— அகம். 372

'ஈாம நல்அராக் கதிர் பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கில் புலர வீர்க்கும்'

—அகம். 27

'உருமுச்சிவந் தெறிந்த உரன்அழி பாம்பின்
திருமணி விளக்கிற் பெறுகுவை'

— அகம். 92

'காரிருள் திருமணி உமிழ்ந்த நாகம் காந்தள்'

(அகம்.)

'அருவி தந்த அரவுமிழ் திருமணி
பெருவரைச் சிறுகுடி மறுகுவிளக்கு உறுத்தலின்'

— அகம். 192

நல்லபாம்பு தன் தலையில் ஒருமணியை வைத்திருப்பதாகவும், அந்த மணியின் கதிர்விடும் ஒளியால்இரைதேடுவதாகவும் கூறியுள்ளனர். அந்த ஒளி இரவில் விளக்குப் போல் மலைச் சிற்றூரில் தெருவிற்கு வெளிச்சம் தந்ததாகக் கூறப்பட்டுள்ளது. நாகப் பாம்பிற்கு இந்த மணிமேய்வதற்கு ஒளி தந்து உதவும் மணியாக இருந்ததால் 'மேய்மணி' எனப்பட்டது.

நாகப்பாம்பின் மணியை எடுத்தால் பெரும்பணம் வந்தெய்தும் என்று கருதும் நம்பிக்கை இன்றும் உள்ளது.

நல்ல பாம்பிற்கு மணியிருப்பதாகக் கூறிய செய்தி முற்றிலும் கற்பனைச் செய்தியாகும்.

சங்க காலத்தில் நல்ல பாம்பிற்கு மணி யிருப்பதாகக் கூறிய செய்தி பிற்காலத்தில் மலைப்பாம்புகளுக்கும் இருப்பதாக நூல்களில் கூறப்பட்டுள்ளது. இத்தகைய நல்ல பாம்புமணியை ஒரு சேட்டு வணிகரிடம் விற்று அது அடுத்த நாள் புழுவாகக் கிடந்ததாக (Indian Express 13. 10. 92) நாளிதழில் செய்தி வந்துள்ளது.

பாம்புக்குப் பல பகைவர்கள் உண்டு. பாம்புகளின் பகைவர்களில் மயிலையும் செம்போத்தையும் கீரியையும் முக்கியமாகக் கருதுவர்.

**'விரவுப்பொறி மஞ்ஞை வெரீஇ அரவின்**
**அணங்குடை அருந்தலை பைவிரிப் பவைபோல்'**

— அகம். 108

அகநானூற்றில் நல்லபாம்பு மயிலுக்கு அஞ்சுவதாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் மற்றொரு செய்தியும் ஆராயத்தக்கது.

பாம்புகளில் முக்கியமாக நல்ல பாம்பு இடிக்கு அஞ்சுவதாகவும், நடுங்குவதாகவும் இடி நல்ல பாம்பின் தலையில் விழுவதாகவும் கூறியுள்ளனர்.

**'உத்தி அரவின் பைத்தலை துமிய**
**உரவுஉருமு உரறும் உட்குவரு நனந்தலை'**

— அகம். 202

**'உருமுச்சிவந் தெறிந்த உரன்அழி பாம்பின்'**

— அகம். 92

'.............................. பாம்பின்
பையுடை யிருந்தலை துமிக்கும் ஏற்றொடு
நடுநாள் என்னார் .......................'

— குறுந்தொகை 268

'இடுவொடுங்கு எயிற்ற அரவுத்தலை பனிப்ப
இடியென முழங்கு முரசின் — புறம். 17

நடு இரவில் இடி பாம்பின்தலைமேல் விழுந்து தலையைத் துண்டிப்பதாகக் கூறியுள்ளது கற்பனைச் செய்தியேயாகும்.

பாம்புக்குக் கேட்கும் சக்தியுடைய காது கிடையாது. ஆதலால் இடியின் அதிர்ச்சி அலைகள் உடலைத் தாக்கினால் நல்லப் பாம்பு எழுந்து தலை விரித்து ஆடலாம். ஆனால் இடி குறிபார்த்து பாம்பின் தலையில் விழுவதாகக் கூறியது மிகையாகும்.

முரசு அதிரும்போது இடிபோல முழங்குவதாகவும் அதைக் கேட்டு நல்லபாம்பு ஆடுவதாகவும் கூறியுள்ளனர்.

' அரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப'

— புறம். 12[?]

## பொருள் மாறுபாடு

புறநானூறு 369 ஆம் பாடலில் முரசின் முழக்கத்திற்குப் பயந்து 'அரசு அராப் பனிக்கும்' என்று கூறியிருப்பதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

'அரசு அரா' என்பதற்குப் பகையரசர்களாகிய பாம்புகள்' என்று இங்கு உ. வே. சா. உரையை எழுதியுள்ளனர். புறநானூறு 17 - ஆம் பாடலில் 'அரவுத்தலை பனிப்ப' என்ற வரிக்குப் பாம்புகளின் தலை நடுங்க என்றே உரை கூறியிருக்க, இங்கே வேறு பொருள் கொள்ள வேண்டியது பொருத்தமில்லை.

இரண்டு பாட்டிலும் முரசு முழங்குவது இடிபோல இருப்பதால் பாம்பு நடுங்குவதாகவே பொருள் கொள்ள வேண்டும்.

ஆனால், புறநானூறு 369 ஆம் பாடலில் குறிப்பிடப் பட்ட 'அரா', அரா அரா' என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்த 'அரா அரா' நிகண்டுகளில் கூறப்படும் 'இராசமா நாகம்' என்பதையும் தற்காலம் இராஜ நாகம் என்று அழைக்கும் கொடிய நஞ்சுடைய காட்டில் வாழும் நல்ல பாம்பு என்பதையும் உணரவேண்டும். இதை உணராது பிற்கால உரை கூறினவர், பகையரசாகிய பாம்புகள் என்று வலிந்து பொருள் கூறினார்.

புறநானூற்றிலே 'அரசுவா' என்பதற்கு அரசயானை என்று தலைமை தாங்கும் யானையைப் பற்றிக் கூறியுள்ளதைக் காணலாம்.

நீலகிரி முதலிய மேற்குத்தொடர்ச்சி மலைகளில் அடர்ந்த காடுகளில் இந்த இராசமா நாகம் வாழ்கின்றது. 'இந்த அரச அராவை' இராசமா நாகத்தை இன்னும் மலையாளத்தில் 'இராஜ வெம்பாலா' என்றழைக்கின்றனர். இதில் வரும் 'இராஜ' என்ற சொல்லே சங்க இலக்கியத்திலும் வருகின்றது.

மலையாளத்தில் இதை மிகக் கொடிய பாம்பாகக் கருதுகின்றனர். கரிநாகம் என்றும் இதை அழைப்பர். மலையாளத்தில் சிலவிடங்களில் 'கரிங் குறிஞ்சி' என்றும் அழைக்கின்றனர்.

மலையும் மலைசூழ்ந்த அடர்ந்த காடுகளிலும் இப்பாம்பு பளபளப்பான கருமையான உடலில் குறுக்கு வாட்டாக மஞ்சள் அல்லது வெள்ளை வரிகளுடன் காணப்படும். மரக்கிளைகளில் கூடுகட்டி வாழும். மேலும் இது, பாம்புகளையே தன் உணவாகக் உட்கொள்ளும்.

இந்தப் பாம்பு ஆறு அடி உயர்ந்து படமெடுத்து ஆடும். முட்டையிலிருந்து வரும் இதன் குட்டிக்குக்கூடக் கொடிய நஞ்சிருக்கும்.

பர்மாக்காடுகளில் மரங்களில் கூடுகட்டி வாழும் இந்த இராச நாகம் யானைகளின் துதிக்கையைக் கடித்ததால் யானைகள் உடனே இறந்துவிட்ட நிகழ்ச்சியை ஆராய்ச்சியாளர்கள், ஜப்பான் நாடு — இந்தியப்போர் வீரர்கள் வரலாற்றில் கூறியுள்ளனர்; எழுதியுள்ளனர்.

குறுந்தொகையில் சிறுவெள்ளரவி அவ்வினயர்முட்டிகான யானை அனைந்தியாகு' என்ற வரியில் இராசமா நாகம் யானையைத் தன் நஞ்சால் துன்பப் படுத்துவது கூறப்பட்டுள்ளது.

நிகண்டுகளில் கருவழலை என்பதற்கு இராசமாநாகம் என்று பொருள் கூறியுள்ளனர். வழலை என்பது முற்காலத்தில் பாம்புகளைப் பொதுவாகக் குறிக்கும் பெயராக வழங்கி வந்தது.

இப்போது நாட்டுமக்கள் கருவழலை என்று அழைக்கும் பாம்பு நஞ்சற்ற பாம்பாகும். எல்லாப் பாம்புகளும் கையால் பிடிக்கும்போது வழவழப்பாக இருப்பதால் பொதுப் பெயரால் அழைக்கின்றனர்.

இராச நாகத்தைப் பற்றிச் சங்க நூல்களில் கூறியது அரிய, வியப்பான செய்தியாகும். இதை அண்மைக் காலந்தொட்டு நாகராஜன் என்று நமது நாட்டுமக்கள் அழைப்பர்.

நல்ல பாம்பின் நிறம் சிலபோது கருமையாகவும், சிலபோது மண்ணின் நிறமாகவும் காணப்படும். நல்ல பாம்பின் நிறம் பொன்நிறமாகவும் வெண்மையாகவும் காணப்படும். இது குளிர் காலத்தில் நெடுநாள் ஒளிந்து அசைவற்று உறங்கும்.

புற்றில் மறைந்து வாழ்ந்த நல்ல பாம்பை 'வெள்ளரா' என்று சங்கப்பாடல்கள் இரண்டு இடங்களில் கூறுவது இந்த நிறமான பாம்பையே யாகும்.

இந்த நல்லபாம்பைத் தேவார காலத்தில் மூர்க்கன் என்றனர்.

மலையாளத்தில் இப் பெயர் இன்றும் வழக்காக உள்ளது.

பாம்பின் முட்டை கோழி, பறவை முட்டைபோல கடினமான ஓட்டோடு இருக்காது. நல்ல பாம்பின் முட்டைகள் தோலால் மூடப்பட்டதே தவிர, முட்டையைப் போல ஓடு இருக்காது.

நல்ல பாம்பைத் தவிர, சங்க இலக்கியத்தில் பச்சைப் பாம்பு, பெரும் பாம்பு, வழலைப்பாம்பு, கடற்பாம்பு ஆகிய பாம்பு வகைகளும் கூறப்பட்டுள்ளன.

பச்சைப்பாம்பு சூல் முற்றியிருந்து வெளி வரும்போது கரும்பின் அரும்பு கூம்புடைய பொதியோடு தோன்றியது போலிருந்ததாகக் கூறியிருப்பதைக் காணலாம். இந்த உவமை நிறத்திலும் உருவிலும் மிகப் பொருத்தமானது.

**'சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப்பு அன்ன**
**கனைத்த கரும்பின் கூம்புபொதி அவிழ'**

— குறுந்தொகை 35

**'சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்**
**மெல்லவே கருவிருந்து என்று'**

— சீவகசிந்தாமணி 53

பச்சைப் பாம்பின் வயிற்றில் குட்டிகள் மெல்லிய கொடிகள் போல இருக்கும். கரும்பின் கூம்பிலும் கொடி போன்று வெண்மை கலந்த பச்சை இழைகள் இருக்கும்.

இரண்டும் உருவிலும் நிறத்திலும் ஒத்துள்ளன. இந்தப் பசும் பாம்பையே இக்காலத்தில் கண்குத்திப் பாம்பு என்றழைப்பர்.

பச்சைப்பாம்பு முட்டைகளை வெளியே இடுவதில்லை. சங்க நூல்களில் ஒரே ஒரு பாட்டில் மட்டும் வழலைப் பாம்பு கூறப்பட்டுள்ளது.

சூற்பையிலிருந்தே பொரித்த குட்டிகள் வெளியே வருகின்றன. இதையே குறுந்தொகை கூறியுள்ளது. இவ்வாறு குட்டி ஈனுவதை (Ovo - viviparous) என்று அறிவியலில் அழைப்பர். முட்டைகள் இன்றியே குட்டிகளைக் கட்டு விரியன் போன்ற பாம்புகள் Vipers ஈனும். அவ்வாறு ஈனுவதை Visiparous என்றழைப்பர்,

**'வேனில் ஓதிப் பாடுநடை வழலை**
**வரிமரல் நுகும்பின் வாடி** அவண
**வறன் பொருந்து குன்றத்து உச்சிக் கவாஅன்**
**வேட்டச் சீறூர் அகன்கண் கேணி'**

— நற்றிணை - 62

வேனிற் காலத்தில் வரியுடைய மரல் செடியின் குருத்து வாடிக் கிடப்பது போல வறண்ட மரத்தில் வழலைப்பாம்பு பொருந்தி இருந்ததைக் கன்றின் சாரல் என்று நற்றிணைப் பாட்டு கூறுகின்றது.

மரலின் இலை உருண்டு தடித்து இருக்கும். கரும்பச்சையில் வெள்ளை வரிகள், குறிகள் காணப்படும். இந்தத் தோற்றம், உருவம் வழலைப் பாம்பின் உடல் தோற்றத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. மரல் செடி (மருள்) வறண்ட நிலத்தில் வளரும்.

வழலைப்பாம்பு வேனிற் குன்றில் வறண்ட மரத்தில் பொருந்தியிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து

இந்த வழலை சுருட்டை விரியன் என்றழைக்கப்படும், பாம்பு என்று கருதலாம்.

வேனிற் காலத்தில் ஓணானைப் பிடிக்க 'பாடு நடை' யுடன் சென்றதையே 'பாடுநடை வழலை' என்று அடை மொழி கொடுத்துக் கூறியிருப்பதைக் காணலாம். இத்தகைய பாடு நடை உடைய பாம்பு சுருட்டைப் பாம்பே யாகும்.

சுருட்டைப் பாம்பு பல்லி, ஓணான்களைப் பிடித்து உண்ணும். போகும்போது வயிற்றுச் செதிள்களை உரசி ஓசை யிட்டுச் செல்லும். இம்முறையாக ஓசையிட்டுச் செல்லுதலையே 'பாடு நடை' என்று நற்றிணை கூறு கின்றது.

இது வளைந்து வளைந்து செல்லும். இதைப் புடையன், புடையன் பூச்சி என்று திருநெல்வேலியில் அழைப்பர். பக்க வாட்டமாகச் செல்வது என்றபொருளில் 'புடையன்' என்ற பெயர் வழங்கியிருக்கலாம். இதை அறிவியல் நூலார் (Side - windar) என்றும் Saw - scaled Viper என்றும் அழைப்பர்.

புறநானூறு 22ஆம் பாடலில் 'அயறு' என்று வரும் சொல்லுக்கு 'வழலை' என்று பழைய உரை கூறியுள்ளது. இங்கு வழலை என்பது இரத்தத்தையும் நிணநீரையும் சேர்த்துக் குறிக்கும்.

சுருட்டைப் பாம்பு கடித்தால் புண்ணில் வழலை வடிந்துகொண்டே யிருக்கும். ஆதனால் இந்தப் பாம்பை இரத்தக் கட்டுவிரியன் என்றழைப்பர். வழலை வடியும் படி கடித்தபாம்பை வழலை என்றழைத்தனர்.

வழலை என்ற பெயர் தற்காலம் பல பாம்புகளுக்கு வழங்குவதைக் காணலாம். நஞ்சற்ற வெள்ளிக்கோல்

விரியனையும் (Wolf - snake or Lycoden) வழலைப் பாம்பு என்று கூறுவர்.

இதை வீடுகளில் அடிக்கடி பார்க்கலாம். இதனால் மனை வழலை என்றழைப்பர். மனைப்பாம்பு என்றழைப்பர். அதே போன்று ஓலைப்பாம்பையும் (Oligoden) செவ்வழலை என்றழைக்கின்றனர்.

கருவழலை என்று தற்காலம் நாட்டு மக்களால் அழைக்கப்படும் பாம்பு நஞ்சற்ற பாம்பாகும். இதை அழலைப் பாம்பு (Bridal SnaKe) என்றும் அழைப்பர். இதைக் கொடிய நஞ்சுடைய கட்டுவிரியன் என்றும் கருதுவார்கள். ஆனால் இது கட்டுவிரியனைப் போலிருந்தாலும் நஞ்சற்றது.

நிகண்டுகளில் கருவழலை என்பதற்கு இராசமாநாகம் என்று பொருள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

நிகண்டு ஆசியரியர்கள் காலத்து நஞ்சுடைய இராசமாநாகத்தைக் குறித்து வழங்கிய கருவழலை என்ற பெயர் பிற்காலத்தில் நஞ்சற்ற பாம்பிற்கு வழங்கியதாகக் தெரிகின்றது.

உரிச்சொல் நிகண்டு கார்வழலை என்பதற்கு இராசமாநாகம் என்று பொருள் கூறியிருப்பதைக் காணலாம். இதையே கண்டாங் கருவிலி, கண்டாங் கண்டாங் கருவழலை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

உற்று நோக்கினால் வழலை என்ற பெயரே பாம்பின் பொதுப் பெயராக நஞ்சுடைய பாம்பிற்கும், நஞ்சற்ற பாம்பிற்கும் வழங்கியிருப்பதைக் காணலாம். மலையாளத்தில் 'வழலா' என்ற சொல் ஒரு வகைப் பாம்பிற்கு வழங்குகின்றது.

மலையாளத்தில் இராசநாகத்திற்கு வழங்கும் 'இராஜ வெம்பாலா' என்ற பெயரில் 'பாலா' என்ற சொல் 'வழலா' என்ற சொல்லின் மறு உருவமாகவே தோன்று கின்றது.

துளுமொழியில் 'கடம்பழெ' என்பது நஞ்சுடைய ஒரு பாம்பைக் குறிக்கின்றது. 'கட்ட பழக்கடி' என்ற பெயரும் கட்டு விரியனைக் குறிக்கிறது. துளுமொழியில் 'பழ' 'பழெ' என்ற சொற்கள் வழலை என்ற சொல்லின் மாற்றங்களாகத் தோன்றுகின்றன. ஆதலின் 'வழலை' என்ற சொல் பொதுவாகப் பாம்பைக் குறித்து வழங் கியதாகக் கருதலாம்.

வழ வழப்புடைய பாம்பை வழலை என்று வழங்கி யிருக்கலாம். அரா என்ற சொல் பொதுவாகப் பாம்பு களைக் குறித்து வழங்கினும் சங்க நூல்களிலேயே நல்ல பாம்பைக் குறித்து வழங்கினதைக் காணலாம்.

கண்டங்கருவிலி, கருவழலைப் பாம்பு ஆகியவை நஞ்சுடையதாகவும். இராசமாநாகம் என்றும் கருதப்பட் டிருப்பதால் அக்காலத்தில் இஃது இராசநாகத்தைக் குறித்திருக்கலாம். இராசநாகத்திற்கு உடலில் கருப்பும் வெள்ளையுமானவரிகள் உடல் முழுவதும் கண்டங் கண்டமாகக் காணப்படுவதால் அது கண்டங் கருவழலை எனப்பட்டது.

சங்க நூல்களில் மலைப்பாம்பைப் பற்றிச் சில செய்திகள் வருகின்றன. மலைப்பாம்பை மாசுணம் என்றும் பாந்தள் என்றும் சங்கநூல்களில் அழைத்தனர்.

**'மைந்துமணி சினத்த களிறுமதன் அழிக்குந்**
**துஞ்சுமரங் கடுக்கு மாசுணம்'**

— மலைபடுகடாஅம் 261

'களிறு அகப் படுத்த பெருஞ்சின மாசுணம்
வெளிறுஇல் காழ்மரம் பிணித்து நனிமிளிர்க்கும்'

— நற்றிணை 261

'இனஞ்சால் களிறு பாந்தள் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடர் அகத்து இயம்பும்'

— நற்றிணை 14

மலைப்பாம்பைப் பற்றிக் கூறியுள்ள சில செய்திகள் கற்பனைச் செய்திகளாகக் காணப்படுகின்றன.

மலைப்பாம்பு யானையின் வலிமையை அழிப்பதாகவும் யானையை விழுங்கியதாகவும் கூறி யிருப்பதைக் காணலாம்.

மலைப்பாம்பிற்கு யானையைக் கடித்துத் துன்புறுத்துமளவுக்கு வலிமை கிடையாது. மான் முதலிய விலங்குகளை உடலால் சுற்றி வளைத்து எலும்புகளை நொறுக்கிச் சாகடித்து விழுங்கிவிடும். ஆனால், நற்றிணை 261 ஆம் பாடலில் வரும் கற்பனைச் செய்தியிலும் ஓர் உண்மையான நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.

மலைப்பாம்பு உணவாக விழுங்கும் விலங்குகளை வயிற்றில் செரிமானம் செய்வதற்குத் தன் உடலை மரத்தில் சுற்றிப் பிணித்து முறுக்கிக் கொண்டிருக்கும் என்று அறிஞர்கள் கண்டு கூறியுள்ளனர்.

உடலை முறுக்கும்போது விழுங்கிய விலங்கின் எலும்புகள் நொறுங்கும். நற்றிணைப்பாட்டில், மாசுணம் வெள்ளிறு இல்லாத வைரம் பாய்ந்த மரத்தில் பிணித்து உடலைப் புரட்டியதாகக் கூறியது இதே முறையான செய்தியையே என்றுணரலாம்.

## பிற நாட்டார் குறிப்பு

பிற்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வந்த பயணிகள் சில மலைப்பாம்புகளைப் பற்றி இது போன்ற செய்திகளைக் கூறியுள்ளனர்.

சீன யாத்திரிகன் யுவான் சாங் (Hieunt sang) சந்தனத்தைப் பற்றித் தமிழ்நாட்டில் கேள்விபட்டபோது சந்தனமரத்தில் பாம்புகள் இருக்கும் என்று கூறியிருக்கிறான்.

பதினாறாம் நூற்றாண்டில் வந்த ஒரு போர்த்துக்கீசியன் (*Garcia da orta )சந்தன மரத்தைச் சுற்றிப்பாம்புகள் இருக்குமென்று கூறினான். மலைப்பாம்புகள் சுற்றியிருக்கும் சந்தன மரத்தையே மணமுடைய சிறந்த சந்தன மரமாகக் கருதினர் என்று எழுதியுள்ளான்

சந்தன மரம் மிகுந்த குளிர்ச்சி யுடையதாகையால் மலைப்பாம்புகள் அதன் அடிமரத்தைச் சுற்றியிருக்கும் என்று கூறினான்.

மலைப்பாம்புகள் சுற்றியிருக்கும் சந்தன மரத்தையே மணமுடைய சிறந்த சந்தன மரமாகக் கருதினர் என்று எழுதியுள்ளான்.

தமிழ்நாட்டிலும் மக்கள் சந்தனம், பாம்பு ஆகியவைகளின் குளிர்ச்சியை ஒப்பிட்டுக் கருதினர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன

'சாந்தகத் துண்டென்று செப்புத்திறந் தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து' — நாலடியார் 126.

---

*Gracia - da-orta (16th Century) statss that after noting the grate serpents entwining the trees because it' s wood is naturally cold, they shot an arrow into it to mark it. In the winter after the snakes are gone that tree is Cut down.

செப்பின் தன்மையை உணர்ந்து சந்தனமென்று நினைத்துத் திறந்தால்பாம்பு கண்டதை ஒத்தது—என்று நாலடியார் கூறுவதைக் காணலாம்.

இரண்டாந் திருவாய் மொழி ஈட்டிலும் இதே செய்தி கூறப்பட்டுள்ளது.

'சந்தனம் என்ற மயக்கத்தாலே நாற்றம், குளிர்த்தி, மென்மைகளைக் கொண்டு மேலே கையினை வைத்துக்கொண்டு ஒருவன் கிடந்து உறங்கா நின்றால் ஒரு அறவோன் இது பாம்பு என்று அறிவித்தால்'

என்று ஈடு கூறுகின்றது ஆனாலும் சந்தனத்தையும் பாம்பையும் சேர்த்துக்கூறு' செய்தியைத் தமிழ் நாட்டில் இருந்து வெளிநாட்டுக்காரர்கள் தெரிந்து திரித்துக் கூறினர் என்று கருதலாம்.

மழை பொழிந்து அடித்து வரப்பட்ட மாசுணம் குளிர்ச்சிக்காக வாழை மரத்தைச் சுற்றியிருந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

**'கனைபெயல் பொழிந்த நள்ளென் யாமத்து**
**மண்புரை மாசுணம் விலங்கிய நெறியே**
**மலைஇ மணந்த மயங்கரில் ஆரலிற்'**

— தொல். பொருள்.
இளம்பூரணர்மேற்கோள்

மழை மிகுந்துசெய்து நடுஇரவில் மண்ணைப்போன்ற நிறமுடைய மாசுணம் அடித்து வரப்பட்டு வழியில் குறுக்கே கிடந்ததாக மேற்கோள் பாடலில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

காட்டாற்றில் மலைப்பாம்புகள் அடித்து வரப்படுவதை மலையாளத்தில் இன்றும் காணலாம். மலைப்பாம்பிற்கு மாசுணம் என்ற பெயர், அழுக்குப்பட இருப்பதால் மாசுண்ணப்பட்டது என்ற பொருளில் வழங்கியிருக்கலாம்.

'மாசூண் உடுக்கை' தேவாரத்தில் வந்த வழக்காகும். மாசுணத்தை மண்ணாந்தை, வெண்ணாந்தை யென்று திருநெல்வேலிப் பகுதியில் வழங்குவர்.

மலைப்பாம்பைப் 'பேழ்வாய் கிளர் பெரும் பாம்பி னோடும்' என்று சீவக சிந்தாமணி கூறுகின்றது.

மலைப்பாம்பு வாயை மிக அகலமாகத் திறந்து பெரிய விலங்கையும் விழுங்கிவிடும். நிகண்டுகளிலும் பெரும்பாம்பு என்றழைக்கப்படுகின்றது நாட்டு மக்கள் இதைப் 'பெரிய ஜீவன்' என்று பயபக்தியோடு அழைப் பதையும் காணலாம்

பெரிய தபசிகள் இறந்தால்பெரிய ஜீவன்களாக, மலைப் பாம்புகளாக மாறுவதாக ஒரு நம்பிக்கை நிலவுகின்றது.

பழமொழி நானூற்றில்'பெரியதன் ஆவி பெரிது' என் பதற்கு பெரிய உடம்பில் உள்ள ஆவி பெரிது என்று உரை கூறியுள்ளனர். ஆனால் இந்த இடத்தில் 'பெரிது' என்று குறிப்பிடப்பட்டது பெரும்பாம்பு, மலைப்பாம்பு ஆகும்.

பெரிய பாம்பின் ஆவி பெரியது என்பதே பொருளா கும். ஆவி என்ற சொல் பாம்பைக் குறிக்கும் என்பதில் ஐயமில்லை. வடமொழியிலும் வேறு பல மொழிகளிலும் பாம்பு என்ற பொருளில் 'அகி', ஆவி' என்ற சொற்களின் அடிப்படையில் பெயர்கள் வழங்குகின்றன.

நீல நாகம் கொடுத்த ஆடையை ஆலின் கீழிருந்த இறைவனுக்கு வள்ளல் ஆய் நல்கியதாகச் சிறுபாணாற்றுப் படை கூறுகின்றது.

பாம்பு அடிக்கடி தோலை உரிப்பதால், பாம்பு சாகாவரம் பெற்றதென்று மக்கள் சிலர் கருதினர். சாகா மருந்தாகிய நெல்லிக்காயை அதிகமான் பெற்று ஔவை யாருக்கு வழங்கியது போலவே. நீல நாகம் உரித்த

தோலாகிய ஆடையை ஆய் வள்ளல் சிவபெருமானுக்குத் தந்தான் என்று கொள்ளவேண்டும்.

ஆய்க்குடியும் ஆவியர் குடியும் பாம்பைத் தொழும் குடிகளெனத் தெரிகின்றது. நாகத்தை இன்றும் 'பெரிசு போறதாக்கும்' என்று நாட்டுமக்கள் அது போவதைப் பயபக்தியோடு சொல்லுவர் ஆதலின் 'பெரியது' என்ற சொல் பெரும் பாம்பைக் குறித்து வந்தது என்பதில் ஐயமில்லை.

பாம்பிற்கு உயிர்ச் சக்தியிருக்கின்றதென்று பழங்கால மக்கள் நம்பினர். பாம்பு சாவதில்லை என்றும் கருதினர். பாம்பை வணங்கினால் குழந்தை பிறக்கும் என்றும் நம்பினர். ஆதலின் ஆவி என்ற சொல் உயிரைக் குறித்து வழங்கினாலும் அதே சொல் பாம்பையும் முற்காலத்தில் குறிப்பாக வழங்கியிருக்கலாம்.

பெரும் பாம்பைச் சீவகசிந்தாமணி 'நீல மாசுணம்' என்றழைக்கின்றது. சிறுபாணாற்றுப்படை கூறும் நீலநாகம் 'இராசநாகம்' என்றே கருதவேண்டும். இராச நாகம்தான் கருமையாக ஒளிவிடும் நிறத்தில் இருக்கும். நீல நிறத்தைக் கருமை என்பது சங்கநூல் வழக்காகும்.

யானையின் துதிக்கையை மலைப்பாம்பிற்கு உவமித்துக் கூறுவதைக் காணலாம். மலைப்பாம்பின் கரிய உருவம், தோற்றம் ஏறக்குறைய யானையின் துதிக்கையை ஒத்திருக்கக் காணலாம்.

**'வரிநுதல் வைத்த வலிதேம்பு தடக்கை**
**கல்லூர் பாம்பில் தோன்றும்'** — அகம். 349

**'.............. யானைதன்**
**வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை**
**குன்றுபுகு பாம்பில் தோன்றும்'** — அகம். 391

**'பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்**
**பாம்பு பதைப் பன்ன பரூஉக்கை துமியத்'**
— முல்லைப்பாட்டு 69 - 70

யானையின் துண்டிக்கப்பட்ட துதிக்கை துடிப்பதை மலைப்பாம்பு துடிப்பதோடு ஒப்பிட்டுக் கூறியது அழகிய உவமையாகும். கலலில் ஊர்ந்து செலலும் மலைப்பாம்புடன் ஒப்புமை கூறியுள்ளனர். கல்லில் ஊர்ந்து செல்வதைக் கண்டு இதை மலைப்பாம்பு என்றனர்.

மாமூலர் என்ற புலவர் இந்த மலைப்பாம்பை நன்னனுடைய ஏழில் குன்றிலும் கொண்கான நாட்டிலும் கண்டதைக் கூறியுள்ளார். இன்றும் இப் பாம்பு இங்குள்ளதை நானும் கண்டுள்ளேன். இந்த மலைப்பாம் பைக் காட்டுவெள்ளத்தில் அடித்துக் கொண்டு வந்த போது நான் மாகியில் (பிரெஞ்சுத்திட்டு)இருந்தேன். அது சமயம் எனக்குப் பரிசாகஅளித்திருக்கிறார்கள். அவர்கள் 'பெரிசு' என்று பயபக்தியோடு சொல்லுவர். ஆதலின் 'பெரியது' என்ற சொல்பெரும்பாம்பைக் குறித்தது என்பதில் ஐயமில்லை.

### பிளினி கண்டது!

மலைப் பாம்பைப் பற்றித் தமிழகத்திலிருந்து கற்பனைச் செய்திகள் உரோம நாட்டிற்கும் சென்றதாகத் தெரிகின்றது. பிளினி என்ற உரோமாபுரி நாட்டுக்காரன், இந்தியாவில் பூதாகரமான உயிர் (Dragon) ஒன்று இருப்பதாகவும், அது மிகப் பெரிய பாம்பென்றும் கூறியுள்ளான்.

இந்தப் பாம்பு எவ்வளவு பெரியது என்றால், யானையைக் கூடச் சுற்றி வளைத்துக் கொள்ளும். ஆனால் யானையின் பளுவைத் தாங்க முடியாத மலைப் பாம்பு நசுக்கப்பட்டு இறந்துவிடும். யானையும் இறந்துவிடும்.

பிளினி சொன்ன இக்கதை தமிழ் நாட்டில் இருந்தே சென்றிருக்க வேண்டும். இதே பிளினி தமிழ் நாட்டிற்கும் உரோம நாட்டிற்கும் முதல் நூற்றாண்டில் நடந்து வந்த மிளகு வணிகத்தையும் கூறியிருப்பதை யாவரும் அறிவர். ஆதலின், சங்க நூல்களில் மலைப்பாம்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்தியையே பிளினியும் தமிழ் நாட்டில் இருந்து அறிந்து சொல்லியிருக்கவேண்டும்.

விவிலிய நூலில் வரும் முதல் பாம்பும் மலைப்பாம்பு என்றே கருத வேண்டும் 16 ஆம் நூற்றாண்டில் கெஸ்னர் (Gesner) என்ற அறிவியல் அறிஞர் கூட மலைப் பாம்பு யானைகளைச் சுற்றி வளைத்துக் கொன்று விழுங்குவதாகக் கூறினார்.

மலைப்பாம்பு கயிறு போல் மரத்தில் தொங்கி யானையைத் தாக்குவதாகக் கூறினர். திணைமாலை நூற்றைம்பது எனும் நூற் பாடலும் மாசுணம் 'விடுகயிற்றைப் போல' இருப்பதாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

## மந்தன்

மந்தன் என்ற பெயரில் ஒரு பாம்பு இலக்கண விளக்கம் எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. 'மந்தன் புகர் பெறும் பாந்தள்' என்று (883) கூறுகின்றது. மந்தன் பாம்பைப் போலப் புகர் (புள்ளிகள்) உடைய மலைப் பாம்பு என்று இலக்கண விளக்க மேற்கோள் வரி கூறுகின்றது.

பாந்தள் என்பது மலைப்பாம்புக்கு இலக்கியத்தில் வழங்கும் பெயர். மந்தன் என்பது உழவன் பாம்பு (Eryx Conicus or Russel's Sand Boa) என்பதில் ஐயமில்லை. இந்த உழவன் பாம்பைப் பாம்பாட்டிகள் அறிவர்.

மலைப்பாம்பு இனத்தைச் சேர்ந்த இருதலை மணியனை, மராத்தி மொழியில் 'மந்தோல்' (Mandol) என்றழைப்பது மந்தன் என்ற பெயருடன் ஒத்திருப்பது நோக்கத் தக்கதாகும். மந்தன் என்ற பெயர் மந்தமாக இருக்கும் இந்த இனப் பாம்பின் குணத்தைக் குறித்து வழங்கியதாகும்.

## பாம்பிலும் சாதிகள்!

சீவகசிந்தாமணியில் பாம்புகளைப்பற்றிச் சில செய்திகள் கூறப்பட்டுள்ளன. இருந்தாலும் அவை பெரும்பாலும் வடமொழிச் செய்திகளாகவும், புராணச் செய்திகளாகவும் காணப்படுகின்றன. பாம்புகளில் கூட அந்தணர், அரசர் என்ற சாதிப் பிரிவினையைக் காட்டும் இழிநிலையைக் காண்கிறோம்.

நாகத்திற்கு நான்கு நச்சுப் பற்கள் உள்ளதாகக் கூறியதும் புராணச் செய்தியாகும்.

நஞ்சுடைய எல்லாப் பாம்புகளுக்கும்
நச்சுப் பற்கள் இரண்டேயாகும்.

## கோழிக்கொண்டை போல்!

சீவக சிந்தாமணி 1283 ஆம் பாட்டின் உரையில், பறவைமா நாகம் காலம் நீட்டித்தவழி பாம்பு குறைந்து ஒரு கோழிப் பறவை நீளமாக பறந்து செல்லுமென்று கூறியுள்ளார். இவ்வாறு குறைந்த பாம்பைக் குறையரவு என்று கூறியுள்ளார். இஃது உரையாசிரியர் காலத்து வழங்கின கற்பனைச் செய்தியேயாகும்.

திவாகரம், பிங்கலந்தை நிகண்டுகளில் கூறப்படாத பறவை நாகம் சூடாமணி நிகண்டில் சொல்லப்பட்டுள்ளது. இதைக் 'குக்குட சர்ப்பம்' என்றும் கூறுவர். இந்தப் பாம்பே முதல் வயதில் கோழி போலக் குறையும் என்று கருதினர்.

மலையாளக் காடுகளில் இந்தப் பாம்பு இருப்பதாக நம்புகின்றனர். இதைக் கோழிப் பூலன் என்றழைக்கின்றனர். கோழிக்கு இருப்பது போல் கொண்டை இருப்பதாக நம்புகின்றனர். கோழி போலக் கூப்பிடும் என்றும் கூறுவர். இதைக் கருநாடன் பாம்பு என்றும் கூப்பிடுவர்.

இதே வகையான கதை ஆப்பிரிக்காவிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் வழங்குகின்றது. இந்தப் பாம்பைப் பற்றி விவிலிய நூலும் கூறுவது வியப்பாக உள்ளது

பாம்பின் முட்டையிலிருந்து கோழி அடைகாத்துப் பொரித்து வரும். இந்தப் பாம்பிற்கு கொண்டையிருக்குமாம். இது பறக்குமென்றும் நம்பினர். இதை (Cockatrice) என்று விவிலிய நூலில் அழைத்தனர்.

மலையாளத்தில் கருங்கோழி என்றழைப்பது போல் கோழிப் பெயரால் விவிலிய நூலில் அழைத்தனர். மலையாளத்தில் கருங்கோழி என்றழைப்பது போல் கோழிப் பெயரால் விவிலிய நூலில் இஃது அழைக்கப்படுவதைச் காணலாம்.

ஆனால் இத்தகைய பாம்பு இயற்கையில் வாழ்வதாகத் தெரியவில்லை அடர்ந்த காடுகளில் மரத்தில் வாழும் இராச நாகத்தைக் கண்டு இந்தக் கற்பனைப் பாம்பைப் படைத்தனர் என்று கருத இடமுண்டு.

சங்க இலக்கியத்தில் 'அசுணமா' என்றொரு பெயர் இரண்டே பாடல்களில் வருகின்றது. இது யாழிசையை ஓர்க்கும் அதாவது கேட்கும். மலைக்குகையில் இருக்கும். இதைக் கொல்லப் பறையை முழக்குவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

பிற்காலத்தில், அசுணமா என்பதற்குக் கேகயம் என்று பொருள் கூறியிருந்தாலும் 'அசுணமா' என்பது மாசுணம்

என்று கருத இடமுண்டு. குகையில் வாழ்வதாக மார்சுணத்தைக் கருதல் வழக்கம். பாம்புகள் இசையை ஓர்ப்பதாகப் பழைய நம்பிக்கையும் உண்டு.

நிகண்டாசிரியர்கள் காலத்தில் சாரைப் பாம்பு, கண்ணாடிவிரியன் பாம்பு ஆகியவையும் தெரிந்திருந்தனர். சாரைப் பாம்பைத் 'துண்டம்' என்றனர். கம்பர், சாரைப் பாம்பைச் சேரை என்றழைத்தார்.

மலையாளத்தில் சேரையென்றே அழைக்கப்படுகின்றது. கன்னடத்திலும் 'கேரா' என்றழைக்கப்படுவதால் சாரை என்பது பழையபெயர் அன்று சேரை என்பது தான் பண்டைப் பெயர் என்பது தெளிவாகின்றது.

கண்ணாடி விரியனை நிகண்டுகளில் மண்டலி என்று கூறுவர். மலையாளத்தில் இதே பெயர் இன்றும் வழங்குகின்றது. இது எப்போதும் மண்டலித்து - அஃதாவது வளையமாகச் சுற்றிக் கிடப்பதால் இப்பெயர் பெற்றது.

தொல்காப்பியம், பொருளதிகாரத்தில் மேற்கோளாக 'மரவ நாகம் வணங்கி மாற்கணம்' என்று ஒரு வரி காட்டப்பட்டுள்ளது. மரவநாகம் என்பது தற்போது மலைகளில் காணும் குழிவிரியன் பாம்பினத்தில் சேர்ந்தது. இதை மரநாகம் என்று இட்பொழுதும் அழைக்கிறார்கள்.

மரங்களில் கிளைகளில் தலைகீழாகத் தொங்கும். இது சீறிக்கடிக்க வருவதால் மரநாகம் என்றனர்.

இதைப் புல் விரியன் என்று தமிழிலும் மலையாளத்திலும் கூறுவர்.

முளமண்டலி என்று மலையாளத்தில் வழங்கும் இப்பாம்பை மரநாகம் என்றும் கூறுவர்

இதை ஆங்கிலத்தில் Trimeresurus graminus என்றழைப்பர்.

இதற்கு நஞ்சுண்டு; ஆனால் உயிருக்கு ஊறு செய்யக் கூடிய வலிமை இல்லை.

உடலை மிகவும் வருத்துமாதலால் மான்கள் பயந்து மரவநாகத்தை வணங்கினதாக மேற்கோள் வரி கூறுகின்றது. உருவ நிற ஒற்றுமையால் மரல் செடியை மரநாகம் என்று புதுவைப்பகுதியில் வழங்குகின்றனர்.

அகநானூற்றில் ஒரு பாடலில் கடற்பாம்பு கூறப்பட்டுள்ளது.

**' கழியே ஓதம் மல்கின்று வழியே**
**வள்எயிற்றுஅரவொடு வயமீன் கொட்கும்'**

— அகம். 340

கடற்பாம்புகள் கழிகளில் காணப்பட்டதாகக் கூறியது உண்மையே. இவைகளைக் கழிகளில் அடிக்கடி காணலாம். இவை மிகவும் நஞ்சுடையவை: ஆனால் கடிப்பது மிக அரிதாகும்.

தமிழ் நாட்டில் 'வலைக்கடியன்' என்ற பாம்பே மிகுதியாகக் காணப்படுகின்றது. இந்தப் பாம்பையே அகநானூறு கூறுவதாகக் கருதலாம்.

இந்த வலைக் கடியன் பாம்பு மலங்கு (Eel) மீனைப் பிடித்துண்ணும் என்று அறிஞர் கூறுவர்.

இந்த மலங்கு மீன், பாம்பிற்கு ஒரு தலையைக் காட்டி மீனிற்கு மற்றொரு தலையான வாலையும் காட்டுமென்று நாலடியார் (375) கூறுகின்றது மலங்கு மீனிற்குத் தலையும் உடலும் பாம்பு போன்றிருக்கும்.

நாலடியாரில் இடுநீற்றால் நாகம் படமொடுங்கி அடங்கும் என்று கூறப்பட்டுள்ளது, மந்திரத்தில் வைத்துள்ள நம்பிக்கையைக் காட்டுகின்றது.

விரிபெடையோடு கூடிய நாகத்திற்கு ஆயுள் கெடும் என்ற ஒரு செய்தி நாலடியாரில் காணப்படுகின்றது.

இதற்குப் பொருள் கூறினவர்கள், நாகப் பாம்பு விரியன் பெடையோடு புணர்ந்ததால் உயிரை விடும் என்று கூறியுள்ளனர்.

**உண்மையன்று!**

நாகப்பாம்பும் விரியன் பாம்பும்கூடுவது இயற்கையில் நடைபெறாத செய்தியாகும். நாகப் பாம்பும் சாரைப் பாம்பும் சேர்வதாக ஒரு நம்பிக்கையும் நாட்டு மக்களிடையே நிலவுகின்றது. இதுவும் உண்மையான தன்று.

நாகப்பாம்பு மயிற்பெடையின் முன்னே படம் விரித்தாடினாற் போல் என்று பதுமனார் கூறிய பொருள், 'நாகம் விரிபெடையோடு ஆடி விட்டற்று' என்ற நாலடியார் வரிக்கு மிகப் பொருத்தமானதாகத் தோன்று கின்றது. நாகப்பாம்பைக் சொல்லும் தன்மையுடையது மயில் என்பதை ஏற்கெனவே கூறியுள்ளேன்.

**கற்பனைகளே!**

சாரைப்பாம்பு பசுவின் மடியில் பாலைக்குடிப்பதாகக் கருதுவதும் கற்பனைச் செய்தியே

சாரைப் பாம்பை உருவிய கையால் சமைத்தால் உணவு மணக்கும் என்பதுவும் கற்பனையே.

அதுபோல் கொம்பேறி மூர்க்கன் பாம்பு கடித்துக் இறந்தவர் உடல் எரிபடுவதை மரத்தின் உச்சிக் கொம்பில் இருந்து பார்க்கும் என்பதுவும் கற்பனையே.

தொல்காப்பியம் சொல்லதிகார விளக்கத்தில் சேனா வரையர் 'பாம்புணிக்கல்' விற்கப்பட்டதாகக் கூறுகின்றார். பாம்பின் நஞ்சினை உண்ணும் கல் அவர் காலத்தில் விற்கப் பட்டதாகத் தெரிகின்றது.

வீர சோழிய உரையிலும் 'பாம்பழிவுண்ணி' என்ற பெயர் எடுத்துக்காட்டாக வருகின்றது. இந்தப் பாம்பழிவுண்ணியும் பாம்பின் நஞ்சினை எடுக்கும் கல்லேயாகும். 'அழி' என்பது நஞ்சினைக் குறிக்கின்றது.

இத்தகைய கற்கள் இன்னும் விற்கப்படுவதைக் காணலாம். ஆனால் இவைகள் உண்மையில் பயனற்றவை என்பதைப் பாம்புகளின் நஞ்சைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் கூறுகின்றனர்.

பாம்பின் தலையில் வளரும் மாணிக்கக் கல்லே நஞ்சை எடுக்கும் என்ற நம்பிக்கை பழங்காலத்தில் இருந்து வந்தது. பாம்பு என்று வாயால் கூறினால்கூட ஊறுதரும் என்று கருதும் நாட்டுமக்கள் இதைக் 'கயிறு' என்று அழைப்பதையும் காணலாம். கடும்புலியை 'நரி' என்றும் 'மாமன்' என்றும் அழைக்கும் வழக்குடன் இதை ஒப்பு நோக்கலாம். கொடிதட்டிற்று என்று பாம்பு கடித்ததைப் பற்றிக் கூறுவர். மணிமேகலையில் திட்டிவிடம் என்றும் பாம்பு ஒன்று கூறப்பட்டுள்ளது.

**'திட்டிவிடம் உணும் செய்துயிர் போனால்**
**தீயழல் அவனொடு சேயிழை மூழ்குவை.'**

— மணிமேகலை 9. 49.50

**'திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை**
**விட்டிலையே இது விதியின் வண்ணமே'**

— கம்பராமாயணம் கும்பகர். 30

கண்ணினால் நஞ்சைக் கக்கும் பாம்பென்று மணிமேகலையும், கம்பராமாயணமும் கூறும் பாம்பு கற்பனைப் பாம்பாகத் தெரிகின்றது. நஞ்சை வீசும் பாம்பு ஆப்பிரிக்காவில் உள்ளது. ஆனால் இந்தியாவில் இல்லை.

சங்க நூல்களிலும் பிற்கால நூல்களிலும் கூறப்பட்டுள்ள பாம்புகளின் ஆங்கில, அறிவியல் பெயர்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| நல்லரா வெள்ளரா | Indian cobra | Naga naga |
| அரசரா<br>அராசமாநாகம்<br>(நிகண்டு) | King cobra | Qphiophagus hannah |
| பசும் பாம்பு | Green whip snake or nine snake | Akaetnllanasuta |
| பாடுநடை வழலை | Saw-scaled viper | Echis carinatus |
| மாசுணம்<br>பாந்தள்<br>பெரும்பாம்பு | Rock python | python molurus |
| மந்தன் | Russel's and | Boa Eryx conicus |
| கடற் பாம்பு | Sea-snake | Enydrina valakadien |
| மரவநாகம்<br>(புல் விரியன்) | | Trimeresurus graminus |

## பலவகைப் பாம்புகளின் பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| . | அழகு சர்ப்பம் | 15. | மலைப்பாம்பு |
| 2. | நல்ல பாம்பு | 16. | மண் பாம்புகள் |
| 3. | நாகம் | 17. | இருதலை மணியன் |
| 4. | கட்டுவிரியன் | 18. | ஓடுகாலி |
| 5. | கண்ணாடிவிரியன் | 19. | நெடுஞ்சூவை |
| 6. | சுருட்டைவிரியன் | 20. | பெருஞ்சூவை |
| 7. | கடற்பாம்புகள் | 21. | வெள்ளிக்கோல் வரையன் |
| 8. | பவளப் பாம்பு | 22. | கருவழலைப் பாம்பு |
| 9. | கண்குத்திப் பாம்பு | 23. | ஓலைப்பாம்புகள் |
| 10. | பறக்கும் பாம்பு | 24. | செவிட்டுப் பாம்பு |
| 11. | நாகராசன் | 25. | தட்டுவால் உழவன் |
| 12. | குழிவிரியன் | | மலை உழவன் |
| 13. | கொம்பேறிமூர்க்கன் | 26. | நீர்ப்பாம்புகள் |
| 14. | சாரைப் பாம்பு | | |

குறிப்பு: உயிரியல் பேராசிரியர் ம. வி. இராசேந்திரன், எம். ஏ., அவர்கள் எழுதிய 'நம்நாட்டுப் பாம்புகள்' என்ற நூல் மேற்குறிப்பிட்டுள்ள பாம்புகளைப் பற்றிய விளக்கங்களைப் படங்களுடன் தருகின்றது.

# 7. தவளை
# 8. தேரை
# 9. நுணல்

'தவளை வாய பொலஞ்செய் கிண்கிணி'

— குறுந்தொகை 148

'செங்கட் கருங்கோட்டு எருமை சிறுசுனைய
வங்கட் கழனிப் பழனம்பாய்ந் - தங்கட்
குவளையும் பூவொடு செங்கயன்மீன் சூடித்
தவளையுமேற் கொண்டு வரும்'

— திணைமாலை நூற்றைம்பது 147

'வேனில் தேரையின் அளிய
காண விடுமோ தோழியென் நலனே'

— நற்றிணை 347

'இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையில் கறங்கு நாடன்'

— குறுந். 193

'படுமழை பொழிந்த பயமிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்க'

— அகநானூறு 154

'கார்வான் முழக்கின் நீர்மிசைத் தெவுட்டும்
தேரை ஒலியின் மானச் சீர்அமைத்துச்
சில்லரி கறங்கும் சிறுபல் லியத்தொடு'

— அகம். 301

'அவறொறுந் தேரை தெவிட்ட மிசைதொறும்'

—ஐங்குறுநூறு 453

'வரிநுணல் கறங்கத் தேரை தெவிட்ட
கார்தொடங் கின்றே காலை யினிதின்'

—ஐங்குறுநூறு 468

'வண்டுதா தூதத் தேரை தெவிட்ட'

— ஐங்குறுநூறு 494

'நீருள்ளுந் தோன்றுதி ஞாயிறே அவ்வழித்
தேரை தினப்படல் ஓம்பு'

— கலித்தொகை 147

'தேரைவாய்க் கிண்கிணி யார்ப்ப இயலுமென்'

— கலித்தொகை 36

'தேரைத் தழங்குகுரற் றார்மணி வாயதிர்ப்ப
வார்கலி வானம் பெயறொடங்கிக்- கார்கொள
வின்றாற்ற வாரா விடுவார் கொல் காதல
ரொன்றாலு நில்லா வளை'

— ஐந்திணை எழுபது 23

'அருமை யுடைய பொருளுடையார் தங்கள்
கரும முடையாரை நாடார் எருமைமேல்
நாரை துயுல்வதியும் ஊர குளந்தொட்டுத்
தேரைவழிச் சென்றா ரில்'

— பழமொழி 199

'உறுபுலி ஊனிரை இன்றி ஒருநாட்
சிறுதேரை பற்றியும் தின்னும்'

— நாலடியார் 193

'செழும்பெரும் பொய்கையுள் வாழினும் என்றும்
வழும்பறுக் கல்லரத் தேரை- வழும்பில் சீர்
நூலற்றக் கண்ணும் நுணுக்கமொன் றில்லார்
தேறற்கும் பெற்றி அரிது'

— நாலடியார் 352

'உடும்பு கொரீஇ வரிநுணல் அகழ்ந்து'

— நற்றிணை 59

'ஏறுஉடைப் பெருமழை பொழிந்தென அவல்தோறு
ஆடுகளம் பலறையின் வரிநுணல் கறங்க'

— அகம். 364

'மணலுண் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்'

— பழமொழி 184

தவளையும் தேரையும் நீரையும் நிலத்தையும் உறைவிடமாகக் கொண்டவை. அதனால் அவற்றை Amphibian என்று அறிவியலில் அழைப்பர்.

தவளையை Frog என்றும் தேரையை Toad என்றும் அழைப்பர்.

## இரு உயிரிகள்

தவளையையும் தேரையையும் பிரித்துணர்வது எளிதன்று.

தவளைகள் பெரும்பாலும் நீர்நிலைகளிலே காணப்படும். தேரைகள் தரையிலே பெரும்பாலும் காணப்படும்.

தவளைகள் தாவித் தாவிச் செல்லும். பிற்காலத்தில் செய்யுளிலக்கணத்தில் 'தவளைப் பாய்த்து' என்று தவளையின் குதித்துச் செல்லும் தன்மை குறிப்பிடப் பட்டுள்ளது.

தேரைகள் தரையில் ஊர்ந்து செல்லும். தவளையின் உடல்தோல் வழவழப்பாக இருக்கும். தேரைகளின் தோல் சொரசொரப்பாக இருக்கும். பெரும்பாலும் பதுங்கி வாழும். தேரைக்குத் தவளைபோல நீந்த வராது.

தேரையின் தோலில் முள்ளைப்போல் திட்டுகள் Warts அமைந்ததுபோல இருக்கும். இதன் தோலில் ஒருவகை நஞ்சு சுரக்கின்றது. நஞ்சு இருப்பதால் தேரையைப் பல எதிரிகள் உண்பதில்லை.

தவளைகளும் தேரைகளும் வெப்பமான கோடை காலங்களில் மண்ணிலே புதைந்து உறங்குகின்றன. தவளைகளைவிடத் தேரைகள்தாம் அவ்வாறு மண்ணில் புதைந்து உறங்குகின்றன.

நற்றிணையில் (347) 'வேனில் தேரையின் அளிய' என்று கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். வேனிற் காலத்தில் தேரை மண்ணில் மறைந்து வாழ்வதே குறிப்பிடப்பட்டுள்ளது.

கார்மழை பெற்ற காலத்தில் நீர்நிலை நிறைந்தபோது அதில் தேரை தோன்றி ஒலியெழுப்புவதாக அகநானூற்றிலும் (154, 301) ஐங்குறுநூற்றிலும் (453, 465) ஐந்திணை எழுபதிலும் (23) கூறப்பட்டுள்ளது.

தவளையைவிடத் தேரைதான் மணலுள் மறைந்து நெடுங்காலம் வாழ்கின்றது.

சங்க நூல்களில் நுணல் கூறப்பட்டுள்ளது.
நுணல் ஒருவகைத் தேரையாகும்.

## பாவாணர் கருத்து

மணலுள் முழுகி மறைந்து கிடக்கும் நுணல் தன் வாயாற் பாம்புக்கு இரையாகும் என்று பழமொழி நானூறு (184) கூறியுள்ளது.

நுணல் என்ற பெயர், அது நுணா மரத்தின் காயைப் போன்ற மேடும் பரப்பும் உள்ள திட்டுகள் உள்ள தோல் பரப்பு உடையதால் வந்தபெயர் என்று தேவநேயப் பாவாணர் விளக்கியுள்ளது பொருத்தமானதாகும்.

## அன்னாச்சி

வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப் பட்டு பயிரிடப்படும்அன்னாசிப் பழத்தோல் மேடும் பள்ள மும் இருப்பதால் நுணாவின் பழத்தொடு ஒப்பிடப்பட்டு **அணிநுணா** என்று அழைக்கப் பட்டது.

அணி என்பது அன்னாசிப்பழத்தின் அறிவியற் பெயரான Anona என்தபன் சுருக்கமாகும்.

தவளைகள் பற்றி சங்கநூல்களில் ஓரிரு பாடல்களில் மட்டுமே கூறியுள்ளன. தேரைகளைப்பற்றிப் பல பாடல்கள் உள்ளன. தேரைகள் தவளைகளைவிட மிகுதியாகத் தரையிலும் வீட்டிலேயும் காணப்படுவதால் தேரைகளே பல பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

தேரைகளும் தவளைகளும் அடிக்கடி வாயால் பலத்த ஒலியெழுப்பித் தொந்தரவு கொடுக்கின்றன. தேரை தட்டைப்பறையைப் போலவும் சில்லரி போலவும் ஒலியெழுப்புவதாகக் கூறப்பட்டுள்து

தேரையின் ஒலியைத் தனிப்பட்ட சொல்லால் ‘தெவிட்ட’ என்று அழைத்தனர். மற்றும் தேரையின் குரலைத் ‘தழங்கு குரல்’ என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

தேரையும் நுணலும் கறங்கியதாகவும் கூறப் பட்டுள்ளது. நுணல் ஆடுகளப் பறையொலியைப் போலக் கறங்கும் என்று கூறப்பட்டுள்ளது.

தவளை, தேரையின் வாய்கள் பற்றிச் சங்க நூல்களில் விளக்கப்பட்டுள்ளன.

கிண்கிணியின் வாய் தவளையின் வாயைப் போல இருந்ததாகக் குறுந்தொகையில் (148) கூறப்பட்டுள்ளது. கலித்தொகை (86) தேரையின் வாய் கிண்கிணிபோல இருந்ததாகக் கூறியுள்ளது. பகுவாய்த்தேரை என்று இரு பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

தவளைக்கு வாயில் மேலண்ணத்தில் மட்டும் பற்கள் உண்டு. தேரைக்கு வாயில் பற்களே கிடையாது அதை நன்கு அறிந்தே கிண்கிணிவாய் என்றும் பகுவாய் என்றும் குறிப்பிட்டனர்.

தேரைகள் தவளைகளைவிட உருவில் பெரியவை. சங்க நூல்களில் கூறப்பட்ட தவளை தென்னிந்தியாவில் காணப்படும் Rana hexadactylus அல்லது Rana cyanophictus என்பவையாகும். தேரையை Common Indian toad என்றழைப்பர். இதன் அறிவியற் பெயர் Bufo melanosticus என்பதாகும்.

## பொருள் வேறு

சங்க நூல்களில் வரிநுணல் என்று அறிவியலில் கூறப்பட்டுள்ளது. நாலடியாரில் (352) தேரையைப்பற்றிக் கூறப்பட்டுள்ள செய்தி ஆராயத்தக்கதாகும்.

பெரும்பொய்கையில் தேரை வாழினும் வழும்பறுக்க முடியாதது என்று கூறப்பட்டுள்ளது. வழும்பு என்பதற்கு நாலடியார் தஞ்சை சரஸ்வதிமகால் பதிப்பில், வழுவழுப்பான அழுக்கு என்று கூறப்பட்டிருப்பது இது தவறாகும்.

வழும்பு என்பது தேரையின் தோலில் உள்ள சுரப்பிகளில் இருந்து சுரக்கும் திரவத்திலிருந்து தோல் வழுவழுப்பானதைக் குறிப்பதாகும்.

## புலிக்கு இரை

நாலடியாரில் (193) வலியபுலி வழக்கமாக உண்ணும் இரை கிடைக்காதபோது சிறு தேரையைப் பற்றியுண்ணும் என்று கூறப்பட்டுள்ளது. இது உண்மையான செய்தியாகும்.

புலிகள் வேட்டையில் இரை கிடைக்காது பசித்திருக்கும்போது, எளிதாகக் கிடைக்கும் தவளைகள், தேரைகளைப் பிடித்துத் தின்னும் என்பதை வேட்டையாளர் கண்டு எழுதியுள்ளனர்

பழமொழி நானூறு தஞ்சை சரஸ்வதிமகால் பதிப்பில் விளக்க உரை 'ஒருநாள் ஒரு நாழிகை இதற்குப் பசிநோவு பொறாமல் உச்சிராயத்தினால் பணியானைத் தின்று அச்சத்தி கொண்டு மிருகம் பிடிக்க எண்ணும்' என்று கூறப்பட்டுள்ளது.

நூற்பதிப்பில் அடிக்குறிப்பில் உச்சிராயம் என்பதற்கு மனவெழுச்சி என்றும் பணியான் பாம்பு (பிரதியிலிருந்தபடியே எழுதப்பெற்றது) என்றும் கூறப்பட்டுள்ளது

பணியான் என்பது தேரையேயாகும் இது பேச்சு வழக்குப் பெயராகக் தெரிகின்றது. பணியான் பாம்பாக இருக்க முடியாது, புலி பாம்பைத தின்னுவதில்லை,

## ஒரு கருத்து

சங்க நூல்களில் ஒரே ஒரு பாட்டில் (நற்றிணை 59) நுணலை மனிதர் தின்பதைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

உடும்பைக் குத்தியெடுத்து நுணலை அகழ்ந்து எடுத்து ஈயலை அதன் புற்றைச் சிதைத்து எடுத்து உணவுக்குக் கொண்டு சென்றது கூறப்பட்டுள்ளது.

பறையரில் ஒரு பிரிவார் தவளையைத் தின்னுவதால் 'தவளைத்தின்னி என்றழைக்கப்பட்டதைச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி கூறியுள்ளது.

மேலைநாட்டினர் பச்சைத் தவளையின் பின்னங்கால்களைச் சிறந்த உணவாக உட்கொள்ளுகின்றனர்.

கேரளத்திலிருந்து மேலைநாடுகளுக்குத் தவளைக்கால் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

புதுவை மாநிலத்தில் பிரெஞ்சு நாட்டிற்குச் சென்று அங்குள்ள உணவுவகையை உண்டு பழகிய தமிழர் தவளையை உண்கின்றனர். புதுவைத் தெருக்களில் 'மண்டூக்' 'மண்டூக்' என்று கூவித் தவளையை விற்பதைக் காணலாம். தவளை, தவளை என்று கூவி விற்பது இழிவாகக் கருதப்பட்டு **மண்டூக்** என்ற வடமொழிப் பெயரால் கூவி விற்கப்படுகின்றது.

## நோய்தான்!

தேங்காயில் தேரை மோந்த காய் என்று ஒருவகை உள்ளீடற்ற காயைக் கூறுவர். இது ஒருவகைச் சத்துக் குறைவால் ஏற்படும் நோயென்று கண்டுபிடித்துள்ளனர். ''தேரையார் தெங்கிள நீருண்ணார் பழிசுமப்பர்'' என்று ஒரு பாடல்வரி தமிழ் நாவலர் சரிதத்தில் (74) கூறப்பட்டுள்ளது.

''தெங்குண்ட தேரை வழிப்பட்டேன் யான்'' என்று முத்தொள்ளாயிரப் பாடல் (27) கூறுகின்றது. தெங்குக்கு நோயை உண்டாக்கும் தேரையை மண்டூகரி என்றும் கூறுவர்.

தேரை மரத்தில் ஏறாது. தரையில் வாழ்வதாகும். ஆனால் தவளைகளில் ஒருவகை மரத்தில் ஏறும். அதை மரத்தவளை என்பர் தென்னைமரத்தில் மரத்தவளை ஏறியிருக்கலாம். அதைத் தேரையென்றுகருதி அது தேங்காயை உண்டதாகத் தவறாகக் கருதினார்.

மரத்தில் காணப்படும் தவளையை Chunam or Indian tree frog என்று ஆங்கிலத்திலும் Rhacophorus maculata என்று அறிவியலிலும் அழைப்பர். தென்னைமரத்தில் தேரையிருப்பதாகத் தமிழ்நூல்களில் கூறியிருப்பினும் அது உண்மையில் மரத்தில் வாழும் தவளையாகும்.

நுணலை Cacopus Systema என்றழைப்பர்.

## பொன்வண்ணத்தேரை

பெருங்கதையில் உதயணன் நீருற்றுள்ள இடத்தைத் காட்டத் தோண்டும்போது பரிமுகம் பொறித்த பொன் னிறத் தேரை கிடைக்குமாயின் அது நீருற்றுள்ள இட மென்று கண்டுகொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும்.

**''அகழும் பொழுதில் நிகழ்வ கேண்மதி**
**இருமுழத் தெல்லையுள் பரிமுகம் பொறித்த**
**பொன்நிறத் தேரை போதரும் பின்னர்''**

—பெருங்கதை *125-62-66*

பெருங்கதையில் பொன்னிறத் தேரையென்று கூறிய தேரை ஒருவகைத் தவளையாகும். அதற்குப் பொன்னிறம் உண்டு.

சிறுவெண் தேரையார் என்ற புலவர் சங்கநூல்களில் புறநானூறு (362) பாட்டைப் பாடியவராவர். அவர் தேரையார் என்றழைக்கப்படுவதால், பௌத்தர் என்று கூறுவர்.

'தேரே' என்பது பௌத்த குருமார்களைக் குறிக்கும்.

ஆனால், 'சிறுவெண் தேரையார்' என்று அடை மொழியிட்டு வழங்குவதால், அப்பெயர் பௌத்த குருவின் பெயரென்று கருதுவதற்கு இடமில்லை.

அவர் பாடிய பாடலில் 'சிறுவெண்' தேரையைப் பற்றிக் கூறியிருக்கலாம். அப்பாட்டு சிறு வெண் தேரையையே அவருக்குப் பெயராக வைத்திருக்கலாம்.

தேரைகளிலும் தவளைகளிலும் நிறம்தரும் பொருள் தோலில் சிலசமயம் இல்லாததால் Lack of Pihgmen tation வெண்மையாகத் தோன்றலாம். இதை ஆங்கிலத்தில் Albinism என்று கூறுவர்.

தேவநேயப்பாவாணர் தேரையென்ற பெயர் திரைந்த தோலையுடையதால் வந்தது என்று கூறியுள்ளார்.

தவளைவகையில் சொறியன் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். இது தேரையாகும். மொங்கான் என்று மிகப் பெரிய ஒருவகைத் தவளையைக் குறிப்பிட்டுள்ளார். இது Bullfrog என்று ஆங்கிலத்திலும் Rana tigrina என்று அறிவியலிலும் அழைப்பர்.

இதுதான் தவளை வகையில் மிகப்பெரியது. பறவைகளையும் பாம்புகளையும் தாக்கும் தன்மை வாய்ந்தது.

# 10. நண்டு

சங்க நூல்களில் இருவகை நண்டுகள் கூறப்பட்டுள்ளன.

கடல் நண்டு சங்க நூல்களில் அலவன் என்று அழைக்கப்படுகின்றது. அலவன் என்று பல பாடல்கள் நண்டை அழைத்தாலும் அந்த நண்டைப் பற்றிப்போதுமான செய்திகள் இல்லை.

''துறைபோய் மருங்கிற் போகிற மாக்கவை மருப்பின்
இருஞ்சேற்று ஈர்அளை அலவன் நிவப்ப''

—அகம். 350

''எக்கர்ப் புன்னை இன்னிழல் அசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி''

—அகம் 20

''அளைவாழ் அலவன் கண்கண் டன்ன
துளைவாய் துரந்த துரப்பமை பாணி''

—பொருநராற்றுப்படை வரிகள் 9-10.

அலவனின் முன்கால் கொடுக்குகள் 'மாக்கவைமருப்பு' என்று அகப்பாடலில் (350) அழைக்கப்பட்டுள்ளது.

கடற்கரையில் சிறுமிகள் அலவனைத் துரத்திப் பிடிப்பதை 'அலவனாட்டுதல்' என்ற துறையாகச் சங்கப் பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

## உவமைகள்

அகப்பாட்டு (20) சிவந்த முதுகுடைய (செக்கர் ஞெண்டு நண்டைக் கூறியுள்ளது. பொருநராற்றுப்படையில், யாழ்கருவியில் துளையில் போடப்பட்ட ஆணியைப் போன்று அலவனின் நீண்ட கோல் போன்று நீட்டிக் கொண்டிருக்கும் உறுப்பின் நுனியில் உள்ள கண்ணோடு (Stalked eye) ஒப்பிடப்பட்டுள்ளது.

**''செக்கரும்புள்ளித் திகிரி அலவனொடியான்''**

—கலித்தொகை 146

சிவந்த திறத்தையும் புள்ளிகளையும் உடையதான தேருருண் போன்ற நண்டு கலித்தொகையில்(146)கூறப்பட்டுள்ளது. இந்த நண்டை Matuta lunaris என்று அறிவியலில் அழைப்பர். சிறுமிகள் விளையாடும் கடற்கரை நண்டு அறிவியலில் Ocypoda macrochera என்றழைக்கப்படும்.

''வேப்புநனை யன்ன நெடுங்கண் நீர் ஞெண்டு'' அகநானூற்றில் 176) கூறப்படும். வேப்பமரத்தின் அரும்பு போன்ற காம்புடன் கண் உள்ள நண்டும் பொருநராற்றுப்படை கூறும் இரும்பு ஆணி போன்ற கண்ணுடைய நண்டும் Stalcked eyedorab அறிவியலில் Ocypoda Platytarris என்றழைக்கப்படும்.

**''செங்நெலஞ் செறுவிற் கொண்டு களவன்**
**கண்ணக மண் அளைச் செல்லும் ஊரன்''**

—ஐங்குறுநூறு 27

**''வித்திய வெண்முளை களவன் அறுக்கும்''**

—ஐங்குறுநூறு 29

ஐங்குறுநூற்றுப் பாடல்கள் (27, 29) நெல் விளையும் கழனியில் களவன் என்ற நண்டு மண்ணால் ஆன துளையில் நெற்கதிர்களைக் கொண்டு சேர்ப்பது கூறப்பட்டுள்ளது. விதைத்த பயிரின் முளைத்த முளையைக் களவன் அறுப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இது நன்னீர் நண்டு ஆகும். இந்த நண்டு அறிவியலில் Paratelphus குடும்பத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும்.



# 11 இறவு

இக்காலத்தில் இறால் என்று வழங்கப்படுவது இறா, இறவு என்று சங்கநூல்களில் வழங்கப்பட்டது.

**''மாயிரும் பரம்பகம் துனிய நோக்கிச்**
**சேயிறா எறிந்த சிறுவெண் காக்கை''**

— நற்றிணை 31

**' கழிச்சேறு ஆடிய கணைக்கால் அத்திரி**
**குளம்பினும் சேயிறா நடுங்கின''**

— நற்றிணை 278

**''பெருஞ்சேய் இறவின் துய்த்தலை முடங்கல்''**

— நற்றிணை 358

நற்றிணைப் பாடல்களில் 'சேயிறா' என்று அழைக்கப் பெற்றுள்ளது. இதன் காரணமாகவே மலையாளத்தில் செம்மீன் என்றழைக்கப்பட்டது.

## வேறு வேறு

இறாவை மீன் என்றழைத்தாலும் அது மீன் இனத்தைச் சேர்ந்ததன்று.

நண்டும் இறாவும் கணுக்காலிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவை. Crustacea என்ற அறிவியல் குடும்பத்தைச் சேர்ந்தவை.

நற்றிணை 458 ஆம் பாடலில், ''பெருஞ்சேய் இறவு'' என்று பெரிய இறா வகை கூறப்பட்டுள்ளது. அது அறிவியலில் Daneus carinatus என்ற அறிவியல் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். சேயிறா Metapaneus Sppமற்றும் Parapancus spp ஆகிய குடும்பத்தைச் சேர்ந்ததாகும். மேலும்வெள்ளை நிறமுடைய ஒருவகை இறாவும் கூறப்பட்டுள்ளது.

**''சிறுவெள் இறவின் குப்பை யன்ன',**

—அகம். 152

**''கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்**
**வெள்இறாக் கனவும் நள்ளென் யாமத்து''**

— அகம். 170

வெள்ளிறாவை Panaeus indicus என்ற குடும்பத்தைச் சேர்ந்ததாக அறிவியலில் கூறுவர். கருப்பு இறாவும் உண்டு. ஆனால், அது, சங்கநூல்களில் கூறப்படவில்லை.

**''.........நுடக்கலின் இறவுக் கலித்துப்**
**பூட்டுஅறு வில்லின் கூட்டுமுதல் தெறிக்கும்''**

— அகம். 96

**''புலவுநுனைப் பகழியுஞ் சிலையுமான**
**செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்''**

—பெரும்பாணாற்றுப் படை, வரிகள் 269-70

நீர்தேங்கிய நெல்வயலிலும் நன்னீர் இறா இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பச்சைநிறமான இறவு வளைந்த வில், அம்பு எய்திய பின் நிமிர்ந்து தெறிப்பது போலப் பச்சிறா பிறழ்ந்ததாகப் பெரும்பாணாற்றுப்படை கூறியுள்ளது.

நன்னீர் இறாவை Macrobrachium Rosen bergui என்று அழைப்பர். இயற்கையில் உள்ள ஏறக்குறைய எல்லா இருவகைகளையும் சங்கநூல்கள் கூறியுள்ளன.

# 12 நத்தை

சங்க நூல்களில் நத்தை சில பாடல்களில் கூறப்பட்டுள்ளது. சங்க நூல்களில் நந்து என்றழைக்கப்படும்.

''பிணர்மோட்டு நந்தின் போழ்வாய் ஏற்றை
கதிர்மூக்கு ஆரல் கள்வனாக
நெடுநீர்ப் பொய்கை துணையொடு புணரும்''

—அகம். 246

''புழற் கால்ஆம்பல்அகலடை நீழற்
கதிர் கோட்டு நந்தின் சுரிமுக வேற்றை
நாகிள வளையோடு பெண்மணப் புகூதும்,
நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்'

''கள்ளியங் காட்ட கடத்திடை உழிஞ்சில்
உள்ளூண் வாடிய சுரிமூக்கு நொள்ளை
பொரியரை புதைந்த புலப்புகொள் இயலின்''

அகம். 53

''நந்து நரையோடு செவ்வரி யுகளும்''

பதிற்றுப்பத்து 23-21

''பழன யாமை பாசறைப் புறத்துக்
கழனிக் காவலர் சுடுநந்து உடைக்கும்'

நற்றிணை 28

**''அந்தண் அருவி மலைநாட சேணோக்கி**
**நந்து நீர் கொண்டதே போன்று''**

பழமொழி நானூறு 200

**'——————————————ஆகுமோ**
**நந்துமுத எல்லாம் கணக்கு'**

சங்க நூல்களில் இப்பொழுது வழங்கும் நத்தை என்ற பெயர் வழங்கப்படவில்லை. நந்து என்றே வழங்கிற்று, அகநானூற்றுப்பாடலில் பிணர்மோட்டு நந்து என்று அழைக்கப்பட்டுள்ளது.

பிணர் என்பது அதன் ஓட்டிலுள்ள சுரிவுகளைக் குறிக்கும். நெடுநீர்ப் பொய்கையில் வசிப்பதாகக் கூறப்பட்டிப் பதால், இது நன்னீரில் வாழ்வது என்பது தெரிகின்றது.

கள்ளிக் காட்டில் உழிஞ்சில் மரத்தின் பட்டைகளில் புதைந்து கிடந்த உள்ளூண் வாடிய 'சுரிமூக்கு நொள்ளை' என்று நத்தை கூறப்பட்டுள்ளது.

## வண்டு அல்ல

சுரிமூக்கு நொள்ளை என்பதற்கு **நாகரவண்டு** என்று நிகண்டுகளில் பொருள் கூறப்பட்டுள்ளது.

நத்தையை வண்டென்று கூறுவது பொருத்தமாயில்லை. வண்டு ஒரு வகைப் பூச்சியாகும். புறநானூற்றில் (264) நத்தையைப்பற்றிக் கூறப்படும் செய்தி ஆராயத் தக்கது.

## பொருந்துமா?

கதிர் கோட்டு நந்தின் சுரிமுகமுடைய ஆண் நாகிள வளையொடு பெண்மணம் புகும் என்று கூறப்பட்டுள்ளது. வளை, சங்க நூல்களில் கடலில் வாழும் சங்கைக் குறித்தே பல பாடல்களில் வழங்கியுள்ளது.

புறநானூற்றில் நத்தை நீர்திகழ் கழனியில் இருப்பதாகக் கூறப்பட்டிருப்பதால், அது நன்னீரில் வாழ்வதாகும் என்பது தெளிவாகின்றது. ஆனால் வளையோ கடலில் வாழ்வது.

கடலில் வாழும் சங்கோ, நத்தை வகையோ நன்னீரில் நிலத்தில் வாழும் நத்தையோடு இணை சேர்வதில்லை என்று தெரிகின்றது. ஆதலின் இச் செய்தி மேலும் ஆராயத்தக்கது. நத்தையும் வளையும் இணைசேர வாய்ப்பே யில்லை.

பதிற்றுப்பத்தில் நந்துநாரை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நாரை நத்தைகளைத் தின்பதால் நந்துநாரை என்றழைக்கப்பட்டுள்ளது. நிகண்டுகளில் நந்து என்றாலே நாரை யென்று பொருள் பெறுவது கூறப்பட்டுள்ளது. இதை இக்காலத்தில் நத்தை குத்தி நாரை (Open bill stork) என்றழைப்பர்.

## உணவாகின்றது!

இதன் அலகு நடுவில் சேராது நத்தைகளை உடைக்கத் தகவுடையதாக உள்ளது.

சங்க காலத்தில் நத்தையை உண்டனர் என்பதும் தெரிகின்றது. நற்றிணையில் சுட்ட நத்தையை ஆமையின் முதுகில் போட்டு உடைப்பது கூறப்பட்டுள்ளது. இக் காலத்திலும் மூல நோயைக் குணமாக்க இந்நத்தையை உண்கின்றனர்.

சீவகசிந்தாமணியில் நத்தையைப்பற்றி அரிய செய்தி காணப்படுகிறது.

'நித்திலப் பந்துடனின்று பாதிரி
ஒத்த பூ வுடற்றிய நாவினுகினார்
நத்துநீர் நாரை வெறியத் தண்கடல்
வைத்தெழு திரையெனப் பறவை யாலுமே'

— சிந்தாமணி 52

நத்தையை நாரையின் நந்துநீர் மேலெறிந்ததாகக் கூறப்பட்டிருப்பதால், அந்த நாரை நத்தைக்குத்தி நாரையே என்பதில் ஐயமில்லை. நத்தை முத்துப்போல் முட்டையிடுவதும் உண்மையே.

## நாவின் அமைப்பு

நத்தையின் நாக்கு நுட்பமாகச் சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளது. நத்தையின் நாக்கு சொரசொரப்பானது. அதனால் இலைகளைச் சுரண்டித் தின்ன முடிகின்றது. பாதிரிப்பூவிற்கும் பூவிதழில் சொரசொரப்பான மெல்லிய மயிர்களிருப்பதைக் கூர்ந்து பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். ஆதலின் பாதிரிப்பூப் போன்ற நத்தையின் நாக்கு என்பது பொருத்தமானதே.

பழமொழியில் நத்தை சேணோக்கி நீர்கொண்டு செல்வதாகக் கூறப்பட்டுள்ளது. பாம்புக்குத் தண்ணீர் கொண்டு செல்வதாக இக்காலத்தில் கூறுவர்.

நத்தை சென்ற வழிகளில் சுவடு சிறிது நேரம்தான் தெரியும். இதையே 'நந்து உழுததெல்லாம் கணக்கா' என்று பழமொழி கூறியுள்ளது.

## வாழ்விடங்கள்

நத்தைகளில் சில வடநாட்டிலும் வாழ்கின்றன. தென்னிந்தியாவில்நீர்க்கழனிகளில்நெல்விளையும் நிலத்தில் வாழும் நத்தைகள் அறிவியற்படி Pila virus, pila werailame pila mobaldiane ஆகும். அவைதாம் சங்க நூல்களில் பொதுவாகக் கூறப்பட்ட நத்தையாகும்.

குளத்தில் ஆம்பல் இலை நிழலில் வாழ்வதாக (புறம். 264) கூறப்பட்டுள்ளது. இந்த நத்தை (Lymna, planorbis) ஆகிய குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.

நத்தைகளில் உழிஞ்சில் மரத்தில் காணப்பட்டதாகக் கூறப்படும் (அகம். 53) 'சுரிமூக்கு நொள்ளையைப் போன்றவை தரை வாழ் நத்தைகளாகும்.

நத்தைகள் Gastro poda என்ற பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவை. நிகண்டுகளில் நத்தைக்குச் **சுரிமுகம்** என்ற சொல் காணப்படுகின்றது. சங்க நூல்களிலும் 'சுரிமுகம்' என்ற பெயர் வழங்கியுள்ளது.

உழிஞ்சில் மரத்தில் வாழும் நத்தை (அகம். 53) யான சுரிமூக்கு நொள்ளை தரைவாழ் நத்தை இனத்தைச் சார்ந்ததாகும்.

இந்த நத்தைகள் Helix ariophonta, xestina achatina என்ற குடும்பங்களைச் சார்ந்தவையாகும்.



# 11 சங்குகள்

சங்க நூல்களில் மீன்கள், திமிங்கிலங்கள் தவிர, கடலில் வாழும் சில சிறிய உயிரினங்களும் கூறப் பட்டுள்ளன. அவைகளில் முத்துச்சிப்பியும், சங்கும் முக்கியமானவையாகும்.

சங்க நூல்களில் சங்கு வளையென்று அழைக்கப் பட்டது. சங்குகளில் எளிதாகக் கிடைக்கும் சங்கைத் தவிர அரிதான வலம்புரிச் சங்கும் தனியாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் **பணிலம்** என்ற சங்கும் கூறப்பட்டுள்ளது.

## 1. வளை

**'வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்'**

நற்றிணை 331

**'வான் சுறா வழங்கும் வளைமேய் பெருந்துறை'**

—அகம். 200

**'பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பில்'**

— மதுரைக் காஞ்சி, வரி375

**'அவ்வளை வெரிநின் அரக்கு ஈர்த்து அன்ன'**

— நற்றிணை 25

**'கடற்கோ அடுறுத்த. வரம்போல்வளை'**

— ஐங்குறுநூறு 194

**'வாளரம் பொருத கோள் ஏர் எல்வளை**
**அகன் தொடி செறித்த முன்கை'**

— *நற்றிணை 77*

**'வளைபடு முத்தம் பரதவர் பகரும்'**

— *ஐங்குறுநூறு 195*

கடலின் அடிப்பரப்பில் சங்குகள் மேய்வது மதுரைக் காஞ்சியில் கூறப்பட்டுள்ளது. வளைகளை வேட்டை யாடக் கடலில் செல்வது நற்றிணையில் கூறப்பட்டுள்ளது.

சங்ககாலத்தில் சங்குகளை நீரில் பரதவர் மூழ்கி எடுத் தனர். வாளரம் கொண்டு சங்குகளை வெட்டி வளையல் கள் செய்து மகளிர் அணிந்தனர். இக்காலத்தில் சங்கு வளையல்களைப் பயன்படுத்துவதில்லை. ஆனால், சங்க காலத்தில் சங்கு வளையல்களையே மகளிர் அணிந்தனர் என்பது தெரிகின்றது. அதற்குத் தூய வெண்மையான சங்குகள் பயன்பட்டன.

'அவ்வளை வெரிநின் அரக்கு ஈர்த்தன்ன' என்று வரும் நற்றிணை (25) வரிகளில் வெள்ளை நிறமான சங்கின் வெளிப்புறத்தில் அரக்கை ஈர்த்ததுபோல, வரி செய்து' என்று கூறப்பட்டுள்ளது.

பரதவர்கள் வளையில் அதாவது சங்கில் விளையும் முத்தை விற்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

சங்குகளிலும் முத்து தோன்றுவதுண்டு. 'ஏர்னெஸ்டு எமிங்வே' என்ற புகழ் பெற்ற ஆங்கிலப் புதின ஆசிரியர், பகாமாஸ் (Bahamas) கடலில் கிடைத்த சங்கு முத்துக்கள் (Conch Pearls) அரசுடைமையாக்கப்பட்டு இங்கிலாந்து அரசிக்கு அனுப்பப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளார்.

### தரம் என்ன?

ஆனால், இந்த முத்து கடற்சிப்பியில் கிடைக்கும் முத்தைவிட மிகவும் தாழ்ந்தது. ஆனால் சங்குகளில்

முத்து உண்டாவது மிக அரிதானதால் சங்கு முத்து அக்காலத்தில் உயர்ந்ததாகக் கருதப்பட்டது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியைக் கோவலன் 'வலம்புரிமுத்தே' என்று புகழ்வதைக் காணலாம்.

வலம்புரியும் ஒருவகைச் சங்காகும். ஆனால் மிகமிக அரிதில் கிடைப்பது.

அவ்வாறு மிகமிக அரிதாகக் கிடைக்கும் வலம்புரிச் சங்கின் முத்து எல்லா முத்துக்களைக் காட்டிலும் சிறந்த முத்தாகச் சிலப்பதிகாரத்தில்கருதப்பட்டது. ஆனால்இந்த முத்தும், சிப்பி முத்தைப் பார்க்கில் தாழ்ந்ததேயாகும்.

## 2. பணிலம்

**'பறைபடப் பணிலம் ஆர்ப்ப விறைகொள்பு'**

—குறுந்தொகை 15

**'இருதலைப் பணில மார்ப்ப சினஞ்சிறந்து'**

—மதுரைக் காஞ்சி, வரி- 380

**'முந்தை யாமஞ் சென்ற பின்றைப்**
**பணிலங் கலிஅவிந் தடங்கக் காழ்சாய்ந்து'**

—மதுரைக்காஞ்சி-வரி 621

பணிலம் என்பது அக்காலத்தில் கோயில்களில் ஊதும் பெரிய சங்குகளாகும். மதயானை வருவதை அறிவிக்க இருதலையிலும் பணிலம் ஊதப்பட்டதை மதுரைக்காஞ்சி கூறியுள்ளது.

இரவில் யாமத்தை அறிவிக்க, பணிலத்தை ஊதினதையும் மதுரைக் காஞ்சி கூறியுள்ளது. போர்க்களத்தில் சங்கு ஊதியதைக் குறுந்தொகை கூறியுள்ளது.

பணிலம் சங்கினின்று வேறுபட்டதன்று. முக்கியமாகக் கோயில்களில் ஓசைஎழுப்புவதற்காகப் பயன்பட்ட பெரிய சங்கே பணிலமாகும்.

## 3. வலம்புரி

வலம்புரி, சங்கு வகைகளில் ஒன்றாகும். சங்குகளில் இடம்புரி, வலம்புரி என்று இருவகைகள் உண்டு. இடம் புரிச்சங்கு எளிதில் கிடைப்பதாகும். ஆனால், வலம்புரிச் சங்கு மிக அரிதாகவே கிடைக்கும்.

**'இலங்கு நீர்ப் பரப்பின் வளைமீக கூறும்**
**வலம்புரி யன்ன வசை நீங்கு சிறப்பின்'**
—*பெரும்பாணாற்றுப்படை, வரிகள் 34-35*

**'வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்தும்'**
—*நெடுநல்வாடை, வரி 142*

**'விருந்தில் பாணர் விளரிசை கடும்ப**
**வலம்புரி வான்கோடு நரலும்'**
—*நற்றிணை 172*

**'வலம்புரி அழுத வார்மணல் அடைகரை**
**புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்துறை**
**அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து**
**தழையுடை பொலிந்த கோடேந்து அல்குல்'**
—*அகம். 210*

**'வயங்குகதிர் வயிரமொடு வலம்புரி ஆர்ப்ப'**
—*பதிற்றுப்பத்து 67*

**'திரங்குரல் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப'**
—*அகம். 397*

**'துணை புணர்த் தெழுதருந்த தூற்ற வலம்புரி'**
—*கலித்தொகை*

## செல்வம் பெருகும் !

வலம்புரிச்சங்கு, சங்க காலத்திலேயே மங்கலப் பொருளாகவும் எல்லா நலங்களையும் செல்வங்களையும்

தேடித்தரும் அரியதொரு பொருளாகவும் கருதினரென்பது தெரிகின்றது. இன்றும் பலர் வலம்புரிச் சங்கு வீட்டில் இருந்தால் செல்வம் குவியும் என்று நம்புகிறார்கள்.

கண்ணன் ஏந்திய சங்கு வலம்புரியென்றும் அவன் உடலில் பொறித்த குறி வலம்புக் குறி என்பதும் வைண வருடைய நம்பிக்கையாகும்.

## அபிடேகப் பாத்திரம்

இது தமிழக வைணவர்களிடையே மட்டும் காணப் படுவதால் இது சங்க காலத்திலிருந்த பொது நம்பிக்கை யிலிருந்து வளர்ந்த கருத்தாகத் தெரிகின்றது.

இன்னும் தமிழ்நாட்டு இந்துக்கோயில்களில் தெய்வச் சிலைகளுக்கு 'சங்காபிஷேகம்' நடத்தப்படுகின்றது. இந்த வழிபாட்டுமுறை முற்றிலும் திராவிடர்க்கு, தமிழர்க் குரியது. இதை இப்போதும் ஆரிய பிராமண குருக்கள் பின்பற்றுகின்றனர் அதற்குரிய சான்று அகநானூற்று 210-ஆம் பாடலில் உள்ளது.

இப்பாடலில் கொற்கைத்துறையில் பழையர் மகளிர் தழையணிந்து அந்த உடையோடு கடல்தெய்வத்தை முத்தும் வலம்புரியும் சொரிந்து வழிப்பட்டதாகக் கூறிய தைக் கவனிக்கவேண்டும்.

இன்றும் தமிழ்நாட்டில் தெய்வத்திருவுருவங்களுக்கு நீர் அபிஷேகம், பால் அபிஷேகப், இளநீர் அபிஷேகம், புனுகுநெய்பூசுதல், சங்காபிஷேகம் ஆகிய எல்லாம் திராவிடருடைய ஆகம வழிபாடுகளேயாகும். ஆரிய பிராமணர்க்கு அவிப்பலி வழிபாடான 'ஹோமத்தை'த் தவிர வேறு இருந்ததில்லை.

அகநானூற்றில் வலம்புரி சொரிந்த செய்தி மிக அரிய வழிபாட்டுச் செய்தியாகும்.

## இடம்புரியே!

இக்காலத்தில் கோயில்களில் பெரும்பாலும் இடம் புரிச்சங்குகளே (Dexctral Shell) சொரியப்படுகின்றன. அவை ஆயிரம் முதலிய எண்ணிக்கையில் சொரியப்படு கின்றன.

ஆனால், வலம்புரிச் சங்குகள் அத்தகைய கூடுதல் எண்ணிக்கையில் சொரியப்படுவதில்லை. ஏனெனில் அவை மிகக்குறைவாகவே, மிக அரிதாகவே கடலில்கிடைக் கின்றன.

சங்குகளை அறிவியலில் Turbinella pyrum அல்லது Zanchus pyrum என்றழைப்பர். இந்தச் சங்குகள் வலம் புரியை Clockwise Sinistral Shell என்றும் இடம்புரியை Anticlockwise Dextral Shell என்றும் அழைப்பர். ஆனால் அவையிரண்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு மாறு உருவங்களேயாகும்.

## பிறப்பிடம்

இந்தியாவிலேயே சிறந்த சங்குகள் தமிழ்நாட்டுத் தென்கிழக்குக் கடற்கரையில் தூத்துக்குடி அருகிலும் இராமநாதபுரம் மாவட்டக் கரையிலும் நிறையக்கிடைக் கின்றன. அவை ஏறக்குறைய முழுவதும் மேற்குவங்காளத் திற்கு ஏற்றுமதியாகின்றன.

## சேருமிடம்

மேற்குவங்காளத்தில் வளையல்களாக மாற்றப்பட்டு மணமான பெண்களால் அணியப்படுகின்றன. தமிழ் நாட்டில் தாலிபோல அங்கு சங்கு வளையல்கள் மணமான பெண்களுக்கு மங்கலப்பொருளாகக் கருதப்படுகின்றன. கணவன் இறந்தால் சங்கு வளையல்களை மனைவி ஒடித் தெறிவாள்.

வடமொழி நூல்களில் 'வளைய' என்ற சொல் வளையல்களைக்குறித்து வழங்கியுள்ளது. இது 'வளை' என்ற தமிழ்ச்சொல்லிலிருந்து வந்தது.

வளை என்றால் சங்கு என்றும் சங்கால் ஆன வளையல் என்றும் தமிழ்மொழியில்தான் பொருள் உள்ளது.

இப்பி ஆயிரஞ் சூழ்ந்தது இடம்புரிச் சங்கு என்று கூறப்பட்டுள்ளது. இப்பி சங்க நூல்களில் முத்துச் சிப்பியையே குறித்து வழங்கிற்று.

இப்பி இரட்டைவோட்டு கடலுயிரியான மெல்லுடலி யாகும்.

## தவறானது!

சங்கு ஒற்றையோட்டு மெல்லுடலியாகும். ஆதலின் இப்பியாயிரம் சூழ்ந்தது இடம்புரியென்றது தவறாகும். அதுபோல் இடம்புரி ஆயிரம் சேர்ந்தது வலம்புரிச்சங்கு என்று கூறியதும் தவறாகும்.

சலஞ்சலச்சங்கு (பணிலம்) ஆயிரம் சூழ்ந்தது கண்ணனின் பாஞ்சசன்னியம் என்றது முற்றிலும் பொய்யான புராணச் செய்தியாகும்.

வலம்புரிச்சங்கின் பெயராகக் கொக்கரை நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது. சங்க நூல்களில் சங்குகள் பற்றிய செய்திகள் உண்மையாக இருக்க, நிகண்டுகளில் புராணப் பொய்மைச் செய்திகளே காணப்படுகின்றன.

# 14 சிப்பி

கிளிஞ்சில்களில் இரட்டையோட்டுக் கிளிஞ்சில்கள் பலவகை கடலில் உள்ளன. சங்க நூல்களில் முத்துச்சிப்பி ஒன்றுதான் கூறப்பட்டுள்ளது.

சிப்பி ஈனும் முத்து பல சங்கப்பாடல்களில் கூறப் பட்டிருப்பினும், சிப்பி மூன்று பாடல்களில் விளக்கச் செய்திகளின்றிக் கூறப்பட்டுள்ளது.

**'முதிர்வார் இப்பி முத்த வார்மணல்**
**கதிர்விடு மணியில் கண்பொரு மாடத்து'**

— *புறம். 53*

**'துறைமேய் சிப்பி ஈர்ம்புறத்து உறைக்கும்'**

— *நற்றிணை 87*

**'நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்**
**பேரிசைக் கொற்கைப் பொருநன் வெல்வேல்'**

— *அகம். 296*

**'விரை மேவும் பாக்கம் விளக்காக் - கரைமேல்**
**விடுவாய்ப் புகம்புற விம்பிகான் முத்தம்'**

— *திணைமாலை நூற்றைம்பது 48*

**'விரிகதிர் இப்பியை வெள்ளியென் றுணர்தல்'**

— *மணிமேகலை 27 : 64*

புறநானூற்றில் (53) சிப்பியில் முதிர்ந்த சுடர்விடும் மணியான முத்து கூறப்பட்டுள்ளது

## முத்து ஏற்றுமதி

கொற்கையில் சேகரிக்கப்பட்ட முத்தைக் கள்ளிற்கு பரதவர் விற்றதாக அகப்பாடல் (296) கூறியுள்ளது.

சங்க காலத்திலிருந்து — **மார்க்கோ போலோ** என்ற வெளி நாட்டுப் பயணி, தமிழ் நாட்டுக் கரையில் முத்துக் குளித்தலை 13 ஆம் நூற்றாண்டில் குறிப்பிட்டது வரை தொடர்ச்சியாக முத்துக்குளித்தல் நடந்து வந்தது.

தமிழ்நாட்டு முத்து கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்து அண்மைக்காலம் வரை வெளிநாடுகளில் சிறப்புப்பெற்றிருந்தது.

சிப்பியின் உள்ளோடு வெள்ளி போலப் பளபளப்பாக இருக்கும்; இதை வெள்ளியென்று மயங்குவர் என்று மணிமேகலை கூறியுள்ளது. இதை வடமொழியில் சுக்தி என்றழைப்பர்.

முத்து ஈனும் சிப்பி தமிழ்நாட்டுக் கடல்களில் அகப்படுவது Pinctada fuscata என்ற வகையாகும்.

# 15 பலகறை

ஒற்றைக் கிளிஞ்சில் வகையில் மலைபடுகடாத்தில் **பலகறை** என்ற கடற் கிளிஞ்சில் கூறப்பட்டுள்ளது.

**'அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக்**
**கலவ மஞ்ஞை கட்சியில் தளரினுங்'**
— மலைபடு கடாம், வரிகள் 234 : 235.

## நாணய மதிப்பு

அலகை என்பதற்கு நச்சினார்க்கினியர் **பலகறை** என்று பொருள் கூறியுள்ளார். உ. வே. சாமிநாதய்யர் அடிக்குறிப்பில் 'அலகு, பலகறை - சோழி **பறையல** கென்பது பலகறையென மருவிற்றென்பர்' என்று குறிப்பிட்டுப் பிற்காலப் பாடல் வரியொன்றைக் காட்டியுள்ளார்.

சோழிகள் பண்டைக் காலத்தில் நாணயங்களாகப் பயன்படுத்தப்பட்டன என்று தெரிகின்றது. பிற்காலக் கல்வெட்டுகளில் சோழிகள் அவ்வாறு பயன்படுத்திய செய்தி காணப்படுகின்றது.

இந்தப் பலகறையையே மலைபடுகடாம் கூறியுள்ளது. இதை Money Coury என்று ஆங்கிலத்திலும் Cyprea Moneta என்று அறிவியலிலும் அழைப்பர். இதே போன்றதொருவகைச் சோழியை ஐங்குறு நூறு **தாலி** என்று குறிப்பிட்டுள்ளது.

'பெருங்கடற் கரையது சிறுவெண்காக்கை
வரிவெண் டாவி வலைசெத்து வெருஉம்
மெல்லம் பிலம்பற் றேறி'

— ஐங்குறுநூறு 166

மீன்பிடி வலைகளது சுற்றில் சோழி கோக்கப்பட்டிருக்கும். அதைப் பார்த்துப் பயந்த கடற்காக்கை, கடற்கரையில் ஒதுங்கிய சோழியைப் பார்த்தும் பயந்தது என்று கூறப்பட்டுள்ளது.

சோழிகளில் பலவகைகள் உண்டு அலகு ஓர் அளவைக் குறிக்கும். நாணயங்களின் அடிப்படை அளவைக்குறித்ததால் 'அலகை' என்று சோழியைக் குறித்து வழங்கினர். மீன்பிடி வலையில் தற்போது குண்டுமணிகள் இருப்பதைக் காணலாம்.



# 16 குளிறா? களிறா?

'கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னைஇன் றியுங் கழிவது கொல்லோ
ஆற்றயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழுகுளிறு மிதித்த வொருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென் றுஅவ்வே'

—குறுந்தொகை 243

சில ஆண்டுகளுக்கு முன்னர், 'செந்தமிழ்ச்செல்வி' இதழில் 'குளிறா', 'களிறா' என்ற தலைப்பில் மாறுபட்ட கருத்துரைகள் வெளிவந்தன. 'குளிறு' என்ற பாடமே சரியானதாகும்.

அத்திப்பழம் ஒன்றை ஏழு நண்டுகள்மிதித்து குழையச் செய்திருக்க முடியும். ஆனால், ஒரு களிறு மிதித்திருந்தாலேயே அத்தியின் கனி குழைந்து மட்டுமிருக்காது; ஒன்றுமில்லாமல் சிதைந்தே போயிருக்கும்.

இப் பாட்டு மருதத் திணையில் வந்திருப்பதால், குறிஞ்சித் திணைக்குரிய களிறு கூறப்பட்டிருக்காது. நெய்தற்திணைக் குறித்ததும் மருதத் திணைக்கும் உரியதான குளிறு என்ற பெயருடைய நண்டே கூறப் பட்டிருக்க வேண்டும்.

சங்கநூல்களில் இந்தப் பாடலில் தவிர, வேறெந்தப் பாடல்களிலும் நண்டைப் பற்றிய **குளிறு** என்ற பெயர் வழங்கவில்லை என்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

சங்க நூல்களில் வடசொற்பெயர் பயிலுவது அரிதாகும். ஆதலின் வட நூல் அகராதிகளை ஆராய்ந்தபோது 'குளிறு' என்ற சொல் வடமொழியில் இல்லை. ஆதலின் குளிறு என்பது நண்டையே குறிக்கும். இது தூய தமிழ்ச் சொல்லும் ஆகும்.

ஏழு என்ற சொல் அதற்கு மேலாய் மிக்க பன்மையைக் குறிக்கும் என்பதையும் காணலாம்.

பல குளிறுகளாகிய நண்டுகள் மிதித்தால் அத்திப் பழம் குழைய வாய்ப்புண்டு. ஆனால் ஒரு களிறு மிதித்தாலே ஒன்றுமில்லாது போயிருக்கும். அத்திப்பழம் குழைய ஏழு களிறுகள் மிதிக்க வேண்டுவதில்லை.

ஆதலின் **களிறு** என்ற பாடத்தைவிட உ. வே. சாமிநாதய்யர் எடுத்துக்கொண்ட பாடமான **குளிறு** என்பதே சிறந்த பாடமாகும்.



# 17 தேனீ

'தேன்நிமிர் நறுமலர் வானன் உடற்றிய'

—அகம்.381

'தேன்செய் பெருங்கிளை இரிய வேங்கை'

—நற்றிணை202

'கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே'

—குறுந்தொகை3

'மயில்கள் ஆலப் பெருந்தேன் நிமிர'

—ஐங்குறுநூறு 292

'தேன் ஆர்க்கும் பொழுதுஎனத் தெளிக்குநர் உளராயின்'

—கலித்தொகை 30

'கயனணி பொதும்பருள் கடிமலர்த் தேன்ஊத'

—கலித்தொகை—36

'தேன்நிமிர் நறுமலர் புன்னையு மொழியாது'

—அகம்.170

'தீய்ந்த மராஅத்து ஓங்கல் வெஞ்சினை
வேனி லோர்இணர் தேனோடு ஊதி'

—குறுந்தொகை211

**'கொடுந்தேன் இழைத்த கோடுயர் நெடுவரை'**

—அகம். 18

**'தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்'**

—குறுந்தொகை 317

**'தேன்இமிர் நறுஞ்சினைத் தென்றல் போழக்'**

— அகம். 237

**'மலிதாதுஊதுந் தேனோடு ஒன்றி வண்டின் இன்னிசை'**

—நற்றிணை 323

**'பெருந்தேன் இமிர..............'**

—ஐங்குறுநூறு 323

**'பெருந்தேன் இமிர..............'**

—ஐங்குறுநூறு 292

**'பெருந்தேன் இமிர..............'**

—ஐங்குறுநூறு 282

தேன் என்ற சொல்லைத் தேனீயைக் குறிக்கக் கூறப் பட்டிருப்பதைக் காணலாம்.

'தேனினிர்', என்று அகநானூற்றில் கூறப்பட் டிருப்பது, தேனீ செய்யும் ஓசையைக் குறிக்கும்.

'மலிதாதுஊதுந் தேனொடு' என்றுவரும் நற்றிணைப் பாடல் (323) வரியில், தேனீ தாது ஊதுவதாகக் கூறப் பட்டுள்ளது.

'கொடுந்தேன் இழைத்த' என்று அகநானூறு (18) கூறுவது, தேனீ கட்டிய கூட்டைக் குறிக்கின்றது.

'தேனோடு ஊதி' என்ற குறுந்தொகை (211) வரியும் தேனீயைக் குறிக்கின்றது.

ஆதலின், சங்க நூல்களில் தேன் என்ற பொதுப் பெயர் தேனைக் குறித்தாலும், சில இடங்களில் தேனீயைக் குறித்தும் வழங்கியுள்ளது.

சங்க நூல்களில் சில பாடல்களில் 'பெருந்தேன்' என்ற வழக்கு பயில்கின்றது. இது பெருந்தேனீயைக் குறிக்கும்.

'பெருந்தேனிமிர்' என்ற ஐங்குறுநூறு (282) பெருந்தேனீ ஓசையிடுவதைக் கூறியுள்ளது. குறுந்தொகையில் (3) கருங்கோல் குறிஞ்சி பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் தேன்கூடு கூறப்பட்டுள்ளது.

குறிஞ்சிச் செடி மலைகளில் 6000 அடிக்கு மேல் வளர்வதாகும். 12 ஆண்டுக்கொரு முறை பூக்கும்போது மலைத் தேனீக்கள், தேனைச் சேகரித்து, பெரிய தேனீ அடைகளை மலைகளில் செய்யும். ஆதலின் பெருந்தேன் என்பது, மலைத்தேனீ என்பதும் விளங்கும்.

**'தாதார் பிரச மூதும்'**

—ஐங்குறுநூறு406

**'தாதார் பிரசம்மொய்ப்ப'**

—ஐங்குறுநூறு417

**'பிரசப் பல்கிளை யார்ப்பக் கல்லென**
**வரைஇழி அருவி ஆரந் தீண்ட'**

—அகம்.228

**'வரையிழி அருவிப் பாட்டொடு பிரசம்**
**முழவுசேர் நரம்பின் இம்மென இமிரும்'**

—அகம்.318

**'வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப'**

—மதுரைக்காஞ்சி 717

**'வாரணம் உரறும் நீர் திகழ் சிலம்பில்**
**பிரசமொடு விளங்கிய வயங்குவெள் அருவி'**

—அகம்.172

**'பிரசப் பல்கிளை ஆர்ப்பக் கல்லென**
**வரைஇழி அருவி ஆரந் தீண்டி**
**தூன்என நன்னக்கும் நளிமலைச் சிலம்பிற்'**

—அகம்.228

'நறைகால் யாத்த நளிர்முகைச் சிலம்பின்
பெருமலை விடர்அகம் நீடிய சிறியிலை
சாந்த மென்சினை தீண்டி மேவது
பிரசந் தூங்கு சேட்சிமை
வரையக வெற்பன் மணந்த மார்பே'

—அகம். 242

'வரைஇழி அருவிப் பாட்டொடு பிரசம்
முழவுச்சேர் நரம்பின் இம்மென இமிரும்'

—அகம். 318

பிரசம் தூங்கப் பெரும்பழத் துணர
வரைவெள் அருவி மாலையின் இழிதர'

—நற்றிணை 93

'நேர்கொள்நெடுவரை நேமியிற் தொடுத்த
சூர்புகல் அடுக்கத்துப் பிரசங் காணீனு'

—மலைபடுகடாம், வரிகள் 238-239

அகநானூற்றில் (172) மலையில் பிரசம், அதாவது மலைத் தேனடைகளோடு விளங்கும் வெள்ளருவி கூறப் பட்டுள்ளது. மேலும், அகநானூற்றில் மலைச்சிலம்பில் இறங்கி வரும் மலையருவியருகில் 'பிரசப் பல்கிளை' ஆர்த்ததாகக் கூறப்பட்டுள்ளது.

தேனீக்கள் பல கூட்டங்களாக வாழும் சமூக வாழ்க்கையுடையவை. அதனால் பல்கிளைப் பிரசம் என்று கூறப்பட்டுள்ளது.

அகநானூற்றில் (242) மலையுச்சியில் பெருந் தேனடைகள் தொங்கும் என்று கூறப்பட்டுள்ளது. அகநானூற்றில் (318) மலையிலிருந்து இறங்கி வரும் அருவியின் ஓசையில் பிரசம் இம்மென ஓசையிட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

நற்றிணையில் (93) மலையருவி இறங்கிய இடத்தில் (பிரசம்) மலைத்தேன் தொங்கிக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

மலைபடுகடாத்தில் (238—239) உயர்ந்த மலையில் பிரசமாகிய மலைத்தேனடை சக்கரம்போல் தொடுத் திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

அகநானூற்றிலும், நற்றிணையிலும், பிற சங்கப் பாடல்களிலும் பிரசம் மலைகளிலும் மலையருவி அருகிலும் கூறப்பட்டதிலிருந்து அது மலைத்தேனீயையும் மலைத் தேனீ கட்டிய தேன் கூட்டையும் குறிக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றும் குற்றாலத்தில் தேனருவியைப் பார்த்தால், சங்கநூல்கள் கூறும் பிரசம் பற்றிய செய்தியின் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம்.

தேனருவி மலையுச்சியிலிருந்து பாய்கிறது. அருவியின் பக்கத்தில் மலையில் மலைத் தேனடைகள் மிகப் பெரிய தாகத் தொங்குகின்றன. குற்றாலத்தில் காணும் அதே காட்சியைச் சங்கநூல்களும் கூறியுள்ளன.

இதிலிருந்து நிகண்டுகளில் பிரசம் என்பதற்கு கோற்றேன் என்று கூறியது, எவ்வளவு பிழையானது என்பது தெரியவரும்.

பொந்துத்தேனீ, தேனைத் தனியாகவும் குஞ்சுப் புழுக்களைத் தனியாகவும் வெவ்வேறு அடைகளில் வைக்கும். அதனால் தேனைத் தனியாகச் சேகரிக்க முடிகின்றது. இந்தத் தேனீயைத்தான் செயற்கைக் கூடுகளில் வளர்க்க முடிகின்றது.

தேனீ வளர்ப்போர் இராணித் தேனீயைப் பிடித்து, தேனீக் கூட்டைச் செயற்கைக் கூடுகளில் வளர்ப்பர்.

## சிதர்

தேனீக்களில் ஒருவகை சிதர் என்று சங்க நூல்களில் அழைக்கப் படுகின்றது. சிதர் என்றால் சிறிய நீர்த் துளி என்று சில சங்கப் பாடல்களில் வந்துள்ளது. சிறிய தேனீயையும் குறித்து வழங்கியதாகத் தெரிகின்றது.

**'இனச் சிதர் உகுத்த இலவத்து'**

— அகம். 25

**'எரிமருள் பூஞ்சினை இனச்சிதர் ஆர்ப்ப'**

— அகம். 41

**'முன்முதிர் முருக்கின் சிதர்ஆர் செம்மல்'**

— அகம். 99

**'சிதர் சினை தூங்கும் அற்சிர அரைநாள்'**

— அகம். 294

**'சிதர் கொள் தண்மலர்'** — ஐங்குறுநூறு 458

**'சிதர்நனை முருக்கின் சேண் ஓங்கு நெடுஞ்சினை'**

— சிறுபாணாற்றுப்படை, வரி. 254

**'பொங்கழல் முருக்கின் ஒண்குரல் மாந்திச்**
**சிகர் சிதர்த்து குத்த செவ்வி வேனில்**

— அகம். 277

'குவிமுகை முருக்கின் கூர் நுனை வைஎயிற்று
நகைமுக மகளிர் ஊட்டுகிர் கடுக்கும்
முதிராப் பல்லிதழ் உதிரப் பாய்ந்துடன்
மலருண் வேட்கையின் சிதர்சிதர்ந்து உகுப்ப'

— அகம்.

'சிதர் நலனை முனைஇய சிதர்கால் வாரணம்'

— நற்றிணை 297

'பொறைதளர் கொம்பின்மேற் சிதரினம் இறைகொள'

— கலித். 34

சிதர் என்னும் சிறு தேன்ஈ, கூட்டமாக இலவு, முருக்கு முதலிய மரப் பூக்களில் ஓசை செய்ததாகச் சில சங்கப் பாடல்கள் கூறியுள்ளன.

'சிதர்சினை தூங்கும்' என்று அகநானூறு கூறுவது, சிதர் என்னும் சிறிய தேன்ஈ மரக் கொம்பில் தேனடையில் தொங்குவதைக் குறித்ததாகலாம்.

தேன்ஈக்களின் சிறிய தேன்ஈ( Little honey bee)கொம்புகளிலும் புதர்களிலும் சிறிய தேன்கூடு கட்டும். ஒரே அடைதான் கட்டும். அதில் புழுக்களும் தேனும் ஒன்றாகவே கலந்திருக்கும். இதை Apis florea என்று அறிவியலில் அழைப்பர்.

தற்காலத்தில் சிலர் கொம்புத் தேன் மிகவும் சுவையுடையதாகக் கருதுவர். அது தவறு ஒரே அடைகட்டுவதால் புழுக்களும் தேனும் ஒன்றாக இருக்கும். அவைகளைக் கலந்து தேன் பிழியவேண்டும்.

இயற்கையில்மூன்றுவகையான தேனீக்கள் உள்ளன. சங்கநூல்களில் சிதர் சிறு தேனீயையும் தேன் என்று பொதுவாகக் கூறப்படும் பொந்துத் தேனீயையும் குறித்து

வழங்கியது. அவற்றை முறையே Apis fliorea என்றும் Apis cinera (Apisindica) என்றும் அழைப்பர்.

ஆனால் மலைத்தேனீயைப் பிரித்து, **பெருந்தேன்** என்றும் **பிரசம்** என்றும் சங்கநூல்கள் அழைத்துள்ள மலைத் தேனீயை அறிவியலில்Apis dorsata என்றழைப்பர் ஆங்கிலத்தில் Rock honey bee என்றழைப்பர்.

மலைவாழ் மக்கள் மலைத்தேன்ஈயைப் **பெருந்தூக்கன்** என்பர்; சிறிய தேன்ஈக்களைச்**சிறுதூக்கன்** என்றழைப்பர்.



# 18 தும்பி

'அணிமலர் நறுந்தாது ஊதுந் தும்பி
கையாடு வட்டில் தோன்றும்'

— அகம். 108

'.................. காந்தள்
கொழுமடல் புதுப்பூ ஊதுந் தும்பி
நல்நிறம் மருளும் அருவிடர்'

— அகம். 138

'அம்பணை நெடுந்தோள் தங்கித் தும்பி
அரிஇனங் கடுக்குஞ் சுரிஇணர் ஐம்பால்'

— அகம். 223

'புதல்இவர் ஆடமைத் தும்பி குயின்ற
அகலா அந்துளை கோடை முகத்தலின்
நீர்க்குஇயங்கு இனநிரைப் பின்றை வார்கோல்
ஆய்க்குழல் பாணியின் ஐதுவந்து இசைக்கும்'

— அகம். 225

'தாதுண் தும்பி முரலிசை கடுப்ப'

'துவைத்துஎழு தும்பித் தவிர்இசை விளரி
உதைத்துவிடு நரம்பின் இம்மென் இமிரும்'

— அகம். 317

'பொன்மருள் நறுந்தாது ஊதும் தும்பி
இன்னிசை ஓரா இருந்தனம் ஆக'

— அகம்.

'காந்தள் ஊதிய மணிநிறத் தும்பி
தீந்தொடை நரம்பின் முரலும்'

— நற்றிணை 17

'புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்'

— நற்றிணை 35

'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'

— குறுந்தொகை 2

'தீய்ந்த மராஅத்து ஓங்கல் வெஞ்சினை
வேனிலோர்இணர் தேனோடுஊதி
ஆராது பெயருந் தும்பி'

— குறுந்தொகை 211

'நறுந்தாது ஊதுங் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புஉமிழ் மணியில் தோன்றும்'

— குறுந்தொகை 239

'அம்ம வாழியோ அணிச்சிறைத் தும்பி'

— குறுந்தொகை 392

'அறுசில் கால அஞ்சிறைத் தும்பி'

— ஐங்குறுநூறு 20

'கட்டளையன்ன மணிநிறத் தும்பி'

— ஐங்குறுநூறு 215

'..................... நறவின்
நறுந்தாது ஆடிய தும்பி பசுங்கேழ்ப்
பொன்னுரைக் கல்லின் நன்னிறம் பெறூஉம்'

— நற்றிணை 25

'கடும்பறைத் தும்பி சூர்நசைத் தாஅய்'

— பதிற்றுப் பத்து 67 - 20

'காமரு தும்பி காமரஞ் செப்புஞ்'

— சிறுபாணாற்றுப்படை, வரி 77

'மாஅல் அஞ்சிறை மணிநிறத் தும்பி'

— கலித். 46

தும்பி என்ற பூச்சியைப்பற்றிச் சங்கநூல்களில் சில பாடல்களில் செய்திகள் உள்ளன.

சூதாட்டத்தில் பயன்படும் பகடைக் காய் போல இருந்ததாக அகநானூறு (108) கூறியுள்ளது.

அகநானூற்று 225 ஆம் பாடலில் ஒரு முக்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து துப்பி என்பது என்ன பூச்சி என்று உறுதியாகக் கண்டுகொள்ள முடியும்.

இந்த அகநானூற்றுப் பாடலில் மூங்கிலில் தும்பி துளைபோட்டதாகவும் அதனால் துளை வழியாகச் சென்ற கோடைக்காற்று குழல்போல் ஒலிக்கச் செய்தது என்றும் கூறப்பட்டுள்ளது.

பூச்சிகளில் இவ்வாறு துளைபோடும் பூச்சி Carpenter bee என்று பூச்சியியல் Entomoli gists வல்லுநர் கண்டு பிடித்துள்ளனர். ஆதலின் அகநானூறு கூறும் செய்தியிலிருந்து தும்பி பூச்சிகளில் எதுவென்று கண்டுகொள்ள முடிகின்றது.

தும்பி தாது ஊதுவதாகச் சிலபாடல்களில்(அகம்.138, 398) கூறப்பட்டுள்ளது. தாதூதுவது என்பது தேனைக் கவருவது, மகரந்தத்தைக் கவர்வது ஆகியவற்றைக் குறிக்கும். இது சங்க நூல்களில் கூறும் வழக்காகும்.

குறுந்தொகைப் பாடல் (2) 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' என்று கூறியுள்ளது. இங்குக் கொங்கு என்பது தேனைக் குறிக்கும்.

பொன்மருள் நறுந்தாது ஊதும் தும்பி என்ற அகநானூற்றுப் பாடல் வரியில் மஞ்சள் நிறமான மகரந்தம் கூறப்பட்டுள்ளது.

நற்றிணையில் (35) நாவல் கனியைத் தும்பி தன்இனம் என்று கருதி மொய்த்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இச்செய்தியிலிருந்து நாவற் பழத்தைப் போன்று கருநீல நிறமும் உருட்சியும் திரட்சியும் உள்ளது தும்பி என்பது தெரிகின்றது. அத்தகைய பூச்சி இயற்கையில் தும்பியைத் தவிர வேறில்லை.

பாம்புத் தலையில் இருக்கும் மணி நீல நிறமுடையது Sapphire blue என்று சில சங்கப் பாடல்களில் கருதப் படுகின்றது. ஆதலின் தும்பி நீல நிறமானது என்பது தெரிகின்றது.

கலித்தொகை (46 மணிநிறத் தும்பி என்றழைத் துள்ளது; (ஐங்குறுநூறு 20) ஆறு கால்களையுடையது தும்பி என்று கூறியுள்ளது. இதுவும் உண்மைச் செய்தியே யாகும்.

குறுந்தொகையும்(2, 239) ஐங்குறுநூறும்(20) அழகிய சிறகு உடையதாகத் தும்பியைப் பற்றிக் கூறியுள்ளன.

தும்பிக்கு அழகிய உள்சிறகு உள்ளது உண்மையாகும். இதை Hyaline wings என்றழைப்பர்.

நறவம் பூவில் தாதுண்ட தும்பி, தன் கருமையான உடலில் மஞ்சள்நிறமான மகரந்தத் தூளைப் பூசியிருப்பது பொன்னுரைக் கட்டளைக்கல் போலிருந்ததாக நற்றிணை (25) கூறியுள்ளது.

பொன்னுரைக் கட்டளைக் கல், கருப்பு நிறமாக இருக்கும். உரசுவதால் அதன்மேல் பொன்தூள் பதிந்திருக்கும். ஆதலின் அதை மகரந்தம் பூசிய தும்பியோடு ஒப்பிட்டது பொருத்தமே.

தும்பி, காமரம் என்ற பண்ணை இசைப்பதாகச் சிறுபாணாற்றுப்படை (77) கூறியுள்ளது. இது ஆராயத் தக்கதாகும். இதுகாறும் கூறியுள்ளதிலிருந்து தும்பி அறிவியல்படி Xylocarpa குடும்பத்தைச் சேர்ந்தது தெளிவாகின்றது புறநானூற்றில் இரவுக்காலத்தில் இரை தேடும் தும்பி கூறப்பட்டுள்ளது.

**'நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்'**

— புறம். 280

இச்செய்தி மிக அரிய நுட்பமான செய்தியாகும். புறநானூற்றில் நடு இரவில் தும்பி இரை தேடுவதை அறிவியலார் 'Sone species (xylocarpa rufin, xylocarpa tranquebarica, xylocarpa proximold) are unusual in being nocturnal, crepuscular, என்று கூறியிருக்கின்றனர். அத்தகைய அசாதாரணமான ஒரு வகைத் தும்பியையும் சங்க நூல்கள் கூறுவது வியப்பைத் தருகின்றது.

தும்பி தாமரை மலரில் முட்டையிடுவதாக ஐங்குறுநூறு [20] கூறியது உண்மையன்று.

தும்பி மரக்கட்டையைத் துளைத்து துளையில் முட்டையிடும் என்று அறிவியலார் கூறுவர்.



# 19 மூதாய்

'அரக்கத்து அன்ன செந்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்மல் தாஅய் பலவுடன்
ஈயல் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய'

— அகம். 14

'மணிமருள் பூவை அணிமலர் இடையிடைச்
செம்புற மூதாய் பரத்தலின் நன்பல'

— அகம். 134

'அரக்குநிற உருவின் ஈயல் மூதாய்
பரப்பி யவைபோல் வாஅய்ப் பலவுடன்

— அகம். 131

பசுங்கண் வானம் பாய்தளி பொழிந்த எனப்
புன்நாகும் பெடுத்த நன்னெடுங் கானத்து
ஊட்டுறு பஞ்சிப் பிசிர் பரந் தன்ன
வண்ணம் மூதாய் தண்ணிலம் வரிப்ப'

— அகம். 223

'மணிமிடை பவளம்போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்பப்
புலன்அணி கொண்ட கார்எதிர் காலை'

— அகம். 304

'செறிமணல் நிவந்த களர்தோன்று இயவில்
குறும்மேட்டு மூதாய் குறுகுறு ஓடி
மணிமண்டு பவழம் போலக் காயா
அணிமிகு செம்மல் ஒளிப்பன மறையக்
கார்கவின் கொண்ட காமர் காலை'

— அகம். 374

'பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்'

— கலித்தொகை

'தண் பெயல் பொழிந்த பைதறு காலைக்
குருதி உருவின் ஒண்செம் மூதாய்
பெருவழி மருங்கின் சிறுபல வரிப்ப'

— அகம். 74

'கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவும்'

— சிறுபாணாற்றுப்படை, வரி 168

மூதாய் என்றதொரு பூச்சியைப் பற்றிச் சங்கநூல்கள் கூறுகின்றன. இக்காலத்தில் மூதாயை இந்திர கோபம் என்றழைப்பர்.

சிறுபாணாற்றுப்படையில் இதுகோபம் என்றழைக்கப் படுகின்றது.

காயாம்பூ உதிர்ந்த இடத்தில் மூதாய் வரித்து காணப் படுவது மணிமிடை பவளம்போல இருந்ததாக அக நானூறு (64) கூறியுள்ளது.

காயாம்பூ (Memycylone edule) நீலநிறமாக இருக்கும். மூதாய் செந்நிறமாய் இருக்கும்.

செந்நிற மூதாய் பவளத்திற்கு ஒப்பிடப்பட்டு மணி மிடை பவளம் என்று கூறப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் மணிமிடை பவளத்தை ஓர் அணிகலனாகப் பெண்டிர் அணிந்திருப்பர்.

மூதாய் கார் காலத் தொடக்கத்தில் திடீரென்று புல்வெளியில் தோன்றுகின்றது. கார் மழை பெய்யும் முன்னரும் மழை பெய்யும்போதும் மூதாய் புல்லில் காணப்படுகின்றது.

நான் பலமுறை மூதாயை மழைக்காலத்தில் மேட்டுப் பாங்கான இடத்தில் புல்லில் கண்டிருக்கிறேன். பிடித்து விளையாடியிருக்கிறேன் சிறியவனாக இருந்தபோது மூதாய் வளர்க்க முயன்றேன். ஆனால் இறந்து போயின.

பிற்காலத்தில் கல்லூரியில் நான் இதைப்பற்றி ஆராய்ந்ததில் எட்டுக்கால் பூச்சியினத்தில் சேர்ந்த மூதாய் பிற பூச்சிகளைப் பிடித்துத் தின்னும் ஊன் உண்ணி என்பதைத் தெரிந்து கொண்டேன்.

அகநானூறு (304) காரெதிர் காலையில் மூதாய் காணப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளது.

அகநானூற்றில் (283) மழை பொழியுங்காலத்தில் புல் துளிர்த்து வருங்காலத்தில் சிவப்பு ஊட்டப்பட்ட பஞ்சுப் பிசிர் போல இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இப்பாட்டில் 'வண்ண மூதாய்' என்ற சொற்றொடர்க்குப்பாடமாற்றமாக 'உண்ணா மூதாய்' எனஒரு பதிப்பில் காணப்படுகின்றது. அது உண்மையானால், உண்ணும் மூதாய் ஈயலாக இருக்க வேண்டும்.

இப் பாட்டில் மணிமிடை பவளம் என்ற சொற்றொடர் வருகின்றது.

அகநானூற்றில் (374) 'குறுமோட்டு மூதாய் குறுகுறு ஓடி' என்று கூறப்பட்டது, உண்மையான செய்தியென்பதை என் அனுபவத்தில் கண்டுள்ளேன்.

இந்தப் பாடலில் 'மணிமண்டு பவளம்' என்று கூறப்பட்டுள்ளது. அகநானூற்றில் (74) குருதிபோல மூதாய் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

மூதாய் கருஞ்சிவப்பாகத் தோன்றும். மேலே தடவினால் 'வெல்வெட்' போன்று மெத்தென இருக்கும்.

மூதாயைச் சிறுபாணாற்றுப்படை வடமொழிப் பெயரால் **கோபம்** என்றழைக்கின்றது.

அகநானூற்றின் இரண்டாம் தொகுதி மணிமிடை பவளம் என்ற பெயரிட்டு அழைக்கப்பட்டிருந்தாலும், அத்தொகுதியில் இந்த உவமை காணப்படவில்லை. மூன்றாம் தொகுதியான நித்திலக்கோவைப் பாட்டில் (304) தான் காணப்படுகின்றது. ஆதலின் ஏடு பெயர்த்து எழுதுவோரால் பாட்டுகள் பிறழப்பட்டிருக்கின்றன என்று தெரிகின்றது.

மூதாயை ஆங்கிலத்தில் Velvet insect எனவும், அறிவியலில் Mutilla Nobilis, Mutilla dimidiata என்றும் அழைப்பர்.

சில காலம் முற்றிலும் மறைந்து பின்னர் திடீர் என்று தோன்றுவதால், இதை உயிர்த்தெழும் பூச்சியென்று இன்று அழைப்பர். இது ஆங்கிலப் பெயரின் மொழி பெயர்ப்பாகத் தெரிகின்றது.



# 20 மின்மினி

மின்மினிப் பூச்சியைப்பற்றிச் சில பாடல்கள் கூறியுள்ளன.

'நிலம்படு மின்மினி போலப் பலவுடன்'

—அகம். 67

'மின்மினி மொய்த்த முரவுவாய் புற்றம்
பொன்னெறி பிதிரிற் சுடர் வாங்கி'

—அகம்

'குருகு ஊது மிதியுலை பிதிர்வில் பொங்கிச்
சிறுபன் மின்மினி போலப் பலவுடன்'

—அகம். 202

'சிறுபுன் மின்மினி கடுப்ப எவ்வாயும்'

—அகம். 291

'பன்மர உயர்கிளை மின்மினி விளக்கம்'

—நற்றிணை 44

'சுடர்க்கடை பறவைப் பெயர்படு அத்தம்'

—பெரும்பாணாற்றுப்படை-வரி 305

அகநானூறு (67) 'நிலம்படு மின்மினி'யைப் பற்றிக் கூறியிருப்பதால், அது மின்மினிப் புழுவாக இருக்க வேண்டும்.

கறையானின் நெடும் புற்றைக் கரடி தோண்ட, அதன் மேல் மொய்த்திருந்த மின்மினி சிதறுவது, காய்ச்சின இரும்பை உலையில் அடிக்கும்போது சிதறும் தீப்பொறி போல இருந்ததாக அகநானூறு (115, 202) கூறியுள்ளது மிகப் பொருத்தமான உவமையாகும்.

நற்றிணையில் மரத்தின் உயர்ந்த கிளையில் மின்மினி இருந்தது கூறப்பட்டுள்ளது.

பெரும்பாணாற்றுப்படை மின்மினியைச் 'சுடர்க் கடைப் பறவை' என்று அழைத்திருப்பதைக் காணலாம்.

சுடரைக் கடைசியில் உள்ள பறக்கும் உயிர் மின்மினியாகத்தான் இருக்கவேண்டும் ஆனால் நச்சினார்க்கினியர் சுடர்க்கடை பறவை அத்தம் என்பதற்கு 'இராசான்னம்' என்று வலிந்து பொருள் கொண்டார்.

உலகில் எந்தப் பறவைக்கும் உடலின் கடைசியில் சுடர் இல்லை. மின்மினிக்கு மட்டுந்தான் உண்டு. இதனால் நச்சினார்க்கினியருக்கு முன் ஓர் உரையாசிரியர் கூறிய மின்மினி என்ற பொருளே ஏற்புடைத்து.

மின்மினிப் புழுவை Lampyris noctiluca என்றும் மின்மினிப் பூச்சியை Luciola garlami Luciola Circumdata, Luciola humeralis Luciola Melaspis, Luciola Nespertina என்றும் அறிவியலில் அழைப்பர்.

# 21 ஈயல்

ஈயல் என்பது ஒரு பூச்சியாகும். இதைத் தற்காலத்தில் ஈயல் என்றும் கறையான் என்றும் செல் என்றும் அழைப்பர் சங்க நூல்களில் ஈயலைச் சிதலை என்றும் அழைத்தனர்.

'கார் வாய்த்து ஒழிந்த ஈர்வாய்ப் புற்றத்து
ஈயல் பெய்து அட்ட இன்புளி வெஞ்சோறு'

—அகம். 394

'நுண்பல சிதலை அரிதுமுயன்று எடுத்த
செம்புற்று ஈயல் போல
ஒருபகல் வாழ்க்கைக்கு உலமருவோரே'

—புறம். 51

'கார்ப்பெயல் தலைஇய காண்புகு இன்காலை
களிற்று முகவரியின் தெறுழ்வீ பூப்ப
செம்புற்று ஈயலின் இன்அளைப் புளித்து
மென்தினை யாணர்த்து'

—புறம். 119

'நெடுஞ் செம்புற்றம் ஈயல் பகர'

—ஐங்குறுநூறு. 498

'குழிப்புற்றின் மண்கால் ஈயல்'

—ஐங்குறுநூறு, மிகைப்பாடல் 4

'நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல்'

—நற்றிணை 59

'செம்புற்று ஈயல் போல'

—புறம். 51

'செம்புற்று ஈயலின்'

—புறம். 119

ஈயல் பூச்சிகள் உயரமான புற்றைக் கட்டுகின்றன. மற்றும் குழிப்புற்றாகவும் அமைத்துக் கொள்கின்றன.

உயரமான நெடுங்கோட்டுப்புற்று ஐங்குறுநூற்றிலும் (493) நற்றிணையிலும் (59) கூறப்பட்டுள்ளது.

குழிப்புற்று ஐங்குறுநூறு (மிகைப்பாடல்4) குறிப்பிட்டுள்ளது.

பூச்சியினத்தில் புற்றிலிருந்து வெளித் தோன்றிய அன்றே உயிர் இழக்கும் பூச்சி ஈயலாகும். புறநானூற்றில் (51)ஈயலுக்கு ஒரு பகல்வாழ்க்கைக்குஉலம் வருகின்றதாகக் கூறப்பட்டுள்ளது.

மண்ணில் வாழும் ஈயல் Rhino termi tidae என்று அறிவியலில் அழைப்பர்.

கட்டடங்களில் அரித்து வாழும் ஈயலினத்தை Kalermitidae Masto Termitidae சேர்ந்தவையாகும்.

ஆகிய குடும்பங்களைச் சேர்ந்தவையாகும். பொதுவாகக் காணப்படும் ஈயல் Odonterous Redemannis Microstmrese Olesi Coptotermes Heini Heterotermes Indicola ஆகிய குடும்பங்களைச் சேர்ந்ததாகும்.

# 22 குளவி

சங்க நூல்களில் ஒருவகைக் கடுங்குளவிக்குக் 'கடுந்தேறு' என்ற பெயர் வழங்கியுள்ளது. இக் குளவி கூடு கட்டி, கூட்டுச்சமூக வாழ்க்கையைப் பின்பற்றுவதாகும்.

செறுவினை மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப் பகடு உதிர்த்த மென்செந்நெல்லின்
அம்பண வளவை உறைகுவித்து ஆங்குக்
கடுந்தேறு உறுகிளை மொசிந்தன துஞ்சும்
செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாஅரின்
அலந்தனர் பெருமநின் உடற்றி யோரே'

— பதிற்றுப்பத்து 71 : 3 - 8

'செந்நெல்லை மரக்காலால் அளத்தற்கு உறையாகக் குவித்தாற்போல மொசிந்திருந்த குளவியினம் இருந்த கூட்டைக் கலைத்த இளஞ்சிறார்போல, உன்னோடு மாறுபட்ட பகைவர் துன்ப முற்றனர்'
என்று பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்து கூறியுள்ளது.

'குளவிக் கூட்டைக் கலைத்தாற்போல' என்ற பழமொழி தமிழில் வழங்குகின்றது.

இதே பழமொழி மலையாளத்தில், 'கடந்நல் கூடின்மேல் கல்லெடுத் தெறிக' என்று வழங்குகின்றது.

ஆங்கிலத்திலும் 'To arouse a nest of hornets' என்று இதே முறையான பழமொழி பகைவரைத் தூண்டி விடுவதைக் குறித்து வருகின்றது.

கடுந்தேறுஊறு கிளை என்ற தொடருக்குக், 'கடிதாகத் தெறுதலையுடைய மிக்க குளவியினம்' என்று பழையவுரை கூறியுள்ளது.

குளவிக்குக் கடுந்தேறு என்ற பெயர் சங்க காலத்தில் வழங்கியது என்பது தெரிகின்றது. ஆனால் இப் பெயர் பிற்கால இலக்கியங்களில் வழங்கவில்லை. சிறந்த உரையாசிரியரான நச்சினார்க்கினியர் இந்தப் பெயரை மறந்து உரை கூறியிருப்பதைக் காணலாம்.

> 'கடுப்புடைப் பறவைச் சாதியன்ன
> பைதற விளைந்த பெருஞ் செந்நெல்லின்'

என்று பெரும்பாணாற்றுப்படையும் இந்த உவமையைக் கையாண்டுள்ளது. 'கடுப்புடைப் பறவைச் சாதி' என்ற நீண்ட பெயர் குளவியைப் பற்றிய நீண்ட விளக்கப் பெயராகும். தெறுதல் என்ற சொல் தண்டித்தல் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது.

**சாதி** என்ற வட சொல் தமிழிலக்கியத்தில் முதன் முதலில் பெரும்பாணாற்றுப்படையில் வழங்கப்பட்டுள்ளதையும் கவனிக்கவேண்டும்.

'அருந்தெறல் மரபில் கடவுள் காப்ப' என்று வரும் அகநானூற்று (372) வரியில், தண்டிக்கும் கடவுளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. குளவிக் கூட்டைக் கலைக்கும் சிறுவர் குளவிகளால் ஊறுகிளை' என்றழைத்தனர்.

திண்டிவனத்தில் கல்லறைத் தோட்டத்தில் இருந்த குளவிக் கூட்டைக் கலைத்த நானும் என் நண்பர்களும் துரத்திய குளவிகளிடமிருந்து ஓடித் தப்பித்ததை இன்றும் நினைவு கூர்கின்றேன்.

இந்தக் குளவிகள் பெரும்பாலும் ஆட்கள் போக்கு வரவு இல்லாத இடங்களில்தான் கூடு கட்டும். ஆனால், யாராவது ஓர் ஆள் கூட்டை நெருங்கினாலோ, கலைத்தாலோ குளவிகள் எல்லாம் கலைந்து வெளிப்பட்டு ஆளைக் கொட்டி விடும். அவ்வாறு இக் குளவிகள் கூட்டமாகச் சேர்ந்து ஒரு பெண்ணைத் துரத்திச் சென்று தலையில் கொட்டியதால், அந்தப் பெண் தன் உயிரை இழந்ததை நான் கண்கூடாகக் கண்டேன்.

ஆதலின் கூட்டுக் குளவிகள் மிகவும் கொடியனவாகும். மனிதருடைய உயிர்க்கே ஊறு விளைவிப்பனவாகும்.

குளவி கொட்டினால் கடுப்பு மிகுந்து இருக்குமாதலால் 'கடுப்புடைப் பறவைச் சாதி' என்று அழைக்கப்பட்டுள்ளது.

கடுந்தேறு என்ற குளவிப் பெயர் மிகுந்த கடுப்பைத் தருவது: அஃதாவது கடிய வலியைத் தருவது என்று பொருள்படும். அவ்வாறு கடுப்பைத் தரும் நஞ்சுடைய ஒருவகைப் பெரிய தேளை **'நண்டுத் தெறுக்கால்'** என்று தென்னார்க்காடு மாவட்டத்தில் அழைப்பதைக் காணலாம்.

கொட்டித் தெறும் காலை உடைய பெரிய தேள் என்ற பொருளில் தெறுக்கால் என்று அழைத்தனர்

**வல்லூறு** என்ற பெயர் **வலிய** ஊறு என்று பொருள் தருவதுபோல, **புள்ளூறு** என்ற பெயர் புட்களுக்கு ஊறு என்று பொருள் தருவதுபோல, 'கடுந்தெறு ஊறு' **கடுந்தேறூறு** என்று பதிற்றுப்பத்தில் வழங்கிற்று.

கடுந்தேறு என்ற பெயரை மறந்து நச்சினார்க்கினியர் பொருநராற்றுப்படையில் உரை கூறியுள்ளார்.

**'குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை**
**கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்**
**சாலி நெல்லின் சிறைகொள் வேலி'**

— பொருநராற்றுப்படை, *244 - 246.*

நெல்லை அறுத்து நெல்மணியைக் குவித்து வைத்திருந்தது 'கடுந்தெற்று மூடை' போலிருந்ததாகப் பொருநராற்றுப் படையில் கூறப்பட்டுள்ளது.

இங்குக் கடுந்தெற்று மூடை என்பதற்கு 'நெருங்கத் தெற்றின குதிர்' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார்.

மூடு என்ற உரிச்சொல்லிற்கு 'நெருங்க' என்ற பொருள் வேறு எந் நூல்களிலும், நிகண்டுகளிலும் காணப் படவில்லை. இங்கே கூறிய பொருள் பொருத்தமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

நெல்லின் குவியலுக்குக் கடுந்தேறு என்ற குளவியின் கூட்டத்தை ஒப்பிட்டுப் பொருநராற்றுப்படை கூறினது, பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட மரபு உவமையைப் பின்பற்றியதாகும்.

**'கடுந்தெற்று மூடையின்.........**
**வாடிய மாலை மலைந்த சென்னியுள்'**

— புறம். 285

## உரை மாற்றம்

'பொருநராற்றுப்படை'யில் காணப்பட்ட 'கடுந்தெற்று மூடை' என்ற சொற்றொடர் புறநானூற்றிலும் வருகின்றது. இதற்கு உ. வே சாமிநாதய்யர் நச்சினார்க்கினியரைப் பின்பற்றி அடிக் குறிப்புரை எழுதினார். பொருநராற்றுப் படை வரிக்கு நேரிய உரை, 'நெல்லின்

குப்பை, குளவியின் மூடைபோல் இடத்தை அடைத்து இருந்ததாகக் கூற வேண்டும்.

பதிற்றுப்பத்தில் நெல் குவியலுக்குக் குளவியின்செழுங் கூட்டை நிறத்தினாலும் உருவத்தினாலும் ஒப்பிட்டிருப்பதைக் காணலாம். ஆதலின் கடுந்தெற்று என்பதற்கு நெருங்கிப் பின்னின என்ற பொருளில் உரை கூறியது பொருத்தமாகத் தெரியவில்லை.

கடுந்தெற்று என்பதற்குக் கடுந் தெறுதலை யுடையது என்று பொருள் கொள்ளவேண்டும்.

கடுந்தெற்று மூடை என்ற சொற்றொடர், கடுந்தெறு தலை உடைய குளவி மூடை என்று பொருள் தரும்.

'மூடு' என்று முடியும் ஊர்ப் பெயர்கள் நாஞ்சில் நாட்டில் உள்ளன. மக்கள் கூட்டமாக வாழும் தன்மையைக் குறித்தே மூடு என்ற பெயர் ஊர்ப் பெயர்களின் இறுதியில் வருகின்றது. 'மரமூடு' என்ற பேச்சு வழக்கு, மரக்கூட்டம் என்ற பொருளில் நாஞ்சில் நாட்டில் வழக்குதைக் காணலாம்.

கூட்டில் குவிந்துள்ள குளவிகளின் கூட்டத்தையே கடுந்தெற்று மூடை என்று கூறியதாகத் தெரிகின்றது. இவ்வாறு நெல் களஞ்சியக் கூட்டில், பத்தாயத்தில் கூட்டுக் குளவிகள் கூடு கட்டுவது உண்மையேயாகும்.

மொய்த்தல் என்ற சொல் மூடுதல் என்றும் பொருள் தரும். குளவிகள் கூட்டமாகச் சேர்ந்து மூடியிருந்ததைக் கடுந்தெற்று மூடை என்றனர். கடுந்தெறுதலையுடைய குளவி மூடைபோலச் சாலி நெல் குவிந்திருந்தது என்று நேராகப் பொருள் கூறவேண்டிய இடத்தில், நச்சினார்க்கினியர் வேறாக வலிந்து பொருள் கூறியுள்ளார்.

பதிற்றுப்பத்தில் நெல்லைக் குவித்தாற்போன்ற 'கடுந்தேறு உறுகிளை' என்று சொல்லியிருப்பதைப் போன்றே

கடுந்தெற்று மூடைபோலச் சாலி நெல் கிடந்ததாகப் பொருநராற்றுப்படை கூறிற்று.

ஆதலின், சங்க காலத்தில் குளவிக்கு வழங்கிய பெயர் கடுந்தேறு என்பதாகும். இந்தப் பெயர் சில பழந் திராவிட மொழிகளிலும் வழங்குவது கவனிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் சில இடங்களில் குளவியைக் 'கடம்பை' என்று அழைத்தாலும் இந்த வழக்கு மிகவும் அரிதாகத் தமிழில் காணப்படுகின்றது.

மலையாளத்தில் இந்தக் கூட்டுக் குளவியின் பெயர் 'கடந்நல்' என்று வழங்குகின்றது. 'கடந்தை' என்று தமிழில் வழங்குவது போலக் கன்னட மொழியில் 'கடந்தூறு', 'கடந்துறுத்தெ', 'கடஜ', 'கனஜ' என்ற பெயர்கள் வழங்குகின்றன.

தெலுங்கு மொழியில், 'கடுநூறு', 'கனூதுரு', 'கடஜு', 'கனஜு' என்ற பெயர்கள் வழங்குகின்றன.

கன்னடப் பெயரில் பதிற்றுப்பத்தில் வரும் 'கடு' என்ற சொல்லும் 'ஊறு' என்ற சொல்லும் ஒத்திருப்பதைக் காணலாம்.

கடுந்தெறு என்று சங்க காலத்தில் வழங்கிய பெயர் தற்காலத் தமிழில் கடந்தை என்று பழக்கத்தில் அரிதாக வழங்குகின்றது. இப்பெயரில் ஊறு என்ற சொல் தமிழில் மறைந்துவிட்டது. ஆனால் கன்னடத்தில் 'ஊறு', 'உறுத்தே' என்று வருவதைக் காணலாம்.

வல்லூறு, புள்ளூறு என்ற தமிழ்ப்பெயர்களில் ஊறு என்ற சொல் இதே பொருளில் வழங்குவதைக் காணலாம்.

குடகு மொழியில் கூட்டுக்குளவியைக் 'கடந்தி' என்றும்

துளு மொழியில் 'கனஜடபுரி' என்றும்,

கோல் மொழியில் 'காண்டில் பொட்டே' என்றும்,

கோண்டிமொழியில் கண்டேலி, கண்டோலி என்றும் கூயி மொழியில் 'கிராண்டி' என்றும் அழைக்கப்படுகின்றது.

கடு என்ற சொல் 'கண்டு' என்று கண்டாம்பூனை என்ற தமிழ்ப் பெயரில் மாறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

டாக்டர் எமனோவின் சொற்பிறப்பு அகராதியில் (Dravidian Etymological Dictionary) இந்தப் பழந் திராவிட மொழிப் பெயர்கள் எல்லாம் காணப்பட்டாலும் 'கடுந்தேறு' என்ற சங்க நூற்பெயர் காணப்படவில்லை.

கடு என்ற மூலச் சொல்லை அடிப்படையாகக் கொண்டே தமிழில் கடுந்தெறு என்ற சங்க காலப் பெயரும், கடம்பை என்ற தமிழ்நாட்டுப் பெயரும் வழங்கியுள்ளன. 'கடந்நல்' என்ற மலையாளப் பெயரும், மற்ற திராவிட மொழிப்பெயர்களும் வந்துள்ளன.

கடு என்பது கண்டு என்றும், 'கண' என்றும் மாறித் திராவிடமொழிப் பெயர்களில் வந்துள்ளது. இந்தக் குளவியின் பெயர் வடமொழியிலும் மராத்தி மொழியிலும் சென்றிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

கடுந்தேறு எனும் குளவியை Social wasp என்று ஆங்கிலத்திலும் Polistes rebraus என்று அறிவியலிலும் அழைப்பர்.

# 23 சிள் வீடு

சங்க நூல்களில் அரிதாகக் கூறப்பட்டுள்ள ஒரு பூச்சி சிள்வீடாகும்.

கேரளத்தில் 'அமைதிப் பள்ளத்தாக்கு மின்திட்டத்தை'ப்பற்றிக் கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப் பட்டன. Silent Valley Project என்ற பெயரே, இந்தப் பள்ளத்தாக்கில் உள்ள காடுகளில் சிள்வீடு என்ற பூச்சி ஓசையிடாமல் அமைதியாக இருப்பதன் காரணமாகவே வந்தது.

தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பெரும்பாலான காடுகளில் இந்தப் பூச்சிகள் அடிக்கடி ஒருவகையான சீழ்க்கை ஓசையை [Whining incessantly] எழுப்பிக் கொண்டிருக்கும். இந்த ஓசை நெடுந்தொலைவில் கேட்கும்.

பூச்சியினத்தில் சிள்வீடு என்ற பூச்சிதான் சிறப்புமிக்க பாடும் பூச்சி என்று கருதுவர். [Cicadas are no doubf the celebrated musiclans of the insect world -The Hindu, Magazine section, April, 1980]

இந்தப் பூச்சியை இனங்கண்டு சங்கப் புலவர்கள் பாடியிருப்பது வியப்புக்குரியது.

'தெறுகதிர் ஞாயிறு நடுநின்று காய்தலின்
உறுபெயல் வறந்த ஒடுதேர் நனந்தலை
உருத்துஎழு குரல குடிஞைச் சேவல்
புல்சாய் விடரகம் புலம்ப, வரைய
கல்லெறி இசையின் இரட்டும் ஆங்கண்
சிள்வீடு கறங்குஞ் சிறியிலை வேலத்து
ஊழ்உறு விளைநெற்று உதிரக் காழியர்
கவ்வைப் பரப்பின் வெவ்உவர்ப்பு ஒழியக்'

—அகம். —89

'வேர்முழுது உலறி நின்ற புழற்கால்
தேர்மணி இசையின் சிள்வீடு ஆர்க்கும்
வற்றல் மரத்த பொற்றலை ஓதி
வெயில்கவின் இழந்த வைப்பின் பையுள்கொள'

—அகம். 145

'ஐயம் தெளியரோ நீயே பலவுடன்
வறள்மரம் பொருந்திய சிள்வீடு உமணர்
கணநிரை மணியின் ஆர்க்கும் சுரன்இறந்து'

—அகம். 303

'உலவை ஓமை ஓங்குநிலை ஒடுங்கிச்
சிள்வீடு கறங்கும் சேய்நாட்டு அத்தம்'

—நற்றிணை 252

## உண்மைப் பொருள்

அகநானூற்றுப் (89) பாட்டிற்கு எழுதிய பழைய உரையில் 'கவ்வைப் பரப்பு என்றது சிள்வீடு ஆரவாரத்தையுடைய பரப்பின தாகும் என்று கூறிய பொருள் மிகமிகப் பொருத்தமானதாகும். அறிவியற் செய்தியின் அடிப்படையானதாகும்.

கவ்வைப் பரப்பு என்பதை ஆங்கிலத்தில் விளக்க வேண்டுமானால் 'Captive listeners' என்று கூறலாம்.

ஏனென்றால் இயற்கைச் சூழ்நிலையில் சிள்வீட்டின் ஓசையை மனிதன் கேட்டுப் பொறுத்துக் கொண்டுதான் இருக்கவேண்டும்.

சிள்வீடுகள் பகற்காலத்தில், அதுவும் கடும் வெயில் சுடும் வேளையில் கூட்டமாக உரத்த குரலில் ஓசையிடும் என்பதை அறிவியலார் கண்டு கூறியுள்ளனர்.

அகநானூற்றுப் (89) பாடலிலும் 'ஞாயிறு தெறு கதிரால் காயும்' வேனிற்காலத்தில், அதுவும் மழை பெய்யாமல் வறண்டு, பேய்த்தோ அலை அலையாக ஓடும் காலத்தில் சிள்வீடு கடுத்த ஓசையிடும் என்று அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

They are diurnal in their. habits They like to sing during the day' time that too in the hottest hours of the day. Cicadas are Plunged in gloom and they stop singing. Particularly singing in chorus if the sun' s face is covered even by a passing cloud.

அகநானூற்றில் கடும் வெயிலில் சிள்வீடு ஓசையிட்ட தாகக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். சிள்வீடு என்ற பூச்சிகள் 'சிள்' என்ற ஓசையுடன் விட்டு விட்டு ஒலிப்பதையும் சங்கப் புலவர்கள் தெரிந்திருந்தார்.

சிள்வீடு கடும் வெயில் காயும்போது ஓசையிடும். கதிரவனை மேகம் மறைக்கும்போது உடனே ஓசை யிடுவதை விட்டுவிடும் என்று அறிவியலார் கூறியுள்ளனர் இவ்வாறு 'சிள்ளென்று' ஓசையிட்டு, விட்டு விட்டு ஒலிப்பதால் இதைச் 'சிள்வீடு' என்றழைத்தனர்.

அகநானூற்றிற்கு உரையெழுதிய பழைய உரை ஆசிரியர், தமிழகத்தில் மிக வெப்பமான நாட்களையும் குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

'வேனிற் காலத்து மாதம்இரண்டனுள் நடுவு என்னும் நாளிருபது' என்று கூறியுள்ளார். 'நடுநின்று காய்தல்' என்ற அகநானூற்று வரிக்குக் கூறிய விளக்கம் நுட்பமானது.

இந்த இருபது நாட்களை ஒட்டியே இப்போது 'கத்தரி' என்றழைக்கப்படும் நாட்கள் இருக்கவேண்டும். இந்த நாட்களில் சிள்வீடு மிகுந்த ஓசையை விடுவதைக் கூர்ந்து கவனித்து மதுரைக் காஞ்சிப் புலவர் என்ற அகநானூற்றுப் புலவர் பாடியுள்ளதைப் போற்றாமலிருக்க முடியாது.

சிள்வீடு ஓசையிடுவது திருப்பித் திருப்பி ஒரே வகையாக இருப்பதால் 'கறங்கும்' (manotonous, repetitive) என்று அகநானூற்றிலும் நற்றிணையிலும் கூறப்பட்டுள்ளது. தேர்மணிபோல வற்றல் மரத்திலிருந்து சிள்வீடு ஓசையிட்டதாக அகநானூறு (145) கூறியுள்ளது.

உமணர்களின் பொதிமாடுகளின் கழுத்தில் தொங்கும் மணிகள் ஓசையிடுவதுபோலப் பலவாகச் சேர்ந்து வற்றல் மரத்தில் பொருந்திய சிள்வீடு ஓசையிடும் என்று இன்னொரு பாட்டு (அகம். 303) கூறுகின்றது.

தேர்மணியும் மாட்டின் கழுத்து மணியும் விட்டு விட்டு ஒலிக்கும். அதுபோன்றே விட்டுவிட்டுச் சிள்வீடு ஓசையிடுவது கூறப்பட்டுள்ளது. வறண்ட மரத்தில் சிள்வீடு பொருந்தி ஓசையிடுவது ஆராயதக்கது இந்தச் சிள்வீடு பச்சைமரத்தில் தான் பொருந்திச் சாற்றை உறிஞ்சும் என்று அறிவியலார் கூறியுள்ளனர்.

'அலந்தலை உன்னத்து அம்கவடு பொருந்திச்
சிதடி கரையப் பெருவறம் கூர்ந்து
நிலம் பைதுஅற்ற புலங்கெடு காலையும்'

- பதிற்றுப்பத்து. 23

'வான வரம்பன் என்ப கானத்துக்
கறங்குஇசைச் சிதடி பொரியரைப் பொருந்திய
சிறிஇலை வேலம் பெரிய தோன்றும்'

— பதிற்றுப்பத்து 58

பதிற்றுப்பத்தில் இரு பாடல்களில் சிள்வீடு என்ற பூச்சியைச் சிதடி என்ற பெயரால் அழைத்திருப்பதைக் காணலாம்.

## வாழுமிடம்

இலையில்லாமல் உலர்ந்த தலையினை உடைய உன்ன மரத்தின் கவட்டுக்கிளைகளில் பொருந்தியிருந்து சிள்வீடு என்னும் வண்டுகள் ஒலிக்கும், பெரிய வற்கடம் மிக்கு, நிலம் பசுமையற்று வயல்கள் உலர்ந்து கெட்ட காலம் என்று பதிற்றுப்பத்து கூறியுள்ளது.

பெரிய வறட்சிக் காலத்தில் சிள்வீடு ஓசையிட்டதாகக் கூறியது அரிய செய்தியாகும்.

காட்டில் வேல மரத்தின் பொரியுள்ள அடி மரத்தில் பொருந்திச் சிள்வீடு இசையுடன் கறங்குவதால், சிறிய இலை உடைய புல்லிய வேல மரம் பெரியதாகத் தோன்றும் என்று கூறப்பட்டுள்ளது.

வேலமரத்தைப் பெரியதாகப் பார்த்ததற்குக் காரணம் அதன் அடி மரத்தில் பொருந்திய சிள்வீடு பெரிய ஆரவாரத்தையுடைய ஒலியை எழுப்பினதால் என்பது புலப்படும்.

சிள்வீடு என்ற வண்டு ஓமை, உன்னம், வேலம் ஆகிய மரங்களில் பொருந்தி ஓசையிட்டதாகக் கூறியிருப்பதையும் கவனிக்கவேண்டும். உன்னத்தின் கவட்டிலும் வேலத்தின்

அடிமரத்திலும் சிள்வீடு பொருந்தி யிருந்ததைக் கண்டு கூறிய சங்கப் புலவர்களின் இயற்கை அறிவு (Nature Study) போற்றத் தக்கதாகும்.

திணைமாலை நூற்றைம்பது என்ற தொகை நூலிலும் சிதடி என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. தேவாரத்தில் இப்பூச்சி எறடி என்றழைக்கப்பட்டுள்ளது.

**'செல்பவோ சிந்தனையும் மாகாதா னெஞ்செரியும்**
**வெல்பவோ சென்றார் வினைமுடிய நல்லாய்**
**இதடி கரையுங்கல் மாபோலத் தோன்றிச்**
**சிதடி கலரந் திரிந்து.'** — *தி. மா. நூ. 83*

காட்டெருமைகள் மேயும் காட்டில் சிள்வண்டுகள் ஓசையிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. பிற்கால நூல்களி லும் சிள்வீடு கூறப்பட்டுள்ளது.

**'நெல்லிமல்கி கல்லுடைப்பப் புல்லிலை யார்ந்து—அதர்வாய்ச்**
**சில்லி சில்லென் றொல்அறாத சிங்கவேள் குன்றமே'**
—*பெரியதிருமொழி. 8–6*

**'சிறுபுன் சில்லி நெடுவிளி யானா**
**மரம்பயில் கானத்து பரற்புறங் கண்ட**
**விடியா நெடுநெறிச் செல்லாப் புடையது**
**முல்லை வகுந்திற் போகிப் புல்லருந்தி'**
—*ஆசிரியமாலை (1242)*

பிற்கால நூல்களில் சிள்வீடு என்ற பூச்சி 'சில்லி' என்றழைக்கப்பட்டதைக் கவனிக்க வேண்டும். ஆந்திர நாட்டில் வைணவரின் திருக்கோயிலையுடைய குன்றமான சிம்மாச்சலத்தில் சிள்வீடு 'சில்' என்று ஒல் அறாது ஓசை யிட்டதாகப் பெரிய திருமொழி கூறுவது அரிய செய்தி யாகும். அதனால் சில்லி என்றழைக்கப்பட்டது. 'ஒல் அறாது' என்பது ஓய்வே இல்லாது (monotonous) ஓசை யிடுவதைக் குறிக்கும்.

நெல்லி மரம் மல்கிக் 'கல் உடைப்ப' இருந்த வழி பாலைப் பாங்கான வழியாகும்.

இந்த வழியில் சென்று சிம்மாச்சலத்தை அடையலாம். சிம்மாச்சலக் காட்டில் சிள்வீடு இடையறாது ஓசையிடுகின்றது.

சிம்சாச்சலக் குன்றில் உள்ள காட்டில் சிள்வண்டு ஓசையிட்டதை நானே நேரில் கண்டு கேட்டுள்ளேன். சிள் (சில்) என்று ஓசை விடுப்பதால் சிள்வீடு என்று பெயர் பெற்றது. சில் என்று ஓசையிடும் தாரா என்ற பறவையைச் சில்லித் தாரா என்று இன்று அழைப்பதைக் காணலாம்.

இந்தக் காட்டில் செண்பகப்பூ நிறையக் கிடைக்கின்றது. அதைத் தட்டில் வைத்து விற்கின்றனர்.

நான் சில ஆண்டுகளுக்கு முன் சென்றபோது ஒரு தமிழ்நாட்டு ஐயங்கார் பார்ப்பன மரபினர் திருப்பாவை பெரிய திருமொழி முதலிய நாலாயிர திவ்ய பிரபந்தப்' பாடல்களை ஓதிக் கொண்டிருந்தார். நான் அவரை வினவியபோது, அவருக்குத் தமிழ்மொழி தெரியவில்லை என்பது தெரிந்தது. தெலுங்கு மொழி எழுத்தில் தமிழ்ப் பாட்டை எழுதி ஓதினார்.

இடைக்காலத்தில் இந்த வைணவக் கோயிலில் புகுந்த தமிழ் உபயவேதம் இன்றும் இருப்பது வியப்புக்குரியதே. ஆசிரிய மாலையில் பொருத்தமாகச் 'சிறுபுன் சில்லி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிள்வீடு சிறிய புல்லிய பூச்சிதான். ஆனால், அது விடும் பெரிய ஓசையால் பெரிய தன்மை பெறுகின்றது.

சிறிய, புல்லிய சில்லி நெடுவிளியை ஆனாது செய்வதாகக் கூறியது அரிய செய்தியாகும் நெடும் விளியை இடையறாது செய்வதாகக் கூறியது இயற்கைச் செய்தியாகும். சிள்வீட்டை Cicada என்று ஆங்கிலத்தில் அழைப்பர் சிள்வீடு அறிவியலில் Platy Pleuara Octoguttata Platy Pleuara Mackironi, Pomporriafusca, Hmcleys-thoraca ஆகியவைகளைச் சேர்ந்ததாகும்.

# 24 எறும்பு

'எறும்பு அளையிற் குறும்பல் களைய'

—குறுந்தொகை 12

'எறும்பு மூசா இறும்பூது மரபில்'

—பதிற்றுப்பத்து 30

'பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி நாரை உரைத்தலிற் செந்நெல்
விரவு வெள்ளாசியின் தாஅம் ஊரன்'

—நற்றிணை 180

'பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி எருமை கதிரொடு மயக்கும்'

—ஐங்குறுநூறு 99

'கோடை நீடலின் வாடுபுலத்துஉக்க
சிறுபுல் உணவு நெறிபட மறுகி
நுண்பல் எறும்பு கொண்டு அளைச்செறித்த
வித்தா வல்சி வீங்குசிலை மறவர்'

—அகம். 377

குறுந்தொகையில், எளிதில் காணக்கூடிய எறும்பு கூறப்பட்டுள்ளது இந்த எறும்பின் பல வளைகளைப் போலச் சுனைகள் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

அகநானூற்றில், எறும்புகள் கோடைக்காலத்தில் உதிரும் புல்லரிசியை வளையில் சேக்ரித்து வைத்ததாயும் அதை மறவர் எடுத்து உண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. எறும்பு வளையிற் சேர்த்த புல்லுணவு மறவர்க்கு 'வித்தாவசி' யாயிற்று. இந்த எறும்புகளை Harvester ants என்று ஆங்கிலத்தில் (அறுவடை எறும்பு) அழைப்பர். அறிவியலில் Phaidals குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.

சங்க நூல்களில் இரண்டு பாடல்களில் முயிறு என்ற எறும்பைப்பற்றிக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். முயிறு இலைகளைச் சேர்த்து தைத்துக் கூடுகட்டும். இந்த எறும்பின் முட்டைகளிலிருநது நூலை எடுத்து இலைகளை நூலால் தைத்துக் கொள்கின்றன.

'குஞ்சுப் புழுக்களை நெய்யும் குழல் (Shuttle) போல் விடுத்தும் வாங்கியும் கூடு தைக்கின்றது.

The Observation of Deflain and others had proved that silk is provided by the larvae of the species concerned They are held by workers of the species and used as if they are shuttles in weaving the silken thread of the nest.

பலா மரத்தில் கூடு கட்டும் முயிற்றெறும்புக் கூட்டை நாரை கலைத்ததால் முயிறுகளும் மட்டைகளும் கீழே உதிர்ந்தன. அது வெள்ளை அரிசியும் செந்நெல்லும் உதிர்ந்தது போலிருந்தது என்று நற்றிணை கூறியுள்ளது. முயிறு சிவப்பாக இருக்கும் ஆதலின் செந்நெல்லுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

முயிற்றை ஆங்கிலத்தில் Red weaver ant என்றும் அறிவியலில் Oecophylla Smardigna என்றழைப்பர். மற்ற பெரும்பான்மையான எறும்புகளை Simaruforigra Solenasis geminate, Caruponatus Cornpressuss Componatus Merdase என்றும் அறிவியலில் அழைப்பர்.

# 25 சிலம்பி

'சங்க நூல்களில் சில பூச்சிகள் கூறப்பட்டுள்ளன. அவைகளில் சிலம்பியும் ஒன்றாகும்.

'அலந்தலை ஞெமையத்து வலந்த சிலம்பி
ஓடைக் குன்றத்துக் கோடையொடு துயில் வர'

— அகம். 111

'சிலம்பி வலந்த வறுஞ்சினை வற்றல்
அலங்கல் உலவை அரிநிழல் அசைஇ

— அகம். 199

'இலைஒழிந்து உலறிய புன்தலை உலவை
வலை வலந் தனைய ஆகப் பலவுடன்
சிலம்பி சூழ்ந்த புலங்கெடு வைப்பின்'

— அகம். 293

'துணங்கை பூதம் துகிலுடுத்து அவைபோல்
சிலம்பி வானூல் வலந்த மருங்கிற்'

— பெரும்பாணாற்றுப்படை, வரிகள் 235-236

'செங்கேழ் வட்டஞ்சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க'

— நெடுநல்வாடை, வரிகள் 58-59

'கொலைவல் வேட்டுவன் வலைபரிந்து போகிய
கானப் புறவின் சேவல் வாய்நூல்
சிலம்பி அம்சினை வெரூஉம்'
அலங்கல் உலவைஅம் காடுஇறந்தோரே'

— நற்றிணை 189

'அலங்குகுலை ஈந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில் பொதி பவளம் ஏய்க்கும்'

ஐங்குறுநூறு, மிகைப். 2

'பொறித்த போலும் புள்ளி எருத்தின்
புன்புறப் புறவின் கணநிரை அலற
அலந்தலை வேலத்து உலவை அம்சினை
சிலம்பி கோலிய அலங்கற் போர்வையின்'

— பதிற்றுப்பத்து 39 12- 13

'பால்கடை நுரையின் பரூஉ மிதப்பு அன்ன
வால்வெண் தெவிட்டல் வழிவார் நுணக்கம்
சிலம்பி நூலின் நுணங்குவன பாறி

— அகம் 224

சங்க நூல்களில் சிலம்பி என்ற பூச்சி சில பாடல்களில் கூறப்பட்டுள்ளது. தற்காலத்தில் எட்டுக்கால் பூச்சி யென்றழைப்பர். அகநானூற்றில் (111) ஞெமை மரத்தில் (Anogeisus latifolia) சிலந்தியின் வலை இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பெரும்மரம் இலையுதிர்க் காடுகளில் (Deciduos forests) வளர்வது. ஆகவே இச் சிலம்பி இலையுதிர்க் காடுகளில் வளர்வாகத் தெரிகின்றது.

அகநானூறு 199 ஆம் பாடலும் இதே சிலம்பியைக் கூறுவதாகத் தெரிகின்றது. அகநானூறு 293 ஆம் பாடல் 'இலையொழித்த மரக்கிளைகளில்' வலை பின்னியது கூறப்பட்டுள்ளது. பெரும்பாணாற்றுப்படையில் துகிலிற்கு சிலந்தி வலை உவமிக்கப்பட்டுள்ளது.

நெடுநல் வாடையில் வீட்டில் வாழும் சிலம்பி கூறப்பட்டுள்ளது. நற்றிணையில் வேட்டுவன் போட்ட வலையிலிருந்து தப்பிய புறா கருவேல மரத்தில் சிலம்பியால் கட்டப்பட்ட வலையைக் கண்டு அஞ்சுவதாகக் கூறப்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்தில் புள்ளிப்புறா வேலமரத்தில் கட்டிய சிலம்பி வலைகளைக் கண்டு அலறினதாக்க் கூறப் பட்டுள்ளது. நான் வேல மரக்காடுகளில் சிலம்பி வலை நிறைய மரத்தில் இருப்பதைக் கண்டுள்ளேன். இதில் குறிப்பிடத்தக்க செய்தி அதே வேலமரக்காட்டில் புள்ளிப் புறா இருப்பதை அடிக்கடி நானே கண்டிருக் கின்றேன். இச்செய்தியைச் சங்கப் புலவர்கள் இரு பாடல் களில் கூறியிருப்பதைப் போற்றாமல் இருக்க முடியாது.

ஐங்குறுநூற்றில் (மிகை 2.) சிலம்பி வலை பற்றி ஓர் அழகிய உவமை கூறப்பட்டுள்ளது.

சிலம்பி குற்றீச்ச மரங்களின் அடியில் மண்ணைத் தொட்டு வலை பின்னுவதை நான் பார்த்திருக்கின்றேன். குற்றீச்ச மரத்தின் பழங்கள் முதிரா முன்னர் சிவப்பு நிறமாயிருக்கும். முதிர்ந்ததும் கருமையாகிவிடும். சிலம்பி வலை ஈச்சங்குலையைச் சுற்றி இருப்பது துகிலில் பவளத் தைப் பொதித்து வைத்தாற்போல இருந்ததாகக் கூறப் பட்டுள்ளது. இந்தச் சிலம்பி (Hippusa panterina) ஆக இருக்கலாம்.

நான்கு வகைச் சிலம்பியைப் பற்றிச் சங்க நூல்கள் கூறியுள்ளது தெரிகின்றது. கல்கத்தாவில் உயிரியற் கழகத்திற்கு (ZoolOgical survey of india) இந்த நான்கு சிலம்பியின் அறிவியற் பெயர்களைக் கேட்டு எழுதி யுள்ளேன். ஆனால், இச் சிலம்பி, பூச்சிகளைப் பிடித்து அனுப்பினால் ஆய்வு செய்து பெயர்களை அனுப்புவதாக எழுதினர்.

சிலம்பியை இக்காலத்தில் சிலந்தி என்றழைப்பதுண்டு சிலம்பியைப் பொதுவாக Araneus sndicus என்று அறிவி யலில் அழைப்பர். ஆங்கிலத்தில் Spider என்றழைப்பர்.

# 26 ஞிமிறு

'அண்ணல் மழகளிறு அரிஞிமிறு ஒப்பும்'
பதிற்றுப்பத்து 12: 12

'வரிஞிமிறு இமிரும் மார்புபிணி மகளிர்'
பதிற்றுப்பத்து 50 : 18

'அருமணன் முற்றத்து அரிஞிமிறுஆர்ப்ப'
மதுரைக்காஞ்சி, வரி 684

'நெடுநிலை யாஅம் ஒற்றி நனைகவுள்
படிஞிமிறு கடியும் களிறேறு'
அகம். 59

'வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதல் பொலிந்த வயக்களிற்று ஒருத்தல்'
அகம். 78

'மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன்
ஆர மார்பின் அரிஞிமிர் ஆர்ப்பத்'
— அகம். 102

'புரிஅவிழ் பூவின கைதையும் செருந்தியும்
வரிஞிமிறு இமிர்ந்து ஆர்ப்ப இருந் தும்பிஇமிரபுஊத'
— கலித். 127

'வரிஞிமிறுஆர்க்கும் வாய் புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத்து ஒழிய'
புறம். 93

'மிஞிறு மூசுகவுள சிறுகண் யானை'

— அகம். 159

'மிஞிறுஆர் கடாஅம் கரந்துவிடு கவுள'

— அகம். 207

'மிஞிறுபுறம் மூசவும் தீம்சுவை திரியாது
அரம்போழ் கல்லா மரம்படு தீங்கனி'

— பதிற்றுப்பத்து 60. 4-5

'புள்ளு மிஞிறு மாச்சினை ஆர்ப்ப'

— பதிற்றுப்பத்து 86-3

'மீன்ஏற்றுக் கொடியோன்போல்
மிஞிறுஆர்க்குங் காஞ்சியும்'

— கலித். 26

'நரம்பின் தீங்குரல் நிறுக்கும் குழல்போல்
இரங்குஇசை மிஞிறொடு தும்பி தாது ஊத'

— கலித். 33

'படியுண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை மிஞிறுஆர்ப்ப'

கலி. 35

'தேன்சிதைந்த வரைபோல,
மிஞிறுஆர்க்குல் கமழ் கடாத்து
அயறுசோரு இருஞ் சென்னிய' புறம். 22

'அணிமிகுவரி மிஞிறார்ப்பத் தேங்கலந்து'

குறிஞ்சிப்பாட்டு 111

ஞிமிறு என்று ஒரு பூச்சி கூறப்பட்டுள்ளது. இந்தப் பூச்சி, யானை மத்தகத்தில் தோன்றும் மதநீரில் ஆர்ப்பதாகப்பெரும்பாலான பாடல்களில் காணலாம். யானைக்கு உண்டாகும் மதநீர் அதன் வாயில் புகுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஒரு வகைப் பூச்சிகள் (moths) மனிதரின் கண்ணிலும் யானைகளின் கண்ணிலும், குதிரைகளின்

கண்ணிலும் வழியும் கண்ணீரையொப்பதாக அறிவியலார் கூறுவர்.

சங்கப் பாடல்களில் பெரும்பாலும் ஞிமிறு அல்லது மிஞிறு யானையின் மதநீரை மொய்ப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

ஒரு சில பாடல்களில் ஆடவர் மார்பை மொய்ப்பதாகக் கூறப்பட்டுள்ளது. யானைகளின் மதநீரை மொய்ப்புதாகச் கூறியது ஆராயத் தக்கது.

யானையின் கண்களில் மொய்க்கும் ஒருவகைப் பூச்சி அருகே முட்டையிடுவதாதவும், அதை யானை தன் வாய்க்குள் தன் துதிக்கையால் தேய்த்து செலுத்துவதாகவும் அந்தமுட்டைகள் வயிற்றில் புழுப்பொரித்து வளர்ந்து யானையின் லத்தியில் வெளிவந்து பூச்சியாக மாறுவதாகவும் அறிவியலார் ஆராய்ந்து கண்டுள்ளனர். யானையின் கண்ணில் மொய்ப்பதாக அறிவியலார் கூறிய பூச்சியே யானை மதத்தை மொய்ப்பதாகச் சங்கப்புலவர் கூறினரென்று தெரிகின்றது. இந்தப் பூச்சியை Pihgasa chlora crenaria என்று அறிவியலில் அழைப்பர். இவ்வாறு மனிதனின் கண்களையும் யானையின் கண்களையும் மொய்க்கும் பூச்சிகள் Geome tridae என்ற குடும்பத்தைச் சார்ந்ததாகும் என்று அறிவியாலார் கூறியுள்ளனர்.

# 27 சுரும்பு

'சுரும்புண விரிந்த பெருந்தண் கோதை' —அகம். 131

'சோலை யடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுள் காந்தள் உண்ணாப் பலவுடன்' —அகம். 152

'சுரும்புஆர்க்கும் குரலினோ டுஇருந்தும்பி இயைபுஊத'
—கலி. 123

'சுரும்பில் ஆய்மலர் வேய்ந்த' —அகம் 136

'சோலை அடுக்கத்துச் சுரும்புண விரிந்த' — அகம் 125

சுரும்புண ஒலிவரும் இரும்புல் கூந்தல்' —அகம் 151

'தண்கயத்து அமன்ற ஒண்பூங் குவளை
'அரும்பலைத்துஇயற்றிய சுரும்பார் கண்ணி'—அகம் 180

'சுரியஇரும் பித்தை சுரும்புபடச் சூடி' —அகம் 213

'சுரும்பிமிர்மலர் கானம் பிறபட' —அகம் 184

அரும்பு முகில் வேங்கை அலங்கல் மென்சினைச்
சுரும்புவாய் திறந்த பொன்புனை நுண்தாது'—அகம் 242

அரும்புஅற மலர்ந்த ஆய்பூ மராஅத்துச்
சுரும்புசூழ் அலரி தைஇ வேய்ந்தநின்
தேம்பாய் கூந்தல் குறும்பல மொசிக்கும்'

அகம் 257

'சுரும்புண மலர்ந்த பெருந்தண் நெய்தல்'

அகம். 290

'சுரும்பார் கூந்தல் பெருந்தோள் இவள்வயின்'

அகம். 319

'சுரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கைச்
சுரும்புஇமிர் அடுக்கம் புலம்பக் களிறுஅட்டு'

நற்றிணை 112

'சுரும்புண விரிந்த கருங்கால் வேங்கை'

நற்றிணை 168

'சுரும்புண மலர்ந்த வாசங் கீழ்ப்பட'

குறுந்தொகை 309

'சுரும்புணக் களித்த புகர்முக வேழம்'

ஐங்குறுநூறு 239

சுரும்பு என்ற பூச்சியைப்பற்றிப் பல சங்கப்பாடல்கள் கூறியிருப்பினும் மலர்களில், தாதுண்ணுவதாகவும் ஊதுவதாகவும் கூறியது தவிர வேறு எந்தச் செய்திகளும் சங்கநூல்களில் கூறப்படவில்லை. அதனால் சுரும்பு எந்தவகைப் பூச்சி என்று அறிவது எளிதாகவில்லை.

கன்னட மொழியில் 'சுருன்ட்பொட்டெ' என்று வண்ணாத்திபூச்சியை அழைப்பதிலிருந்து சுரும்பு வண்ணாத்திப்பூச்சியே (Butter fly) என்று தெரிகின்றது. 'பொட்டெ' என்ற சொல் கன்னடம் முதலிய திராவி மொழிகளில் பூச்சியை குறிக்கும். சுருண்ட வாயிறுப்பு யானையின் துதிக்கை போல (Probosis) இருப்பதால் சுரும்பு என்ற பெயர் வந்திருக்கலாம். தும்பி என்ற பெயர் ஒரு பூச்சிக்கு தோன்றியது அதே காரணத்தால் என்பது கவனிக்கத்தக்கதாகும். பல வண்ணங்களையுடைய இறகுகள் கொண்ட வண்ணத்துப்பூச்சியைத் தவறாக வண்ணாத்திப் பூச்சியென்று அழைக்கின்றனர். தமிழ்

நாட்டில் சில பகுதிகளில் வண்ணாத்திப்பூச்சியை பாப்பாத்தி, மொட்டைப்பாத்தி என்றும் அழைக்கின்றனர்.

சிவந்த நிறமுள்ள அழகிய பெண்ணைக் குடும்பத்தில் பாப்பாத்தி என்றழைக்கும் வழக்கம் சில சாதியினரிடையே இன்றும் உள்ளது. பார்ப்பாத்தியின் மரூஉ அல்ல இப் பெயர். பட்டுப்பூச்சி யென்றும் அழைப்பர். தும்பி என்ற பெயரே பிற்காலத்தில் யானைக்குப் பெயராகியது இக்காரணத்தினால் ஆகும். சுரும்பு என்ற வண்ணாத்திப் பூச்சிக்குடும்பத்தின் அறிவியல் பெயர் Raopaloceoana ஆகும்.

சுரும்பு, தும்பி ஆண்வண்டுகள் என்று நிகண்டுகளும் பிற்கால உரையாசிரியர்களும் கூறுவதற்கு எந்த வித ஆதாரமும் இல்லை. ஒரே பூச்சி வகையில்தான் ஆண், பெண் உண்டு.



# 28 வண்டு

வண்டை மிகப் பல சங்கப் பாடல்கள் கூறியுள்ளன. ஆனால் அப்பாடல்களில் வண்டைப்பற்றி யாதொரு செய்தியும் கூறப்படாததால் வண்டு அறிவியற்படி இன்னபூச்சி என்பது கண்டறிவது கடினமாயிருந்தது.

'மென்சிறை வண்டின் தண்கமழ் பூந்துணர்'

அகம். 41

'பொறிவரி இனவண்டுஆர்ப்ப பலவுடன்'

அகம். 114

'பொறிவரி இனவண்டு ஊதல் கழியும்'

அகம். 162

'கணங்கொள் வண்டின் அஞ்சிறை தொழுதி'

அகம். 204

வண்டுக்கு பொறிவரி இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது மெல்லிய இறகு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தக் குறைவான செய்திகளை வைத்து ஆராய்ந்தால், வண்டு Bumbee bee ஆக இருக்கலாம் ஆனால் உறுதியாகக் கூற முடியாது. வண்டை அறிவியலில் Bombus Oreintalis என்றழைப்பர்.

# 29 பேன்

சங்க நூல்களில் பேனும் பேனின் குஞ்சான ஈரும் கூறப்பட்டுள்ளது.

'இழைவலந்த பஃறுன்னத்து
இடைப் புரைபற்றியப் பிணிவிடாஅ
ஈர்க் குழாத்தோடு இறைகூர்ந்த
பேஎன் பகையென ஒன்றுஎன்கோ'

—புறம். 136

'ஈருடை இருந்தலை ஆரச்சூடி'

—பெரும்பாணாற்றுப்படை, வரி 219

''ஈரும் பேனும் இருந்து இறை கூடி''

– பொருநராற்றுப்படை, வரி 79

பேன் மனிதர் தலைமயிரில் தொந்தரவு தரும் சிறு பூச்சியாகும். புறநானூற்றில் (136) பெண்ணின் தலைமயிர்ச் சந்தில் புகுந்து மயிர்களைப் பற்றி, பற்றுவிடாத ஈர்க்கூட்டம் ஆட்சி கொண்டது எனக் கூறப்பட்டுள்ளது.

ஈர் பேனின் முட்டையிலிருந்து வந்த வளராக் குஞ்சாகும். இதை அறிவியலில் Larvae என்பர்.

பேன் பகையெனக் கூறப்பட்டுள்ளது. ஈரும் பேனும் தலையில் ஆட்சி செய்ய என்று பொருநராற்றுப்படை கூறியுள்ளது.

பேனை ஆங்கிலத்தில் Human Lice என்றும் அறிவியலில் Pediculus Humanus என்றழைப்பர்.

# 30 சிறுபஞ்சமூலத்திலும் பழமொழியிலும் ஐந்து பூச்சிகள்

'வான்குருவிக் கூடரக்கு வாலுலண்டு கோற்றருதல்
தேன்புரிந்தி யார்க்கும் செயலாகா - தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன வென்னார்ஒ ரோவொருவர்க்(கு)
ஒல்காதோர் ஒன்று படும்'

—சிறுபஞ்ச மூலம் 27

இப்பாட்டிற்கு உரை கூறிய விடத்தில், பேரெறும்பு களால் செய்யும் அரக்கும் உலண்டு எனும் புழுக்களால் நூற்கப்பட்ட நூலும் கோல்தருதல் (வேறொரு வகை புழுக்களால் செய்யப்பட்ட) கோற்கூடும் தேனீக்களால் திரட்டப்பட்ட தேன்பொதியும் வான் அறிவினால் மேம் பட்ட என்று சொல்லவும் ஆம். உலண்டு - கோற்புழு என்று கூறப்பட்டுள்ளது. இந்தச் சிறுபஞ்சமூலப் பாடலில், ஒரு குருவியும் நான்கு பூச்சிகளும் கூறப் பட்டுள்ளன. தூக்கணாங்குருவிக் கூடு யாவருக்கும் தெரிந்ததே. அதுவே வான்குருவி என்று கூறப்பட்டுள்ளது. முதுக்குறை குருவி என்ற பெயரே தூக்கணாங்குருவியின் பெயராக, சங்கநூல்களில் வழங்கியுள்ளது. 'கூடரக்கு' என்பது பெண் அரக்குப் பூச்சி சுரக்கும் ஒருவகை கெட்டி யான திரவம் ஆகும். சில பூச்சிகள் இலந்தை போன்ற செடிகளில் வாழ்ந்து உடல் முழுவதும் அரக்கை உண்டு பண்ணுகின்றன. இதை Laceifer lacca என்ற பூச்சி அழைப்பர்.

உலண்டு பட்டுப்பூச்சியின் புழுவாகும். வால் உலண்டு என்பது ஒண்ணிய நூலையுடைய புழுக்கூட்டைக் குறிக்கும்.

'வரியுடல் சூழக் குடம்பைநூறு எற்றில்
போக்குவழி அடையாதுள்ளுயிர் விடுத்தலின்
அறிவுபுறம் போய வுலண்டது போல'

—கல்லாடம் 26 - 28
மூத்த பிள்ளையார் வாழ்த்து.

வரிகளையுடைய தனது உடப்பினைச்சுற்றி நூலினால் கூட்டினைச் சுற்றிக்கொண்டு போவதற்கு வழியமைக்காமல் உள்ளே உயிர்விடுதலின், அறிவு புறம் போய் உலண்டுப் புழுப்போல என்று கல்லாடம் கூறுகிறது கல்லாடம் இயற்றிய காலத்தில் உலண்டுப்புழு வெளியே போக்கின்றி இறந்ததாகத் தவறுதலாகக் கருதினர். அதுவே பட்டுப்பூச்சியாக வெளியே வருவதை அறிந்திலர். பட்டுப்பூச்சியின் கூட்டுப்புழுவே (pupa) உலண்டாகும்.

கோற்றருதல் என்பதற்கு ஒருவகைப் புழுவால் செய்த கோற்கூடு என்று பொருள் கூறப்பட்டுள்ளது. கோற்கூடு என்பது எதுவென்பதை ஆராயவேண்டும். caddis fly என்ற பூச்சியின் புழு கோல்களையும் மணலையும் ஒன்று சேர்த்துக் கூடுகட்டி, புழுவாயிருந்து பின்னர் பூச்சியாகிறது.

இதையே கோற்றருதல் என்று சிறுபஞ்சமூலம் கூறியுள்ளது. கோற்றருதல் என்ற பெயர் சரியா என்ற ஓர் ஐயம் எழுகிறது. தருதல் என்ற சொல் ததரல் என்று இருக்கலாம். ததரல் என்பதற்குச் சுள்ளி என்று பொருள் உண்டு. தருதல் என்பதில் பொருள் இல்லை.

கோல் ததரல் என்றால் கோல் சுள்ளி என்று பொருள் படும். பொருத்தமாகவும் இருக்கும். தேன் புரிந்து என்பது யாவர்க்கும் தெரிந்தது. ஆறு கோணத்தில் பல

அறைகள் கட்டிக் கூடுகள் செய்யும் தேனீயின் திறமை வியக்கத் தக்கதாகும்.

பழமொழி நானூற்றில் மிளகுப்புழு என்றொரு புழு அரிதாகக் கூறப்பட்டுள்ளது.

**'அல்லவையுள் தோன்றி அல அலைத்து வாழ்பவர்**
**நல்லவையுள் புக்கிருந்து நாவடங்க—கல்வி**
**அளவிறந்து மிக்கார் அறிவு எள்ளிக் கூறல்**
**மிளகு உளு உண்பான் புகல்'**

—பழமொழிநானூறு-24.

அல்லவையை அலைத்து வாழ்ந்த அத் துணிவு கொண்டு நல்லவையும் அலைத்து வாழ எண்ணுவாராயின் மிளகின் உளுவை உண்பவன் அடையும் பயனை அடைவர் என்று இப்பாட்டிற்குப் புலவர் இராசமாணிக்கனார் பொழிப்புரை எழுதியுள்ளார். அத்துடன் சாதிக்காய், ஏலக்காய் முதலியவற்றின் உளுவை உண்டவர் பிழைத்தல் அரிதென்பர் என்றும் கூறியுள்ளார். ஆனால் இச்செய்தி உண்மையன்று. மிளகை உளுத்தின்பது உண்மை. இந்தப் பூச்சி நூலார் கண்டுபிடித்துள்ளனர். Pollu beetle or Pepper flea beetle என்ற பூச்சி கேரளத்தில் மிளகை அழிக்கும் புழுவை உண்டுபண்ணும் பூச்சியாகும். இப் பூச்சியின் புழு மிளகைத் தின்று அதை ஓட்டையாக்கி விடுகின்றது. இந்த உளு மிளகுப் பயிர்க்கு மிகுந்த சேதத்தைத் தருகிறது.

மிளகிற்கு ஊறு தரும் நோய்ப் புழுவைத் தெரிந்து வைத்திருந்தமை வியப்பைத் தருகின்றது. இதுபோன்றே நீலகேசி என்ற நூலுக்கு உரை எழுதிய சமய திவாகரர் நெல்லுக்குத் தற்காலம் வரும் நோய்களில் தாட்புழு செம்புநை, உழுநை என்பனவற்றை அக்காலத்தில் கூறியிருந்ததை ஏற்கனவே நான் 'செல்வி'யில் விளக்கியுள்ளேன்.

## துணை நூல்கள்


1) General and Applied Entomology
K. K. Nayar
J. N. Ananthakrishnan
B. V. David
—Tata Magraw Hill Publishing Ltd; New Delhi

2) Insects : M S. Mani National Book Trust.

3) Common insects of India
N. P. Kalyanam,
Asia publishing house.




★

# எமது

# சிறந்த நூல்கள்!

அறிஞர் **பி.எல். சாமி,** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு)

*சங்கநூல்களில் செடிகொடிகள்* ரூ.20.—

" *சில உயிரினங்கள்* 32.—

**அருட்கவி அரங்க. சீனிவாசன்**

*நினைவுப் பயணம்* 45.—

**அறிஞர் அ. வெ. சுப்பிரமணியன்**

The Bangle and The Javelin

(முத்தொள்ளாயிரம்) 35.—

**வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன்**

*வரலாற்றில் ஆரிய வைசியர்* 15.—

*புதுவை மாநிலக் கல்வெட்டுகளில்*

*நாடும் வளநாடும்* 15—

**புலவர் கு. வை. இளங்கோவன்** எம்.ஏ.,எம். எட்.,

*மனம் — ஓர் ஆய்வு* 27.—

*இயற்கை பேசுகிறது!* 18.—

**சி. எம். கணபதி, எம். ஏ.,**

*தமிழக வரலாறும் பண்பாடும்* 25.—

**கொடுமுடி சண்முகப் பிரகதம்**

*ஏரிப்பாசன வரலாறு* 20.—

**வ. செங்குட்டுவன் B.sc., B. Ed., T.T.D.**

| | | |
|---|---|---|
| இங்கர்சால் பேசுகிறார் | | 23 — |
| சிந்தனையாளர் இங்கர்சால் | பாகம்-1 | 25.— |
| ,, ,, | பாகம்-2 | 27.— |
| சிந்தனைச் சிற்பிகள் | | 18.— |

**டாக்டர் ஆ. யோகமூர்த்தி, எம். எஸ்ஸி., பிஎச்.டி.,**

| | |
|---|---|
| எதிர்காலச் சிந்தனை (சுற்றுச் சூழல்) | 40.— |

**ஏ. கே. சேஷாத்திரி, எம். ஏ.,**

| | |
|---|---|
| தஞ்சைப் பெரிய கோயில் (வரலாறு, வண்ண ஓவியங்கள், எண்ணற்ற படங்களுடன்) | 150.— |
| செஞ்சிக்கோட்டை | (அச்சில்) |

**மூ. வளர்மதி எம். ஏ.,**

| | |
|---|---|
| தந்தை பெரியார் கருத்துரைகள்—1 | 15.— |
| ,, ,, —2 | 13.— |

**கே. சௌந்தர்ராஜன், எம். ஏ.,**

| | |
|---|---|
| நூலகத் தந்தை | 18.— |

**புலவர் து. அரங்கன், எம். ஏ., எம். எட்.,**

| | |
|---|---|
| எண்ணக் கோலங்கள் | 12.50 |

**வெள்ளையாம்பட்டு சுந்தரம்**

| | |
|---|---|
| தவத்திரு ஞானியாரடிகள் | 18.— |





நமக்குத் துணை
நல்ல புத்தகங்களே!

புத்தகங்கள் வாங்கிப் படிப்போம்!

நண்பர்களுக்கும் உறவினர்க்கும்
பரிசளிப்போம்!

சிந்திப்பவன் வீடு சிறந்த நூல்நிலையமாகும்!

சேகர் பதிப்பகம், 66, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர், சென்னை-78.



இராஜநாகம் (குட்டி)

வெள்ளநாக.

